விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

# சித்திரவதைகள் தொடர்கின்றன

## சித்திரவதைகளுக்கு எதிரான அமைப்பு சுட்டிக்காட்டு

(லண்டன்)

ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிபுணர்களது திருகோணமலை சித்திரவதை முகாமிற்கான விஜயமும், அது தொடர்பான அவர்களது அவதானிப்புக்களையும் காணாமல்போனோர் விவகாரத்தை கையாளும் இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்த சித்திரவதைகளுக்கு எதிரான மற்றும் முறைமைசார் கொள்கைகளின் பணிப்பாளர் சோனியா சீட்ஸ் வடக்கு கிழக்கில் இன்னமும் சித்திரவதைகள் தொடர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானியாவை மையமாகக் கொண்டு செயற்படும் சித்திரவதைகளுக்கு எதிரான மற்றும் இறைமைசார் கொள்கைகளின் (Freedom for Torture) பணிப்பாளர் சோனியா சீட்ஸ் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்குவந்த பின்னரும் சித்திரவதைகள் தொடர்பாக 8 புதிய முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக

23ஆம் பக்கம் பார்க்க....

### ஐந்து விரல்களிலும் தங்க மோதிரம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கட்சி நிலைவரங்கள் குறித்து உரையாடுவதற்கு அண்மையில் முதலமைச்சர் ஒருவர் வந்திருந்தார்.

அவரது கைவிரல்கள் அனைத்திலும் தங்க மோதிரங்கள் மின்னியுள்ளன.

24ஆம் பக்கம் பார்க்க....

### சுவீடன் அமைச்சர் நாளை யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் மார்க்ரட் வெல்ஸ்ரோம் நாளை யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இவர் நேற்றைய

23ஆம் பக்கம் பார்க்க....

### ஆணொருவரின் சடலம் சுன்னாகத்தில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுன்னாகம் பகுதியில் உள்ள கடையொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம்பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

### இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரசாங்க, அரச அங்கீகாரம் பெற்ற சகல தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பிரிவேனாக்கள் யாவும் இன்று 25ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் தவணைக்காக மீண்டும் திறக்கப்படவுள்ளன.

மேற்படி அறிவித்தலை கல்வியமைச்சு சகல பாடசாலை அதிபர்களுக்கும் முன்னர் தெரியப்படுத்தியுள்ளது. (செ-12)

### தனித் தமிழீழம் அமைய உதவுவேன்



திருச்சியில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய தமிழக முதலமைச்சர் முதல்வர் ஜெயலலிதா இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைவதற்கும், அங்கு தமிழர்கள் முழுமையான சுதந்திரத்துடனும், தன்மானத்துடனும் வாழ்வதற்கும் தான் தொடர்ந்து பாடுபடப் போவதாகக் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் முற்றிலும் அமைதி நிலவி தமிழர்களுக்குப் பாதுகாப்பு நிலவும் சூழ்நிலை உரு

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் கொள்ளையில் ஈடுபட்ட பெண் உட்பட நால்வர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த குழுவொன்றை யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பதில் பொறுப்பதிகாரி எஸ்.ஜ சிறிகஜன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளனர். இக் கைது சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

23ஆம் பக்கம் பார்க்க....

## வாள்களுடன் நின்ற இளைஞர்கள் பொலிஸாரை கண்டதும் தப்பியோட்டம்

### சந்தேகத்தின் பேரில் வேறு சிலர் கைது

(யாழ்ப்பாணம்)

வாள்களுடன் வீதியில் நின்ற இளைஞர்களை கைது செய்ய யாழ். பொலிஸார் சென்றபோது அவர்கள் அங்கிருந்து தப்பி சென்றதனை அடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமாக நின்ற வேறு இளைஞர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை கச்சேரி நல்லூர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியில் வாள்கள் பொல்லுகளுடன் இளைஞர் குழு ஒன்று நிற்பதாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. தகவலையடுத்து உடனடியாகவே அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் குறித்த பகுதியில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

எனினும் பொலிசார் சம்பவ இடத்திற்கு வருவதனை கண்டதும் மோட்டார் சைக்கிள்களில் சமூக விரோத கும்பல் தப்பிசென்றுள்ளது. இந்நிலையில் பொலிசார் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலில் வீதிகளில் சந்தேகத்துக்கிடமான முறை

23ஆம் பக்கம் பார்க்க....

### நிலாவரை கிணற்றின் 152 அடி ஆழத்திலிருந்து முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வரலாற்று பிரசித்தி வாய்ந்த புத்தூர், நிலாவரை கிணற்றில் பாய்ந்ததால், நீரில் மூழ்கி காணாமல் போயிருந்த முதியவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்டார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் முன்னாள் தளபதி ராம் நேற்றுக் காலை வானில் கடத்தப்பட்டார்

### மனைவி பொலிஸில் முறைப்பாடு



(மட்டக்களப்பு)

புனர்வாழ்வு பெற்று விடுதலையாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள தளபதி ராம் என்பவரை திருக்கோவில் தம்பிலுவில் உள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுக்காலை இனம் தெரியாதவர்களினால் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையுடன் சுதந்திர வர்த்தகம் உடன்படிக்கைக்கு சீனா ஆர்வம்

### தூதுவர் சியான் லியாங் தகவல்

(கொழும்பு)

சீனா மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையில் விரைவில் இடம்பெறவுள்ள பேச்சுக்களின் போது சுதந்திர வர்த்தக உடன்பாடு தொடர்பிலான வரைபு இறுதி செய்யப்படவுள்ளது.

இது தொடர்பில் தகவல் வெளியட்டுள்ள கொழும்பில் உள்ள சீனத

24ஆம் பக்கம் பார்க்க....



### ஐரோ.அமைச்சரவை அனுமதித்தாலே மீன் ஏற்றுமதிக்கான தடை நீங்கும்!

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்னரே, இலங்கையின் கடல்சார் உற்பத்திப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தடை நீக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடல்சார் உற்பத்திப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த வியாழக்கிழமை நீக்கியுள்ளதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதன்படி இலங்கையின் கடல்சார் உற்பத்திப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியுள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## முஸ்லிம்களுக்கான தேவை என்ன என்பதை வடக்கு மாகாண சபை சொல்ல வேண்டியதில்லை

### அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்-ரிசாட்



(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு என்ன தேவை என்பதை வடமாகாண சபை கூற முடியாது. அதை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள் பார்த்துக் கொள்வோம் என வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் சதொச விற்பனை நிலையத்தின் 317ஆவது கிளையினை திறந்து வைத்த பின் ஊடகவியலாளர்

24ஆம் பக்கம் பார்க்க....

## மது அருந்திய அறுவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் பொது இடங்களில் சட்ட விரோதமாக மதுபானம் அருந்திய 6 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பேருந்து நிலைய வீதிக்கு அருகில் வைத்து நேற்று இரவு 7 மணியிலிருந்து 8 மணிவரையான நேரப்பகுதியிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


**Holy Family Convent, Jaffna**
**Past Pupil's Association**
**Annual General Meeting, 2016**

All members of the above association are invited to the **Annual General Meeting**, which will be held on the **30th of April, 2016 (Saturday), at 3.30 pm in the school hall.**


All members are kindly requested to renew their membership (membership fee: Rs.100/-) during the annual general meeting.
Past pupils who wish to join the association may do so at the beginning of the meeting.

Principal
J/Holy Family Convent,
Jaffna.

Secretary
Past Pupils' Association
Holy Family Convent, Jaffna.

(4298)


# மரண அறிவித்தல்



## கிட்டிணன் சந்திரசேகரம்

தோற்றம் 12.06.1949 — மறைவு 24.04.2016

கூவில் புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் சந்திரசேகரம் நேற்று (24.04.2016) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் அமரர் கிட்டிணன்-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் நடேசு- பூரணம், தம்பதிகளின் அன்பு மருமகனும், தனபாக்கியம் அவர்களின் அன்புக கணவரும், தயாநிதி (லண்டன்), கிருஷ்ணராஜா (லண்டன்), தயாபரன் (பிரான்ஸ்), ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), ராஜினி, தயாளினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொன்னையா, சிவப்பிரகாசம், அமரர் சிவபாக்கியம், அமரர் இலட்சுமி, அமரர் நற்குணம், விஜயரட்ணம், கோபாலன் (பிரான்ஸ்), சற்குணம், மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அமரர் வாணி, தர்சினி (லண்டன்), சுகந்தா (பிரான்ஸ்), சுபாஜினி (பிரான்ஸ்), கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்மி, சஞ்சய், சயனி, ஹரிஷ், சந்தோஷ், அபிரா, சமீரா, நிஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் குணபாக்கியம், ஞானபாக்கியம், இராசதுரை, விசயதுரை, றங்கநாதன், விக்கினேஸ்வரன், கணேசலிங்கம், விஜயபாக்கியம், வதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2016) திங்கட்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லபபடும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-4426) தகவல் : குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



கடந்த 21.04.2016 அன்று அமரத்துவம்
அடைந்த எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி **சந்திராதேவி திருவாகரன்**
அவர்களின் அன்பு மாமனார்,

**அமரர்**

## சின்னத்தம்பி மருதப்பு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
கிளி/ இராமநாதபுரம் கிழக்கு,
அ.த.க பாடசாலை இராமநாதபுரம்.

(சி-4425)

# மரண அறிவித்தல்

திருமதி

## தங்கரெத்தினம் சிவசுந்தரம்

(பழம் அக்கா – N.S.S உரிமையாளர்)

**மலர்வு : 18.02.1946** **உதிர்வு : 22.04.2016**



யாழ்.வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கரெத்தினம் சிவசுந்தரம் (பழம் அக்கா) அவர்கள் கடந்த 22.04.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (சம்மாட்டியார்) - பாலமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னமாமயில் தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசுந்தரம் அவர்களின் அன்பு மனையும், சோபனா (நோர்வே) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பகவதிஅம்மா மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சக்திவேல் (கண்ணன் - நோர்வே) அவர்களின் பாசமிகு மாமியாரும், கீர்த்தனன் (நோர்வே), அபிநயா (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (26.04.2016) செவ்வாய்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் (ஆலடி ஒழுங்கை வல்வெட்டித்துறை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
சாந்தகுமார் - 077 912 9055
சீலன் - 077 281 4313

(4299)

தகவல்:
குடும்பத்தினர்

### வடக்கில் வெடிபொருட்களை அகற்ற

# ரோபோக்களுடன் வரும் அமெரிக்கக் கடற்படை

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதியில் குளங்கள், கடலேரிகளில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வெடிபொருட்களை அகற்றும் பணியில் இலங்கை கடற்படையுடன் அமெரிக்க கடற்படையின் ரோபோ தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படவுள்ளதாக இலங்கை கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாரஇதழ் ஒன்றுக்குத் தகவல் வெளியிட்டுள்ள அவர், இதற்கென, அமெரிக்க கடற்படையின் சிறப்புக் குழுவொன்றும் இலங்கை வரவுள்ளது.

இலங்கை கடற்படையினருக்கு, அமெரிக்க கடற்படையினர் இரண்டு கட்டங்களாக, நீருக்கு அடியில் காணப்படும் வெடிபொருட்களை அகற்றும் பயிற்சிகளை வழங்கியிருந்தனர். கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இலங்கை வநத அமெரிக்க கடற்படையின் சிறப்புக் குழுவொன்று, கைவிடப்பட்ட வெடிபொருட்களை அகற்றுவது தொடர்பாக ஒரு வாரகாலம், இலங்கை கடற்படையின் சுழியோடிகளுக்குப் பயிற்சிகளை அளித்திருந்தது.

அதேபோன்று இந்த மாதம் முதல் வாரத்தில், இலங்கை கடற்படையின் 20 பேர் கொண்டகுழுவினருக்கு குவாமில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தில், 10 நாள் பயிற்சிகள் அளிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க கடற்டையினரிடம், பயிற்சி பெற்ற இலங்கை கடற்படையினரும், அமெரிக்க கடற்படையினரும், இணைந்தே, வடக்கில் நீர் நிலைகளில் கைவிடப்பட்டுள்ள வெடிபொருட்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ரோபோ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் பியல் த சில்வா இந்த நட வடிக்கைக்குத் தலைமை தாங்கவுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

## இனவாதத்தைத் தூண்டி நாட்டை சீரழிக்க முயற்சி

### அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் தமது சமூகம் சார்பாக குரல் கொடுக்கும்போது அதனை இனவாத அமைப்புகள் எதிர்ப்பது வேடிக்கையாக உள்ளது. பொதுபலசேனா, ராவணா பலய மற்றும் சிங்கள ராவய போன்ற இனவாத அமைப்புகள் மீண்டும் இனவாதத்தை தூண்டி நாட்டை சீரழிக்க முனைகின்றன. எனினும், இந்த அரசாங்கத்தினால் இனவாத சக்திகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்பட மாட்டாது என அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் பிரிவினைவாதத்தைத்தூண்டி ஆயுதப் போராட்டத்தை தோற்றுவிக்கும்வகையில்செயற்படுவதாகக்கூறி பொதுபல சேனா, ராவணா பலய மற்றும் சிங்கள ராவய போன்ற அமைப்புகள் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளன. இது தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் சமூகம் 30 வருடகால ஆயுதப் போராட்டத்தினால் தங்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு முயற்சித்தனர். இருந்தபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை. எனவே, யுத்தத்திற்குப் பின்னரான தற்போதைய சமாதான சூழலில் ஜனநாயக ரீதியில் அதனைப் பெற்றுக்கொள்ள எத்தனிக்கின்றனர். அது அவர்களின் ஜனநாயக உரிமையும் கூட.

அத்தலைவர்கள் தமிழ் சமூகம் சார்பாக குரல் கொடுக்கும்போது அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றும் இல்லாவிடில் சிங்கள மக்களை ஒன்றுசேர்த்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் இனவாத அமைப்புகள் கூறியிருப்பதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது பிற்போக்கான முடிவாகும். அவ்வாறு சிங்கள மக்களை இணைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது மீண்டும் நாட்டில் இனவாதத்தைத் தூண்டி கலவரத்தை ஏற்படுவதற்கு பின்னணியாக அமைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### இனவாதத்தைத் தூண்டும்

## வடக்கு- கிழக்கு இணைப்பை மக்கள் ஏற்கவே மாட்டார்கள்

### விஜித ஹேரத் கூறுகிறார்

வடக்கு - கிழக்கை இணைக்கும் யோசனையை எப்போதும் நாட்டு மக்கள் ஏற்கமாட்டார்கள். அத்தோடு இனவாதத்தை தூண்டும் விடயமான இது எப்போதும் நடைபெறாது என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பத்தரமுல்ல கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் இதுவரை காலம் அறவிடப்பட்ட வரியின் அளவைவிட அதிகமாக அறவிட தீர்மானித்துள்ளதோடு புதிதாக சில பொருட்கள் வரி அறவீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், சாதாரண மக்களை இலக்கு வைத்தே இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கம் மக்களை இலக்கு வைத்து செய்யும் குறித்த வரி திட்டம் நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு மக்களை பாதிக்கும் வரி முறை குறைக்கப்பட வேண்டிய ஒன்றே என விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறான அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்தும் தொழிலாளர்களை கௌரவித்தும் தெஹிவளையில் ஜே.வி.பியின் மாபெரும் மேதின கூட்டம் நடைபெறும் என கட்சியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இதன போது தெரிவித்தார். (இ-5)



## குடும்பஸ்தரை காணவில்லை

உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி சபாரத்தினம் ஜெயமோகன் (வயது-45) என்பவர் வீட்டில் இருந்து வேலைக்கு செல்வதாகக் கூறிச் சென்ற நிலையிலேயே காணாமற்போயுள்ளார் என முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## பிராந்திய சபைகளூடாக கூடுதல் அதிகாரப்பகிர்வு

### இந்தியாவைத் திருப்திப்படுத்த நடவடிக்கை

புதிய அரசியலமைப்பின் மூலம் கூடுதல் அதிகாரம் கொண்ட பிராந்திய சபைகள் உருவாக்கப்படலாம் என்று சிங்கள ஊடகமொன்று எதிர்வு கூறியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சமஷ்டி நிர்வாக முறை மற்றும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் என்பவற்றை வழங்குமாறு இந்திய அரசாங்கம் தொடர்ச்சியாக இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வந்தது.

எனினும் அவர் அதற்கு இணங்காது சீனாவின் பக்கம் சாய்ந்திருந்த காரணத்தினால் இலங்கை மீது இந்தியாவுக்கு ஒரு கோபம்இருந்தது.

இந்நிலையில் ஆட்சி மாற்றமும், மத்தல விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்பு துறைமுக நகரம் போன்றவற்றின் நிர்மாணப் பணிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளில் இருந்து சீனாவை அகற்றும் நல்லாட்சி அரசின் வாக்குறுதிகளும் இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்தியிருந்தன.

எனினும் தற்போது போர்ட் சிட்டி நிர்மாணப்பணிகளுக்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளமை, மத்தல விமான நிலையத்தை சீனாவின் பராமரிப்பில் ஒப்படைக்க இணக்கம், பிரதமரின் சீன விஜயம் என்பன இந்தியாவை மீண்டும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளன.

இதனை நிவர்த்தி செய்து இந்தியாவின் அதிருப்தியை போக்கும் வகையில் புதிய அரசியலமைப்பின் ஊடாக கூடுதல் அதிகாரம் கொண்ட பிராந்திய நிர்வாகங்களை உருவாக்கி, தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதாக குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இலங்கையில் டெங்குநோய் தடுப்பூசியை பயன்படுத்துவது குறித்து அரசு கவனம்

டெங்கு நோய் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பிரான்ஸில் டெங்கு நோய்க்கு எதிரான ஊசி மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஊசிமருந்து இலங்கையில் பயன்படுத்த முடியுமா? பொருந்துமா? என்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

இது தொடர்பில் ஆய்வு செய்யுமாறு தொற்று நோய் தடுப்பு பிரிவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுகாதார மற்றும் போசாக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன இது குறித்து பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த ஊசி மருந்து, உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு இந்த மருந்து பொருத்தமாக இருந்தால் அதனை தேசிய மருந்து பொருள் தரநிர்ணய அதிகாரசபையினால் பதிவு செய்யுமாறு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். சுகாதார அமைச்சின் அறிக்கை ஒன்றல் இந்த விடயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# மரண அறிவித்தல்





## சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள்

## சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள்

**(பிரதம குரு யாழ்.வண்.வட கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம், யாழ்.சத்திரம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், நம்பிக்கை பொறுப்பாளர் - செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், போஷகர் - கந்தர்மடம் ஸ்ரீ ஐயப்ப மணிகண்ட சபை, ஆலோசகர் - ஸ்ரீ நாகேந்திரபீடம்)**

கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், காரைநகரை பரம்பரையாகவும் உடைய சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் (நா.பா) என்பவரும் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் சாந்தஸ்வரூபக் குருக்கள் (சாந்தன்) ஆகிய இருவரும் கடந்த 23.04.2016 சனிக்கிழமை அகாலமரணமாகினார்கள்.

பாலசுப்பிரமணியக் குருக்கள் காலஞ்சென்ற நாகேந்திரக் குருக்கள் அமிர்தாம்பிகை அம்மாவின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சங்கானை நாகேஸ்வர ஐயர் சுலோஷனா அம்மாவின் மூத்த மருமகனும், கௌரீஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தஸ்வரூபக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் கௌரீஸ்வரியின் அன்பு மகனும், சண்டிலிப்பாய் ரஞ்சிதானந்தக் குருக்கள் கல்யாணியின் அன்பு மருமகனும், தபஸ்வினியின் அன்புக் கணவரும், சிவஸ்ரீ நல்லூர் தாசக் குருக்கள் (கொக்குவில்), சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக் குருக்கள் (மட்டக்களப்பு), சிவஸ்ரீ நா.பாலேந்திரக் குருக்கள் (கொழும்பு), மீனாம்பாள், காலஞ்சென்ற நாகேஸ்வரி அம்பாளின் பாசமிகு சகோதரரும், பெறாமகனும், மருமகனும், சிவஸ்ரீ வல்லவேஸ்வரக் குருக்களின் சகலனும், சீதாலட்சுமி, காலஞ்சென்ற வசந்தலட்சுமி மற்றும் மலர்ராஜினி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா ஆகியோரின் மைத்துனி, மைத்துனரும், பெறாமகன், மருமகனும், சிவஸ்ரீ ஸ்கந்தரூபக் குருக்கள் (காரைநகர்), சிவஸ்ரீ திருமதி சாந்தஸ்வரூபி, சிவஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள் (மலேசியா), அஜந்தரூபி, ஜெயந்தரூபி, காலஞ்சென்ற சாந்தஸ்வரூபன், பிரம்மஸ்ரீ பாலகணேசன், பாலமயூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவசாமி ஐயர் மற்றும் பவளமல்லிகா (அரியாலை), காலஞ்சென்ற ராதாகிருஷ்ண சர்மா மற்றும் மீனாம்பாள், காலஞ்சென்ற ராமநாத சர்மா மற்றும் நாகேஸ்வரி (நல்லூர்), சிவஸ்ரீ தாமோதரக் குருக்கள், வல்லவாம்பிகை (நீராவியடி), சிவஸ்ரீ ரஞ்சிதானந்தக் குருக்கள், கல்யாணி ஆகியோரின் சம்பந்தியும், சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் (அரியாலை), யசோதா, கிருஷ்ணவேணி, ஜெயபாலக் குருக்கள் (புத்தளம்), பிரம்மஸ்ரீ மாரிஸ்வர சர்மா (நீராவியடி), தபஸ்வினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அத்தானும், அண்ணியும், நாகேந்திர சர்மா, பாலேஸ்வரி, சிவசங்கவி, பிரகதீஸ்வர சர்மா, பிரதாப சர்மா, பாலகௌரி, கஜலக்ஷி, சுந்தரேசமணிகண்ட சர்மா, சபரீகீர்த்தனா, சபரீகீர்த்திகா, சபரீச சர்மா, சதுஸ்டிகா ஆகியோரின் ஆசைமிகு பேரப்பிள்ளைகளும், பெறாமக்களும், மருமக்களும், சிவஸ்ரீ கீர்த்திவாசக் குருக்கள் (ஒட்டுசுட்டான்), சிவஸ்ரீ ஜெயராஜக் குருக்கள் சண்டிலிப்பாய், சிவஸ்ரீ செல்வானந்தக் குருக்கள் (பருத்தித்துறை), கஸ்தூரி திவ்யஸ்வரூபி, பிரம்மஸ்ரீ சனாதன சர்மா ஆகியோர் சாந்தஸ்வரூபனின் மைத்துனர், மைத்துனியும் ஆவார்கள்.

அன்னார்களது ஈமக்கிரியைகள் நாளை (26.04.2016) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆலய நிர்வாக சபையினர், சுவாமிமார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**இல.48, 2-ம் ஒழுங்கை , பிறவுண் வீதி,**
**நீராவியடி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**தொ.பே : 021 222 1123**

(4300)

# இந்தியாவிலிருந்து மோ.சைக்கிளை படகில் கடத்தி வந்த ஆறு பேர் கைது



10 கிலோ புளியும் மீட்பு

இந்தியாவிலிருந்து பருத்தித்துறைக்கு கடத்தி வரப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டதுடன் அதனுடன் சம்பந்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் ஆறு பேரினையும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படும் இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, பருத்தித்துறை இன்பசிட்டிப் பகுதிக்கு இந்தியாவில் இருந்து கஞ்சா கடத்தப்படுவதாக பொலிஸ் புலனாய்வுப்பிரிவுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 10.30 மணிக்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.


இதனையடுத்து பொலிஸார் இன்பசிட்டிப் பகுதியில் சிவில் உடையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் அதிகாலை வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் கரையை அடைந்த படகினைப் பொலிஸார் சோதனை செய்ததில் PY.02 D.9274 இலக்க CT 100 ரக மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டனர். இது இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கஞ்சா பொதிகள் இருப்பதாகநம்பப்பட்டபையினை சோதனையிட்டபோது அதற்குள் பத்துக் கிலோ வரையிலான புளிகாணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கஞ்சாப் பொதிகள் எனத் தெரிவித்து புளிப்பையினை கடத்தல்காரர்கள் கொடுத்தார்கள் அல்லது பொலிஸாரினைத் திசைதிருப்புவதற்காக புளிப் பொதி செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்ததா என்ற கோணத்தில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிர விசாரணை களை மேற்கொ ண்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படும் ஆறுபேர் வல்வெட் டித்துறைப்பொலிஸாரால்கைது செயயப்பட்டுள்ளனர். மேலும்படகு, படகின் வெளி பிணைப்பு இயந்தரம்மற்றும்எரிபொருள்கொள்கலன் ஒன்று என்பன பொலிஸாரால மீகப்பட்டுள்ளன. (இ-60)

# ஈர விழிகளுடன் ஈராண்டுகள்



(4297)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1924.10.13 | 2014.04.19 |

## கண்ணைகைப்பிள்ளை மயில்வாகனம்

திதி: சித்திரை மாத சங்கடஹரசதுர்த்தி (25.04.2016)

அன்புத் தெய்வமே ஆண்டுகள்
இரண்டு போனது அம்மா
எங்களுடன் வாழ்ந்த அழகிய நினைவுகளும்
தங்கள் அன்பும் எம்மை வழிநடத்தி செல்லும்
தங்களை நேரில் காண இயலாது
இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கிறீர்கள்.

இல. 140, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.

மகன் - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## அமரர் புவனேஸ்வரன் கமலாதேவி



யாழ்.கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் இல. 867, ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரன் கமலாதேவி அவர்கள் 24.04.2016 ஞாயிறு அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- மாணிக்கம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து- நாகரத்தினம் தம்பதியரின் அருமை மருமகளும் புவனேஸ்வரன் (முன்னைநாள் பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு கரைச்சி, கிழக்கு சங்கங்கள், சமாதான நீதவான்) அவர்களின் பாசமிகு துணைவியாரும், கமலேசன் (முகாமைத்துவ உதவியாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, ஒலுமடு உப அலுவலக பொறுப் பலுவலர்), தர்மீசன் (Demonstrator- யாழ். மருத்துவபீடம்), மயூரதனி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர் தற்போது ஜேர்மனி), யோதிகா (யாழ். மருத்துவபீட இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் அருமைத் தாயாரும்,

காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், கனகேஸ்வரி, சிவபாதசுந்தரம் மற்றும் விசாலாட்சி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசேஸ்வரி (ஆசிரியர்), மகேஸ்வரன் (இந்திரன்) மற்றும் புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி (கனடா), இராசேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சந்திரேஸ்வரன் (சந்திரன்- மெக்கானிக்) ஆகியோரின் மைத்துனியும், மர்மிதா (ஆசிரியை, மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்), கஜனன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், சப்தகி, கேசிகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வட்டக்கச்சியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (25.04.2016) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

**077 618 1856- புவனேஸ்வரன்**
**077 739 3738- கமலேசன்**
**077 968 0677- யோதிகா**
**077 784 9842- தர்மீசன்**
**004 915 217 571 619- மயூரதனி**


**தகவல்**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ
பாலசுப்பிரமணியக்
குருக்கள்





சிவஸ்ரீ
சாந்தஸ்வரூபக்
குருக்கள்

எமது குருசாமியின் தந்தையாரும் தம்பியாருமான சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ சாந்தஸ்வரூபக் குருக்கள் அவர்கள் அகால மரணமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஐயப்பனை பிரார்த்திக்கின்றோம்.

*சுவாமி சரணம் ஐயப்பா!*

**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்.**

**துஷி சாமி, கவி சாமி,**
**கஜன் சாமி**

# மரண அறிவித்தல்

## அமரர் மோகனசுந்தரம் செல்வராணி



கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மோகனசுந்தரம் செல்வராணி 24.04.2016 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-முத்துக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா- ரத்தினம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற மோகனசுந்தரத்தின் அன்பு மனைவியும், சஞ்ஜீவன் (இலங்கை போ.சபை பஸ் நடத்துநர் கோண்டாவில்), தர்சிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் 25.04.2016 இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோண்டாவில்,**
**தில்லையம்பதி**

(4296)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

“மாசற்ற நீரே குறைவற்ற செல்வம்”




இச்சலுகை 30.04.2016 வரை மட்டுமே

- உங்கள் கிணற்று நீர் பருகுவதற்கு உகந்ததா என்பதில் சந்தேகமா?
- மேலதிக கல்சியம், மக்னீசியம், நைட்ரைட் ஒரு பிரச்சினையா?
- மலத்தொற்று கிருமிகள் போன்ற உயிர்க்கொல்லி நோய்க்கிருமிகள் உங்கள் கிணற்று நீரிலும் இருக்கலாம் என அச்சமா?
- போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான செலவு அதிகமா?
- மேற்குறிப்பிடப்பட்டவை போன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் நம்பிக்கை உத்தரவாதத்துடனான தீர்வு எம்மிடம் மட்டுமே...
- **UV** உடனான **HI-PURE RO** நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் 100% தூய நீரை உங்கள் வீட்டிலேயே பெற்று பயன் பெறலாம்.
- அனைத்து நீர் சுத்திகரிப்பு தொடர்பான சிறந்த தீர்வுக்கு எங்களை நாடுங்கள்.

(4287)

EVER PURE HI-TEC (PVT) LTD
341,K.K.S ROAD ,JAFFNA.
TEL:- 0215677567,0773626230



## ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்கள்

# சிறைக்குள் செல்ல நேரிடும்

## நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

(கொழும்பு)

**யாழ். மாவட்டத்தில் ரவுடித்தனத்திலும் தெருச் சண்டித்தனத்திலும் ஈடுபடும் மாணவர்கள் சிறைத் தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எச்சரிக்கை விடுத்துள்ளார். ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்கள் உயர் கல்விக்காகப் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலை உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ரவுடித்தனம், தெருச் சண்டித்தனம் என்பவற்றில் ஈடுபடும் பிள்ளைகளை கட்டுப்பாட்டில் வைப்பதற்கு சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் உடனடியாகச் செயற்பட வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 90 வீதமான குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்த போதிலும், சில வாள் வெட்டுச் சம்பவங்களுடன் கூடிய, தெரு ரவுடித் தனமும் சில கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

இதனையடுத்து, போதை வஸ்து வழக்கொன்றில் மேல் நீதிமன்றத்தில் பிணை வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணையின் போதே நீதிபதி இளஞ்செழியன் இந்த எச்சரிக்கையையும் பெற்றோருக்கான அறிவுறுத்தலையும் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தனிமனித நலனைவிட சமூக நலனே நீதிமன்றத்திற்கு முக்கியம். எனவே, ரவுடித்தனத்திலும் தெரு சண்டிததனத்திலும் ஈடுபடும் மாணவரகளுக்கு, அவர்கள் மாணவர்கள் என்ற ஈவிரக்கம் நீதிமன்றத்தினால் காட்டப்படமாட்டாது. எனவே, தெரு ரவுடிகளாகச் செயற்படும் பிள்ளைகளை, அவர்களுடைய பெற்றோர்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வர வேண்டும்.

சமூகக் குற்றச்செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒழுக்கத்தில், அவர்கள் இறுக்கமான ஒழுக்க நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டும்.

ஒழுக்கசீலர்களாக மாணவர்களை மாற்றுவதற்கு அச்சப்படும் ஆசிரியர்கள் அச்சமில்லாத இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வது நல்லது. சமூகத்தைக் காப்பாற்றும் பொறுப்பில் இருந்து எந்த அதிபரும் ஆசிரியரும் தவறக் கூடாது.

மண்ணின் எதிர்காலத் தலைவர்களாகவுள்ள மாணவர்கள் சமூக சீர்கேடுகளில் சிக்கி, தங்களுடைய வாழ்க்கையை நாசமாக்கிக் கொள்வதை நீதிமன்றம் அனுமதிக்க முடியாது.

எனவே, ரவுடித்தனத்தில் ஈடுபடும் மாணவர்கள் அதனை உடனடியாகக்கைவிட வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு சிறை வாழ்க்கை நிச்சயம் என்பதை மறந்துவிடக் கூடாது.

யாழ்.மாவட்டத்தில் 90 வீதமான குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்த போதிலும், சில வாள் வெட்டுச் சம்பவங்களும் தெரு ரவுடித்தனமும் கொள்ளைகளும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன.

யாழ்.குடாநாட்டு நீதவான் நீதிமன்றங்கள் வாள்வெட்டு வழக்குகளில் சிறைத் தண்டனைத் தீர்ப்புக்கள் வழங்கி வருகின்றன. அதேநேரம் பாரிய குற்றச் செயல்களுக்கு பிணையில் வெளியில் வரமுடியாத வகையில் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றார்கள். யாழ் மேல் நீதிமன்றம் மரண தண்டனை மற்றும் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை என பாரிய குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கி வருகின்றது. போதை வஸ்து வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்குக் கடந்த ஒரு வருட காலமாக, யாழ் மேல் நீதிமன்றம் பிணை வழங்கவில்லை.

யாழ். குடாநாட்டு சமூகத்தையும் மாணவர்கள் இளைஞர்களையும் போதை வஸது என்ற கொடூரப் பிணியில் இருந்து காப்பாற்றுவதற்காக நீதிமன்றங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் சில நபர்கள் தெரு ரவுடித் தனத்தையும் வாள் வெட்டுக்களையும் கைவிடுவதாக இல்லை.

பெற்றோர் இவ்விடயத்தில் முதல் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றார்கள். தெரு ரவுடித் தனத்தில் ஈடுபடுகின்ற மாணவர்கள், இளைஞர்களுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்று, பெறுமதிமிக்க ஐபோன் என்ற கைத்தொலைபேசி ஒன்றும் பெற்றோர்களினால் வாங்கிக் கொடுக்கப்படுகின்றது. தனது மகன் வெளியில் சென்று என்ன வேலை செய்கின்றான் என்று தெரியாத வகையில் பெற்றோர் காணப்படுகின்றார்கள். இத்தகைய மாணவர்கள், இளைஞர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் நீதிமன்றம் கடும் எச்சரிக்கை செய்கின்றது.

சமூகக் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உடன் கடும் நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

> “ குறிப்பாக பாசையூர் சென்.அந்தனிஸ் விளையாட்டரங்கு, புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டுச்சந்தி, கோப்பாய்ச் சந்தி, கொக்குவில் சந்தி, சுன்னாகம்சந்தி போன்ற இடங்களில் ரவுடிகள் அதிகமாகக் கூடுவதாக தகவல்கள் கசிந்துள்ளன. இந்த இடங்களில் சந்தேகத்திற்கு இடமான முறையில் கூடுபவர்கள் அனைவரையும் கைது செய்து நீதிமன்றில்ஆஜராக்கபொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். ”

ரியூசன் செல்லும் மாணவிகளுக்குப் பின்னால் செல்லும் மாணவர்கள், இளைஞர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அடாவடித்தனம் செய்யும் தெரு ரவுடிகளை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக மாலை 6 மணியில் இருந்து 9 மணிவரையில் வீதிகளில் சட்டவிரோதமாகக் கூடும் இளைஞர்களைக் கைது செய்து அலைந்து திரிவோர் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜராக்க வேண்டும்.

குற்றச் செயல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பிரதேசங்கள், சமூகக் குற்றச் செயல்களின் மையங்கள் என்ற சந்தேகத்திற்குரிய இடங்களில் பொலிஸ் சைக்கிள் ரோந்துகளை நடத்தப்பட வேண்டும். கண்காணிப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக மாலை 6 மணியில் இருந்து இரவு 9 மணி வரையில் பொலிஸ் வாகன ரோந்துகளை அதிகரிக்க வேண்டும். யாழ்.இந்துக் கல்லூரி சுற்றாடல் பகுதி முழுநாளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

பிரபல கல்லூரிகளில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் ரவுடித் தனத்தில் ஈடுபடக் கூடாது. வாள் வெட்டு சம்பவங்களில் சம்பந்தப்படக் கூடாது. வீதிகளில் மாணவிகளைப்பின்தொடரக்கூடாது. தமது எதிர்கால வாழ்க்கை நாசமாகும் வகையில் சட்ட விரோத போதை வஸ்து பாவனை மற்றும் போதை வஸ்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

குற்றச் செயல்களில் சம்பந்தப்படுகின்ற காரணத்திற்காகக் கைது செய்யப்படும் எந்த ஒரு மாணவனுக்கும் நீதிமன்றத்தினால் பரிவு இரக்கம் காட்டப்படமாட்டாது. எதிர்காலத்தில் பல்கலைக் கழகத்திற்குக் கூட செல்ல முடியாத வகையில் சிறைத் தண்டனை தீர்ப்புக்கள் வழங்கப்படும்.

எனவே, குற்றச் செயல்களில் ஈடுபடும் தமது பிள்ளைகளை சம்பந்தப்பட்ட பெற்றோர்கள் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நீதிமன்றமும் பொலிஸாரும் தெரு ரவுடித்தனத்தைக் கட்டுப்படுத்துவார்கள். அது அவர்களின் வேலை என கூறி சமூகப் பொறுப்புள்ளவர்களும் அரசியல்வாதிகளும் ஒதுங்கியிருக்கக் கூடாது என பாதிக்கப்பட்டவர்களும், சமூக விரோதச் செயற்பாடுகளினால் அச்சமடைந்துள்ள பொதுமக்களும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

குற்றச் செயல்களினால் சமூகத்தில் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக உரிய இடங்களில் உரிய வேளைகளில் குரல் கொடுத்துச் செயற்படுவதற்கு அரசியல்வாதிகள், சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் முன் வர வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

சமூகக் குற்றச்செயல்கள் காரணமாக அச்சமடைந்து அன்றாடம் அவல நிலைக்கு மக்கள் ஆளாகுவதைப்பொறுப்போடு செயற்படுவதற்கு அரசியல்வாதிகளும், சமூக பொறுப்புள்ளவர்களும், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை நல்வழிப்படுத்துவதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபட முன்வர வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வடக்கிலுள்ள கள் விற்பனை நிலையங்கள் அனைத்தையும் நவீனப்படுத்த நடவடிக்கை

வடக்கு மாகாணத்தில் உள்ள கள் விற்பனை நிலையங்கள் அனைத்தும் நவீனமயமாக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை வளத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ள குடும்பங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு செயற்றிட்டங்கள் பனை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச் செயற்றிட்டங்களில் ஒன்றாக வடமாகாணத்தில் உள்ள கள் விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதற்கட்டமாக இந்த வருடம் வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு கள் விற்பனை நிலையங்களை தெரிவு செய்து தலா 4 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் உள்ளூர் வளத்தினை மேம்படுத்துவதோடு அந்நிய செலாவணியை அதிகரிக்கவும் முடியும்.

மேலும் தென்னிலங்கையில்இருந்து வரும்கலப்படமான உற்பத்திகளை நிறுத்தி இங்கு உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாக கொண்டே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு படிப்படியாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து கள் விற்பனை நிலையங்களும் நவீனமயப்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சைவ வித்தியா விருத்திச்சங்க புதிய கட்டடத்திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சைவச் சிறுவர் இல்லம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமை தாங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன் முதன்மை விருந்தினராகவும் யாழ். பல்கலைக் கழக வணிக பீட முகாமைத்துவக் கற்கைகள் பீட பீடாதிபதி, பேராசிரியர் தி.வேல்நம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர் என சைவ வித்தியா விருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (இ)

# ஜனாதிபதி, பிரதமர், முதலமைச்சர்

## மூவருக்கும் இடையிலான சந்திப்பு 28 ஆம் திகதி இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக் கிடையில் இடம்பெறவிருந்த சந்திப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பு மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்புவிடுத்துள்ளதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண சபையின் 49 ஆவது அமர்வின் போது தெரிவித்திருந்தார்.

இதில் பிரேரணைகள் குறித்த விவாதம் இடம்பெற்ற போது, வடமாகாணத்தில் சட்டவிரோதமான காணி சுவீகரிப்புக்கள் நல்லாட்சி அரசாங்கத்திலும் நடைபெற்று வருகின்றது. ஆணைக் கோட்டை கூழாவடி பகுதியில் காணிகள் அளப்பதற்கு நில அளவையாளர்கள் முற்பட்ட போது, அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் அலுவலகமும் முற்றுகையிடப்பட்டது.

எனவே, வடமாகாணத்தின் காணி மற்றும் சட்டத்தினை கையாள்வதற்கு வடமாகாண முதலமைச்சர் இருக்கின்றார் எனவே, காணி சுவீகரிப்பினை நிறுத்துவதற்கு உடனடியாக ஜனாதிபதிக்கு தெரிவிக்குமாறு வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரியிருந்தார்.

அதன்பின்னர், வட மாகாண முதலமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது, வடமாகாண காணி பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்த கலந்துரையாடலின் போது, காணி சுவீகரிப்பு மற்றும் காணிப்பிரச்சினைகள் குறித்த ஜனாதிபதியின் கவனததிற்கு எடுத்துக் கூறுவதறகு, உறுப்பினர்களிடம் இருக்கும் தரவுகளைகைய ளிக்குமாறும் சட்டத்திற்கு புறம்பான காணிகள் எடுக்கப்படுகின்ற விடயம் பற்றியும், அதன் பாரதூரங்கள் பற்றியும் எடுத்துக் கூறவுள்ளதாக முதலமைச்சர் தெரி வித்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 18 ஆம் திகதி நடைபெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த சந்திப்பு எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## கஞ்சாவுடன் மூவர் கைது

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா விற்பனை செய்வதாக பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைக்கப் பெற்றதன் பேரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தச்சோதனையில்இந்தக்கைதுகள் இடம்பெற்றுள்ளன.

ஏறாவூர் மீராகேணியில் உள்ள இரண்டு வீடுகளில் மறைந்திருந்த முறையே 32 வயதான சந்தேக நபர் ஒருவரிடமி ருந்து 3000 மில்லி கிராம் கஞ்சாவும் 40 வயதான மற்றொரு நபரிடமி ருந்து 3100 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்ட தோடு அதனை தம்வசம் வைத்திருந்த அந்த நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மிச்நகர் கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து 2220 மில்லிகிராம் கஞ்சாவுடன் 21 வயதான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:41<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: கனடா குடியுரிமை<br>தொ.இ: B/5800 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 37<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/அரசதொழில்<br>எதிர் பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/1852 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 6.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BED/ஆசிரியர்<br>தொ.இ: B/3316 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 23<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/3678 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 55<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: HNDA/அரச தொழில்<br>தொ.இ: B/3313 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 91சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: G/2547 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/2836 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5089 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## மீளாய்வு செய்யப்பட்ட உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும்-பரீட்சைகள் ஆணையாளர்

மீளாய்வு செய்யப்பட்ட உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நாளை மறுதினம் புதன்கிழமை அளவில் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்துள்ளார். சிங்கள வார இறுதப் பத்திரிகையொன்றுக்கு அவர் இதனை தெரிவித்தார்.

உத்தியோகபூர்வமாக மீளாய்வு செய்யப்பட்ட பரீட்சை பெறுபேறுகள நாளை மறுதினம் புதன்கிழமை அளவில் வெளியிடப்படவுள்ளது. பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 61 ஆயிரம்மாணவ, மாணவியர் மீள் மதிப்பீட்டுக்காக விண்ணப்பம் செய்திருந்தனர். இவர்களின்பரீட்சை பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள தாகத்தெரிவித்துள்ளார்.

மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள்இணையத்திலும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் சுய முகவரிக்கும், பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப் படவுள்ளன.

இதேவேளை, இந்தப் பரீட்சை விடைத்தாள் மீளாய்வுகளின் போது சுமார் 100 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டதாகவும் எவ்வாறெனினும் உத்தியோகபூர்வ அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் நாளை மறுதினம் வெளியிடப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.(இ-5)

## இராசி பலன்

25.04.2016
(சித்திரை 12, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திருதியை பிற்பகல் 4.07மணிவரை
அனுசம் பிற்பகல் 2.17 மணிவரை
சுபநேரம் 12.00-01.30 மணிவரை
இராகுகாலம் 7.30-9.00 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக | சூரி, புத | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி, கார்த்திகை | | |
| | | | குரு ராகு |
| | சனி,செவ் சந் | | |

**மேடம்:** எதிர்பாராத வகையில் சில முரண்பாடுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சிலர் இடர்பாடுகள் ஏற்படலாம்

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் அதிகரிக்கும், நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வியாபார விருத்தியுண்டு, பழைய கடனில் ஒரு பகுதி யை கொடுத்துத் தீர்க்கும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** பெண்கள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்த சேரலாம், வாகன சுகமுண்டு, பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும் நாள், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், நினைத்த காரிய மொன்று நல்லவிதமாக நடைபெறலாம்.

**துலாம்:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், புதிய பாதை புலப்படும் நாள்,சுப செலவுகள் கூடும்.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்,காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்:** வாழ்க்கைத் தரம் உயர வழி வகை செய்து கொள்வீர்கள், விய க்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.

**கும்பம்:** நண்பர்கள் ஆதரவு தர முன்வரு வர், என்றோ நடக்கும் என நினைத்த காரியம் இன்று நடை பெறும் வாய்ப்புண்டு, தெய்வீச சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகம் உண்டு.

**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்து ழைப்பு கிடைக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தேக நலன் சீராகும்.

### சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும்

# விவசாயிகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் விதைநெல், சேதனப் பசளை விநியோகம்

## துணுக்காய் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

**துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் நடப்பாண்டில் சிறு போக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கீரிச்சம்பா, ஏரி- 362 இன விதை நெல் ,சேதனப் பசளை என்பன கட்டுப்பாட்டு விலைகளில் துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருவதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தி யோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கை,

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் ஊடாக நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நலன் கருதி அரசாங்க விதை நெல் ஆராய்ச்சி திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட 3, 3 1/2 மாதங்களைக் கொண்ட நெல்லினங்களான கீரிச் சம்பா ஒரு புசல் ஆயிரத்து 730 ரூபாவாகவும் ஏரி-362 நெல் ஒரு புசல் ஆயிரத்து 425 ரூபாவாகவும் விற்பனை செய்யப் படுகின்றது.

இந்த இரு இன நெல்லினங்களையும் ஒரு ஏக்கருக்கு இரண்டு புசல் விதைப்பை மேற்கொண்டால் போதுமானதாகும்.

இதேவேளை அரசாங்கத்தின் இயற்கைப் பசளைப் பயன்பாட்டுத்திட்டத்தின் ஊடாக சேதனப்பசளை ஒரு கிலோ 9 ரூபா படி 50 கிலோ கிராம் கொண்ட பொதி 450 ரூபாவிற்கு விநியோகிக்கப் படுகிறது.

விவசாயிகள் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு தமது நெல் வயல்களுக்குத் தேவையான சேதனப் பசளையின் அளவை அறிந்து கொண்டு அதனை துணுக்காய் கமநல சேவைகள் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




### துஷ்பிரயோகத்திற்குட்படுத்த முயற்சித்த இளைஞனுக்கு விளக்கமறியல்

மன்னார் உதயபுரம் சோலை கிராமத்தைச் சேர்ந்த மாணவியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சி செய்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று முன் தினம் உத்தரவிட்டார்.

குறித்த மாணவி தரம் 5 இற்கான மாலை நேர வகுப்புக்கு கடந்த 22 ஆம் திகதி சென்றுள்ளார்.

எனினும் ஆசிரியர் அங்கு இருக்கவில்லை என்பதால் வகுப்பு இரத்துச் செய்யப்பட்டது. இந் நிலையில் மாண வியை குறித்த 21 வயதுடைய இளைஞன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

எனினும் இளைஞனிடம் இருந்து மாணவி தப்பிச் சென்றுள்ளார். குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளான்.

சந்தேக நபரை நேற்று முன்தினம் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் தீர்ப்பளித்திருந்தார். (2-281)

## விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம்

# முல்லையில் 222 பயனாளிகளுக்கு உள்ளீடுகள், வாழ்வாதார உதவிகள்





(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 222 பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள், வாழ்வாதார உதவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் விவசாயிகளுக்கு சிறுபோகத்துக்கான விதைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மு/மல்லாவி மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் வைத்து நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான விதைகளை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து முல்லை மாவட்டத்தின் விவசாய மேம்பாட்டுக்கென 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 27.67 மில்லியன் ரூபா நேரடியாக 2400 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்குவதற்குகென ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் இருந்தே முதற்கட்டமாக 222 விவசாயிகளுக்கு 1 மில்லியன் ரூபா பெறுமதியில் விதை நெல், நிலக்கடலை, பயறு, உழுந்து போன்ற நடுகைப் பொருட்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன.

பாலிநகர், பாண்டியன் குளம், யோகபுரம், துணுக்காய் மற்றும் ஐயன்கன்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலிருந்து விவசாயிகளின் வாழ்வாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வயல் நிலங்களில் மாற்றுப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு பயறு, உழுந்து, தலா 10 கிலோ, மேலும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் தலா 40 கிலோ நிலக்கடலை விதைகள் நெற்செய்கையில் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பயனாளிக்கு தலா 3 புசல் விதை நெல் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன.

நெற்செய்கையில் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் தாவர வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக 3 லீற்றர் திரவ பசளையும் தரமான விதை நெல் உற்பத்தி திட்டத்தின் கீழ் தாவர வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக 3 லீற்றர் திரவப் பசளையும் தரமான விதை நெல் உற்பத்தித் திட்டத்தின் கீழ் கீசரைட் 5 கிலோ கிராம், நாக சல்பேற் 2 கிலோ கிராம் மற்றும் 3 லீற்றர் திரவ பச ளையும் குறித்த திட்ட பயனா ளிகளுக்கு வழங்கி வைக்கப் படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச் சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிவநேசன், கமலேஸ்வரன் ஆகியோருடன், பதில் மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

### க.பொ.த.[சா/த] பரீட்சை - 2015

## சித்தியடைந்த மாணவர்களுக்கான உயர்தர வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதி சித்தியடைந்த மாணவர்களுக்கு க.பொ.த. உயர்தரப் பிரிவுகளுக்கான புதிய வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆதலால் இணைந்து கொள்ளவுள்ள அனைத்து மாணவர்களையும் இன்று சமுகமளிக்குமாறு மு/மாங்குளம் மகா வித்தியாலய அதிபர் த.பிரேமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கணிதம், விஞ்ஞானம் ,வர்த்தகம், கலைப் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளிலும் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதால் மாணவர்கள் தமது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றுடன் (2015) சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## சமாதானம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் கிராம மட்டத்தில் சமாதானம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு கலாசார மண்டப ஒழுங்கையில் நடைபெறவுள்ள இந்த செயலமர்விற்கு வளவாளர்களாக வவுனியா மாவட்ட செயலகத்தின் உளவளத் துணையாளர் சி.நந்தசீலன், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப் பாளர் சி.கணேசலிங்கம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் செயலமர்வில் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தினால் யாழ். கைதடி, சாவகச்சேரி லயன்ஸ கழகங்களினால் முதியோர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கல் , மருத்துவ சேவை வழங்கல் என்பவை மிக அண்மையில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (2-254)

# வாகன விபத்தில் மூவர் காயம்



(மல்லாவி)

கிளிநொச்சி நகரில் நடைபெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்ததுடன் ஒருவர் பலத்த காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியில் ஒரே திசையில் பயணித்துக் கொண்டிருந்த வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். (2-15)

# 718 குடும்பங்களுக்கு குடிநீர்க்கிணறுகள் அமைக்கப்பட வேண்டிய தேவையுள்ளது

## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இடப்பெயர்வின் பின்னர் மீள்குடியேறியுள்ள 2 ஆயிரத்து 890 குடும்பங்களில் 718 குடும்பங்களுக்கு குடிநீர்க் கிணறுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளதுடன் 296 குடும்பங்களின் குடிநீர்க் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் வரட்சியான காலங்களில் மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் ஊடாக பவுசர் வண்டிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்ட போதும் அப் பணியை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

எனவே இதனை நிவர்த்தி செய்யும் முகமாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் 718 குடும்பங்களுக்கு குடிநீர்க் கிணறுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளதையும் 296 குடும்பங்களின் குடிநீர்க் கிணறுகள் புனரமைப்பு செய்யப்பட வேண்டியுள்ளதையும் முன்வைத்துள்ளோம்.

அத்துடன் 10 திறந்த பொதுக் கிணறுகள், 5 குழாய்க்கிணறுகள் ஆகியவற்றை அமைப்பதற்கான திட்டத்தையும் முன்வைத்துள்ளோம்.

மேற்படி குடிநீர்க்கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்கு முன்வருபவர்கள் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)



கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்ட சோலை நிலா எனும் சிறிய கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பங்களை சேர்ந்த 25 மாணவர்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டதை படத்தில் காணலாம். (படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# சமாதான நீதவான்களாக கடமையாற்றுவதற்கு 6 கிராம அலுவலர்களுக்கு நியமனக்கடிதங்கள்

## முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன

(மல்லாவி)

மத்திய அரசின் நீதி அமைச்சின் ஏற்பாட்டில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் கிராம அலுவலர்களுக்கு சமாதான நீதவான்களாக கடமையாற்றுவதற்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வின் கீழ் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் ஆறு கிராம அலுவலர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் சமாதான நீதவான்கள் பதவிக்குரிய நியமனக் கடிதங்கள் கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தேராங்கண்டல் கிராம அலுவலராக சி.சண்முகநாதன், மல்லாவி, யோகபுரம் மத்தி ஆகியவற்றுக்கு கிராம அலுவலராக நா.துளசிதாஸ், கோட்டைகட்டியகுளம், யோகபுரம் கிழக்கு ஆகியவ ற்றுக்கு கிராம அலுவலராக கே.குலசிங்கம், பாரதி நகர் கிராம அலுவலராக திருமதி. ரமணி தமிழ்ச்செல்வன், கல்விளான் கிராம அலுவலராக திருமதி போ.சுபாசினி. புகழேந்திநகர் கிராம அலுவலராக திருமதி. துசாந்தி வினோதன் ஆகியோருக்கே நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அனைவரும் மிக விரைவில் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றின் நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்கள். (2-15)




# உமையாள்புரத்தில் பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்படும் கழிவுகளால் நோய்த் தாக்கங்களுக்கு ஆளாகின்றோம்

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(மல்லாவி)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் கிளிநொச்சி நகர் கழிவுகள், வைத்தியசாலை கழிவுகள் மற்றும் மலசல கழிவுகளும் கொட்டப்பட்டு வருவதனால்தாம் சுகாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் கழிவுகளை பாதுகாப்பற்ற முறையில் கொட்டுவதனால் தாம் பல்வேறு நோய் தாக்கங்களிற்கு ஆளாவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 2 வருடங்களிற்கு முன்னர் குறித்த பகுதியில் கழிவுகளை உரிய முறையில் கொட்டப்படுவதற்கு ஏற்பாடு செய்து தரப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்த போதிலும் இன்றும் தொடர்ச்சியாக இவ்வாறே கொட்டப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் வயிற்றோட்டம், சுவாச தொற்றுக்களுக்கு தாம் தொடர்ந்தும் முகம்கொடுக்க வேண்டி உள்ளதாகவும், விலங்குகளை வளர்க்க முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வீட்டு வளர்ப்பு நாய்கள் குறித்த பகுதியில் கொட்டப்படும் கழிவுகளை உண்பது மட்டுமன்றி, வீடுகளுக்கும் எடுத்து வருவதாகவும் குறித்த கழிவுகளை உண்பதால் நாய்கள் இறப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் காற்றுக்கு எடுத்து வரப்படும் பொலித்தீன் பைகளால் விவசாய நிலங்கள் சேதமடைந்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை கூடத்தில் இருந்து கொண்டு வரப்படும் கழிவுகளும் எவ்வித பாதுகாப்புமற்ற முறையில் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள், மலசல கழிவுகளும் அப்பகுதியில் கொட்டப்படுவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

சுமார் 10 ஏக்கர் காணியில் பரவலாக கொட்டப்பட்டுள்ள குறித்த கழிவுகளை, உரிய முறையில் கொட்டுவதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கும் பிரதேச மக்கள், தமது சுகாதாரம் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-15)



# மணலாற்றில் சம்பத்நுவர இசுறுபுர பெயரில் சிங்கள கிராமம் திறப்பு



முல்லைத்தீவு மாவட்ட பூர்வீக தமிழ்க்கிராமமான மணலாற்றில் சம்பத்நுவர இசுறுபுர எனும் சிங்கள மக்களுக்கான மாதிரிக் கிராமத்தை வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச திறந்து வைத்துள்ளார்.

அரசாங்கம் கம் உதாவ என்ற பெயரில் புதிய வீட்டுத்திட்டங்களை அமைத்து வருகின்றது. இதன் முதற்கட்ட நடவடிக்கை யாக முல்லைத்தீவு மணலாறு பிர தேசத்தில் 24 வீடு களை அமைத்துள்ளது. வீதிகள், குடி நீர் மற்றும் மின் சார வசதிகளுடன் இந்த வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களுடைய பூர்வீக நிலங் களிலிருந்து திட்டமிட்ட முறையில் வெளியேற்றப்பட்டதன் பின்னர் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# ஆனையிறவு பகுதியில் வெடிபொருட்களின் அபாயம்

## உப்பளத்தொழிற்சாலை பணிகள் அச்சத்துடன் முன்னெடுப்பு

கிளிநொச்சி - ஆனையிறவு பகுதியில் வெடிபொருட்களின் அபாயம் உள்ளதாக தொழிற்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் அமைந்துள்ள உப்பள தொழிற்சாலையின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வெடிபொருட்களின் அபாயம் உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்தகாலத்தில் சேதமடைந்த உப்பள தொழிற்சாலையின் அபிவிருத்தி பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அபிவிருத்தி பணிகளின் போது இந்த வருடம் நான்கு வெடிபொருட்கள் மீட்கப்பட்டு செயலிழக்கப்பட்டதாக தொழிற்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பெருமளவிலான வெடி பொருட்கள் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட ஆபத்தான பிரதேசமாக ஆனையிறவு பிரதேசம் காணப்பட்டது.

இந்நிலையில் ஆனையிறவு பகுதியில் அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன், டாஸ் நிறுவன த்தினால் வெடிபொருட்கள் அகற்றப்பட்டன.

அதன்பின்னர் குறித்த பிரதேசம் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டதையடுத்து உப்பளத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது இந்த பிரதேசத்தில் மீட்கப்பட்ட வெடிபொருட்களால் தொழிற்சாலையின் அபிவிருத்தி பணிகளை அச்சத்துடன் முன்னெடுக்க வேண்டியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (2-281)

# இந்து சகோதரனுக்கு ஒரு திறந்த மடல்

நீண்ட நாட்களாக எமது மண்ணில் வேண்டத்தகாத சம்பவங்கள் சில நடைபெற்றுக் கொண்டு இருப்பது எனது மன உணர்வை மட்டுமல்லாது அதனைப் பார்த்தும் பாராது நம்மவர் வாழா இருப்பதன் காரணமாக எழுந்த எனது ஆதங்கத்தினால் இந்த மடலை வரைகின்றேன்.

எமது பிரதேசத்தில் அண்மைக் காலமாக நடக்கின்ற சமூக துளியும் ஜீரணிக்க முடியாத மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட சில சம்பவங்கள் இந்துவாகிய என்னை மிகவும் மனப் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

பிரதேசங்களில் காணப்படுகின்ற வாள்வெட்டுச் சம்பவங்கள், வித்தி யாவின் படுகொலை முதல் பாலியல் துஷ்பிரயோகம், கொலைகள் தொடர்தல்.

ஆங்காங்கே நடக்கின்ற குழு மோதல்களும் அடாவடித் தனங்களும்.

இவ் விடயங்களை சற்று ஆழமாக உள்நோக்கிப் பார்த்தோமேயானால் திருமூலரால் "சிவபூமி" என அழைக்கப்பட்ட இந்த மண்ணிலா நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? என்ற ஐயம் எழுவது இயல்பாக இருக்கும்.

அறமும் தருமமும் ஒழுக்கமும் கலாசார பின்னணியும் பண்பாட்டு விழுமியங்களும் பரந்து நிற்கின்ற எம் மண்ணில் இத்தனை பிறழ்வுகளும் அராஜகங்களும் நடக்கின்றதை எண்ணி சமூகத்தின் அங்கத்தவனாகிய நானும் வெட்கித் தலைகுனிகின்றேன். இவ்வாறான சம்பவங்களுக்கான காரணங்களில் பிரதானமாக காணப்படுவது அறம் சார்ந்த ஒழுக்கமின்மையே ஆகும்.

அன்புச் சகோதரா! தங்களுக்கு முகவரி இட்டுவிட்டு கருத்துக்கள் திசைமாறிப் போவதாக தாங்கள் எண்ணுவது எனக்குப் புரிகின்றது. ஒரு இந்துவானவன சமயம் சார் உள்ளார்ந்த எத்தனையோ ஒழுக்கங்களும் அதுசார் நடத்தைகளும் இருந்த போதும் வெளிப்படையான கட்டுப்படுத்துகின்ற பிற மதங்களில் காணப்படுகின்ற ஒழுங்கமைப்புக்கள், கட்டுக்கோப்புகள், இந்து மதத்தில் இல்லாமையினால் தான் இவ்வாறான பிறழவுகளுக்கு காரணமாக அமைகின்றன என ஐயம் கொள்கின்றேன்.

மேலே நான் அட்டவணைப்படுத்திய அநீதிகள் அல்லது குற்றங்கள் செய்தவர்கள் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அக்குழுவில் உள்ளவர்கள் இந்துக்களாகவே இருப்பது எம் ஒழுக்கத் தவறா? என எண்ண வைக்கின்றது. எமது இந்து மதத்தில்தான் வாழ்வியலின் சகல விடயங்களையும் வறட்சியற்ற விதத்தில் வளமான கவர்ச்சிமிக்க சொல்லாடல்களில் சொல்லப்படுகின்றது.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்றதோடு நின்றுவிடவில்லை. வான் முகில் வளாது பெய்க - மலிவளம் சுரக்க மன்னன் கோன் முறை அரசு செய்க- குறைவிலாது உயிர்கள் வாழ்க- நான் மறை அறங்கள் ஓங்க- நற்தவம் வேள்வி மல்க என்றெல்லாம் உரைத்தது பொய்யாகிப் போவதேன். விளைநில அறுவடை நெல் வீடு வந்து சேராமல் கொட்டும் மழை அள்ளிப் போவதும். கொதிக்கும் வெய்யிலில் தாகம் தணிக்க "சோடா" எனும் நஞ்சைப் பருகி ஆயுளைக் குறைப்பதும் எனது எண்ணத்தில் நீண்ட நாட்களாகவே அவற்றை தடுப்பதற்கு ஆதங்கப்பட்டதனாலுமே இம் மடலுக்கான மேலும் காரணங்களாகும்.

கவர்ச்சிமிக்க இச் சொல்லாடல்களை புரிந்து கொள்ளாமல் அதற்கு புதுப்புது அர்த்தங்களைப் பரிணமித்து தனி மரங்க்ளாக ஒவ்வொருவரையும் தத்தளிக்க வைக்கின்றது. பணத்தை அள்ளி வாரி கோவில் கட்டுவதும் கட்டிய கோவிலுக்குள் முகாமைக்குள் முரண்பட்டுக் கொள்வதும் முதியோர் இல்லங்களை முகிழ வைப்பதும் அன்னதான மடம் கட்டுவதும் அதன் அர்த்தம் புரியாமல் திசை மாறிச் செல்வதும் இவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்த சரியான ஒழுங்குபடுத்துநர்கள் இல்லாமல் இருப்பதும் அவரவர் பாட்டிற்கு ஆலயங்களை இயக்குவதும் அர்ச்சகர்களை நியமிப்பதும் ஆகமங்களை தமக்கு ஏற்றாற்போல் அர்த்த விளக்கங்களைக் கொடுப்பதும் வெறும் மாலை மரியாதை பொன்னாடை போட ஏற்பாடு செய்து அவற்றை பத்திரிகை வாயிலாக காட்சிப்படுத்த எத்தனிப்பதும் எம் மதத்திலேயே ஆகும்.

அன்புச் சகோதரா! இது பற்றி ஒரு கணம் சிந்தி.

ஒரு மனிதன் சிந்தித்து சமூகத்தை மாற்ற முடியுமா? என்று நீ கேட்டால் "உன்னைத்திருத்திக் கொள் சமூகம் தானாகவே திருந்தி விடும்" எனும் விவேகானந்தரின் கூற்று பொய்யாகி விடும். ஆகவே ஒவ்வொரு மனிதனும் சிந்தித்தால் இது செயல் உருப்பெறும். ஒவ்வொரு தனி மரங்களின் கூட்டமே தோப்பாக இருப்பது போன்றதுதான் எமது சமூகமும்.

எந்த ஒரு காரியத்திற்கும் ஒரு காரணம் இல்லாமல் இல்லை. அந்த வகையில் 1950 களின் பின்னர் தொற்று நோய்களின் கட்டுப்பாடு அதிகரித்த பொழுது உலக சனத்தொகை சடுதியாக அதிகரித்த போதிலும் விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்பக் கருவிகளின் பெருக்கம், மனித வலுவற்று உழைப்புப் பெருக்கம் என்பன 1990 களின் பின்னர் "தொற்றா" நோய்களின் பெருக்கத்தை மிகைப்படுத்தி உள்ளது. இதனூடாக கூற வருவது என்ன வென்றால் மருந்துகள் அற்ற அல்லது இரசாயனக் கலவையற்ற உணவுப் பழக்க வழக்கத்தை தற்போதைய அறிவுலகம் வேண்டி நிற்கின்றது. இதுபோலவே அதிக கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த எமது சமூகம் சில ஒழுக்கத் தளர்ச்சிகளையும் ஒழுக்கப் பிறழ்வுகளையும் அனுமதிக்க விட்டமையால், அதனை விரும்பியமையால் அல்லது அதனை சுய இலாப நோக்கம் கொண்டு வலியுறுத்தியவர்களால் தற்பொழுது வாள கொண்டு துரத்தல், புத்திஜீவிகள் - பணம் படைத்தவர்கள் வெளியேறல், பெண்கள் மீதான வன்கொடுமைகள் என்பவை உயர்ந்து நிற்பதனைப் பார்தது அங்கலாய்க்கின்றனர்.

எனது இனிய இந்துச் சகோதரனே! சுமூகத்தில் காணப்படாத அல்லது கைவிடப்பட்ட மதம் சார் பண்புகளைத் தூசு தட்டி பின்பற்றவைத்து பின்பற்றுபவர்களைப் பாராட்டி வாழ்த்தி பின்பற்றுபவர்களின் மீதான பரிகசிப்புக்களை தவிர்த்து நமது வாழ்க்கையை அமைப்போமானால் இது மாற்றம் உள்ளதாக அமையும். குழுவினர் தோன்றக் காரணம் என்ன? சகோதரா ஒரு முறை யோசித்தாயா? இவர்கள் எல்லாம் இந்து பாரம்பரியத்தின் வாரிசுகளே. பெற்றோர் தவறா? பாடசாலையின் தவறா? பரம்பரைத் தவறா? கட்டுப்பாடற்ற சமயம் எனக் கூறும் எம் சமயத்தின் தவறா? சட்டம் ஒழுங்கை பேணுகின்றவர்களின் தவறா? சகோதரனே எம் சமூகத்தை நோக்கி எமக்காக உயிர்த்தியாகங்களின் உச்சங்களை கண்ட எம் சமூகத்தின் சகோதரர்களே இவர்கள். பிரச்சினை எம் வீட்டு வாசலைத் தட்டு முன் பிறழ்வு எம் வீட்டு வாசலைத் தட்டும். விழித் தெழு! விழித்தே இரு!! இல்லையேல் இரவெல்லாம் விழித்துக் கொண்டே இருக்க வேண்டி வரும்.

இவற்றையெல்லாம் கூறும் என்னை இதற்கான தீர்வையும் நீங்கள் கேட்டு நிற்பது எனக்குப் புரிகின்றது. அதனால் நானும் அதனை முன்வைக்கலாம் என விளைகின்றேன்.

பெற்றோர் சிறுவயது முதலே தங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கை கட்டுப்பாடுகளை தங்கள் நடத்தைகள் மூலம் பிள்ளைகள் கற்றுக் கொள்ளுமாறு வாழ்ந்து காட்டுதல். (தமது பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்காக தொலைக் காட்சி நாடகங்களைப் பார்ப்பதை தியாகம் செய்தால் என்ன?), சமயம் சார் சிந்தனைகளை அனுபவ மொழிகளில் பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்தல், ஆலயங்களில் கைவிடப்பட்ட கூட்டுப் பிரார்த்தனைகளில் உச்ச முறையில் பங்கு கொண்டு பயன் பெற இந்துச் சகோதரன் ஒவ்வொருவரும் ஒத்துழைத்தல், கல்வி கற்றலும் காசு உழைத்தலும் மட்டுமே வாழ்க்கைக்கு உதவும் என்ற கொள்கைக்கு மேலாக இவற்றுடன் ஒழுக்கம் இல்லாவிட்டால் எம் எதிர்காலம் பாழடைந்து விடும் என்ற விடயத்தை பக்குவமாய் சொல்லி வளர்த்தல்.

ஆலயங்களில் களியாட்ட நிகழ்வுகளுக்கு செலவளிப்பதைத் தவிர்த்து சமூக விழுமியங்களை வளர்க்கின்ற பண்புடைய விடயங்களை பரப்புரை செய்தல்.

அர்ச்சகர்கள் ஒவ்வொரு வருமபணம் சார் சிந்தனையிலிருந்து விலகி "அந்தணன் என்போன் அறவோன்" என்ற வாக்கியத்திற்கு அமைய சமயம் சார் பண்புகளை, சமயம் சார் ஒழுக்கங்களை ஓதி வளர்த்தல்.

மாற்று சமயங்களுக்கு மாறப்படுகிறார்கள் என்று புலம்பிக் கொண்டிராமல் அல்லது அதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பதைத் தவிர்த்து ஆறுமுகநாவலர் வழியில் அவர்கள் பாணியில் எதிர்வாதம் செய்து எம் சமயத்த வரை விழிப்படையச் செய்தல்.

மூப்பு பிணி சாக்காடு எச் சமயத்திலும் உள்ளது. எங்கு சென்றாலும் அது மாறாது என்ற விடயத்தை விளங்கப்படுத்தி இந்து ஒழுக்கத்தை வளப்படுத்தல்.

எம் முன்னோர்கள் ஒவ் வொரு விடயங்களையும் வளமான கவர்ச்சியான கனகற்சிதமான சொற்பிரயோகம் ஊடாகவே விடயத்தை சொல்லி இருக்கின்றார்கள். கம்ப இராமாயணம், மகாபாரதம், திருக்குறள், ஔவைப்பாட்டியின் அறிவுரைகள் யாவும் வறட்சியற்ற கவர்ச்சியுள்ள சொல்லாடல்களே ஆகும். இவற்றையெல்லாம் இளம் சந்ததியினருக்கு உட்புகுத்த உதவும் வழிவகைகளைச் செயற்படுத்தல்.

எனதினிய இந்துச் சகோதரா! உன் முன்னே சமர்ப்பிப்பதன் காரணம் "தென்னாடுடைய சிவனே போற்றிஎன்னாட்டவர்க்கும்இறைவா போற்றி" என்ற மணிவாசகம் நிலைத்து நின்று உயர்வு பெறவும், இந்தியத் திரைப்படத்தில் "கலாசார உச்சம் யாழ்ப்பாணமே" எனச் சொன்ன வசனத்தின் பெறுமதியைப் பேணவும் எம் போன்ற சகோதரர்கள் விழித்தெழுந்து செயற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பரவள்ளி

## SLEAS போட்டிப் பரீட்சை: பொது அறிவு - விடைகள்

### மாதிரி வினாத்தாள் 23/04 வலம்புரியில்

1. 4
2. 4
3. 1
4. 3
5. 2
6. 3
7. 2
8. ரஷ்யா கிரிமியா மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்டமை, உக்கிரேனுக்கு மனிதாபிமான அடிப்படையில் உத வியளிக்கும் முகமாக அந்நாட்டிலுள்ள தமது ஆதிக்கத்தைப் பரப்பியமை, இதன் மூலம் உக்ரேனை பலவீனமாக்கி தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்த முயற்சி செய்தல்.
9. சர்வதேச மனித உரிமைகள் பட்டயம்
10. தெலுங்கானா பிராந்திய அரசு
11. சீனா
12. UNITED NATIONS EDUCATION SCIENTIFIC AND CULTURAL ORGANIZATION
13. புவி
14. $10^{-6}$
15. சதையி
16. 5500(K)
17. இலங்கை மத்திய வங்கி
18. தொழில்நுட்பஆராய்ச்சிஅமைச்சு
19. பழைய பாராளுமன்றக் கட்டம்
20. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி
21. வாழ்வின் எழுச்சி திணைக்களம்
22. 05%
23. உச்ச நீதிமன்றம்
24. பாரம் தூக்குதல்
25. 15-64 நாட்கள்
26. 1989
27. டட்லி சேனாநாயக்க
28. மேல் நீதிமன்றம்
29. அருண சஞ்சீவ் சமர விக்கிரம- அருணசஞ்சீவ
30. சட்டம், சமாதானம் மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்தம்
31. நெடுந்தீவு
32. தீபன்
33. ஸ்ரீமத் ஆர்தர் சி கிளார்க்
34. 20
35. பொது
36. கிளைபோசேட்
37. 0 பூச்சியம்
38. எட்வேட் ஸ்னோடவுண்
39. உலக சுற்றாடல் தினம்- ஜூன் 5
40. ஜப்பான்
41. ரஷ்யா
42. பசுபிக் சமுத்திரம்
43. சிங்கப்பூர்
44. ஷாங்கை
45. ஐரோப்பிய சங்கம்
46. செய்யத் நாத் உல் ஹாசேன்
47. ஓரிகாமி
48. Black Moon
49. பூச்சியம்
50. 400
51. அக்குபஞ்சர்
52. சிவப்பு, நீலம், மஞ்சள்
53. 24
54. Orange
55. Out Look
56. லக்டோ மீற்றர்
57. ஒளி ஒரு வருடத்தில் செல்லும் தூரம்
58. சுய திறனியல் தேவைகள்
59. சுவெட்
60. திவெஹி மொழி

# ‘மலேரியாவை ஒழித்து நன்மை அடைவோம்’

## உலக மலேரியா தினம் இன்று

உலக மலேரியா தினம் ஏப்ரல் 25 ஆம் திகதி உலகெங்கும் (End malaria for good) மலேரியாவை ஒழித்து நன்மை அடைவோம் எனும் தொனிப் பொருளில் கொண்டாடப்படுகின்றது. முன்னர் பாரிய மலேரியா தொற்றுள்ள நாடாக இருந்த இலங்கை 2012 ஒக்டோபர் மாதம் முதல் உள்ளூரில் மலேரியாத் தொற்றை ஒழித்த நாடெனும் கௌரவமான நிலையை அடைந்துள்ளது. எந்தவொரு வெப்ப வலய நாடும் (Tropical Country)இந்த அந்தஸ்தை கடந்த மூன்று தசாப்தத்தில் அடைந்ததில்லை.

எனினும் இலங்கையில் இந் நோய் கீழ் குறிப்பிடப்படுபவர்களில் இப்பொழுதும் கண்டறியப்படுகின்றது.

இந்தியா மற்றும் அதன் அயல் நாடுகளுக்குச் சென்று திரும்புவர்கள் மற்றும் அந் நாடுகளில் இருந்து மீள்குடியேறுபவர்கள்.

ஆசியா, ஆபிரிக்கா நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்கள் மற்றும் அந் நாடுகளின் ஊடாக இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள்.

மலேரியா தொற்றுள்ள நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள்.

அண்ணளவாக அரைவாசி சனத்தொகையினர் (3.2 பில்லியன்) மலேரியா தொற்றும் அபாயம் உள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள்.

எனவே இலங்கையில் இந் நோய்த்தாக்கம் மீண்டும் அதிகரிக்காமல் தடுப்பதற்கு கீழ்க்குறிப்பிடுபவற்றை பின்பற்றுதல் அவசியம். அவையாவன,

மலேரியா தொற்றுள்ள நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், ஆபிரிக்க நாடுகள், மியன்மார் மற்றும் ஆப்கானிஸ்தான் செல்வதற்கு முன் நோய்த்தடுப்பு சிகிச்சை பெற்றுக் கொள்ளுதல்.

மீள நாட்டிற்கு திரும்பிய பின்பும் மலேரியாவிற்கான இரத்த பரிசோதனை செய்தல் அவசியம். அத்துடன் ஒரு வருட காலத்திற்குள் காய்ச்சல் ஏற்பட்டால் வைத்தியரிடம் சென்று மலேரியா உள்ள நாடொன்றுக்கு சென்று வந்ததை தெரிவிப்பது அத்தியாவசியமாகின்றது.

உறங்கும் போது நுளம்பு வலையினுள் உறங்குவதன் மூலம் எம்மை பாதுகாத்து கொள்ளலாம்.

இலங்கை முற்காப்பு தடுப்பு மருந்துகளை பெற்றுக் கொள்ளும் இடங்களாவன,

பிராந்திய மலேரியா தடைப்பிரிவு, சுகாதாரக் கிராமம் பண்ணை, யாழ்ப்பாணம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள்

**இலங்கையில்...**

| ஆண்டு | 1935 | 1963 | 1968 | 1991 | 2013 | 2015 | 2016 மார்ச் வரை |
|---|---|---|---|---|---|---|---|
| நோய் தொற்றியவர்கள் | 5,459,339 | 17 | 440,644 | 400,263 | 95 | 36 | 15 |
| மரணம் | 47,326 | 01 | 64 | 19 | 00 | 00 | 00 |

**யாழ்ப்பாணத்தில்...**

| ஆண்டு | 1995 | 1998 | 2001 | 2003 | 2015 | 2016 மார்ச் வரை |
|---|---|---|---|---|---|---|
| நோய் தொற்றியவர்கள் | 36,957 | 47,802 | 1365 | 413 | 01 | 00 |
| மரணம் | 29 | 48 | 01 | 00 | 00 | 00 |

இந்தியா, பாகிஸ்தான், மியன்மார், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில இருந்து இலங்கைக்கு வந்து தஞ்சம் கோருபவர்கள்

இதனால் இலங்கையில் இந்நோய் தாக்கமானது கடந்தாண்டு ஒப்பிடும் போது அதிகரித்த போக்கையே காட்டுகின்றது.

இலங்கையில் இவ்வாறு கட்டுப்பாட்டில் இருந்தாலும் கூட முழு உலகிலுமே 2015 ஆம் ஆண்டு 214 மில்லியன் நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் 438, 000 உயிரிழப்புக்களும் மலேரியாவினால் ஏற்பட்டுள்ளது. உலகில்

மலேரியா தடுப்பு காரியாலயம், கொழும்பு -05

சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்கா

ஆரம்ப சுகாதார நிலையங்கள் (Primary health care units)

வைத்தியக் கலாநிதி அ.ஜெயக்குமரன்
பிராந்திய வைத்திய அதிகாரி,
பிராந்திய மலேரியா தடை இயக்கம்,
சுகாதார கிராமம், பண்ணை,
யாழ்ப்பாணம்.

# சமஷ்டி தீர்வுத்திட்டம் மேற்கத்தேய சூழ்ச்சி

## தம்மரத்ன தேரர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டி ருக்கும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டம் மேற்கத்தேய சூழ்ச்சிகளில் ஒன்று என்று இந்துராகார தம்மரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தின் கலாசாரத் துறை பேராசிரியர் இந்துராகார தம்மரத்ன தேரர் இது குறித்து வார இறுதி சிங்களப் பத்திரிகையொன்றுக்கு பேட்டியொன்றை வழங்கியுள்ளார்.

அதில் அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையில் உள்ள கனிம வளங்களைக் கொள்ளையடிப்பது மேற்கத்தேய சக்திகளின் நீண்ட நாள் அபிலாஷையாகும்.

இதனைத் தடுக்கும் பாதுகாப்புக் கவசமாக ஒரு நபரிடத்தில் அதிகாரம் குவிந்திருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை காணப்பட்டது.

அதனை நீக்கும் வகையிலும், தமக்கு விரும்பிய நபர்களை ஆட்சியில் அமர்த்தும் வகையிலும் மேற்கத்தேய நாடுகள் முன்னெடுத்த சதி நடவடிக்கைகள் கடந்த தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளன.

தற்போது அவர்கள் அதற்கடுத்த கட்டமான இலங்கையின் ஆட்சி சீர்குலைந்து, நிலையற்றதும் பெரும்பான்மை அற்றதுமான தளம்பல் ஆட்சியொன்றை உருவாக்க முனைகின்றார்கள்.

அதன் மூலமாக இலங்கையின் கனிம வளங்களைக் கொள்ளையடிப்பது அவர்களுக்கு மிக இலகுவான விடயமாக அமைந்துவிடும்.

அதனை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக அனைத்து இனங்கள் மத்தியிலும் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சிகள் சூட்சுமமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வின் மூலமாக நாட்டை தளம்பல் நிலைக்குத்தள்ளி விட முயற்சிக்கப்படுகின்றது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள சமஷ்டி நிர்வாக முறை தமிழ் மக்களின் தேவையோ, அல்லது தமிழ் மக்கள் அவ்வாறான ஒன்றைக் கோரவோ இல்லை.

இது ஐரோப்பிய, அமெரிக்க நலன்களை திருப்திப்படுத்தும், அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் ஒரு கோரிக்கையாகும்.

இதன் மூலம் இலங்கையினுள் இன, மத, மொழி, பிரதேச ரீதியான பிளவுகள் தலைதூக்கும். இதனைத் தடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் தம்மரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# செய்தித்துளிகள்

## அரச பணியாளர்களுக்கான தீர்வையற்ற வாகன சலுகை

கடந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிறுத்தப்பட்ட அரச பணியாளர்களுக்கான தீர்வையற்ற வாகன இறக்குமதி சலுகை, மீண்டும் வழங்கப்படவுள்ளது.

அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் ஏற்கனவே நிதி அமைச்சு அமைச்சரவை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

இந்தநிலையில் விரைவில் இந்த திட்டம் அமுலாகும் என்று அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (இ-5)

## நாடு கடத்தப்பட்டவர் இலங்கையில் கைது

போலியான கடவுச்சீட்டு வைத்திருந்த நபர் ஒருவர் இத்தாலியில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலைய பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய ஒருவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக அவர் கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (இ-5)

## மகிந்தவிற்கு மீண்டும் பசிலால் பின்னடைவு



முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பின்னடைவையே ஏற்படுத்துகிறார் என நொச்சியாகம பிரதேச சபையின் முன்னாள் தலைவர் நலின் திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கூட்டு எதிர்கட்சியின் மே தினக் கூட்ட ஒழுங்கமைப்பு பொறுப்புக்கள் பசிலுக்கு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

## எதிரணியின் மேதினக்கூட்டத்தில் இருந்து நழுவுகிறார் வாசுதேவ



பொது எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் மகிந்த அணி ஆதரவாளரான வாசுதேவ நாணயக்கார எம்.பி. கலந்து கொள்ளமாட்டாரெனத் தெரிய வருகிறது.

வாசுதேவ நாணயக்கார கியூபா சென்றுள்ளார். எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி தான் அவர் இலங்கை திரும்புவார் என்றும் தெரிய வருகிறது. (இ-5)

## கல்முனை பிரதான வீதியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில் ஆரையம்பதி மதுபானசாலைக்கு முன்னால் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான 70 வயதுடைய க.தர்மலிங்கம் என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. (இ-5)

## சிறுவனின் சடலம் மீட்பு

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை, கவரவில தோட்ட 200 ஏக்கர் பிரிவைச் சேர்ந்த எஸ்.வினோதன் என்ற 15 வயதுச் சிறுவன், சாமிமலை ஸ்காபுரோ ஆற்றில் இருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச மக்கள் மஸ்கெலியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

மேற்படி சிறுவனை காணவில்லை என சிறுவனின் உறவினர்களால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசாவில் அனல் காற்றுக்கு 162 பேர் மரணம்

(நகரி)

**இந்தியாவின் ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசாவில் கடும் வெப்பம் காரணமாக வீசும் அனல் காற்றுக்கு இதுவரை 162 பேர் உயிரிழந்துள்ளனர்.**

ஆந்திரா, தெலுங்கானா மற்றும் ஒடிசாவில் கோடை வெயில் இப்போதே மக்களை வாட்டி வதைக்கிறது.

கோடை காலத்தில் வழக்கமாக இருக்கும் வெப்ப நிலையைவிட இந்த ஆண்டு மிக கடுமையாக இருக்கிறது. பல மாவட்டங்களில் அனல் காற்று வீசுகிறது. தெலுங்கானா, ஒடிசாவில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பாரதச் செய்தி

ஒடிசாவில் அனல் காற்றுக்கு இதுவரை 73 பேர் இறந்துள்ளனர். மாநிலத்தில் கடந்த சில நாட்களாகவே 105 டிகிரிக்கு அதிகமாக வெப்பம் நிலையுள்ளது.

வெயிலின் தாக்கம் அதிகரித்துக் கொண்டே இருப்பதால் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3மணி வரை பொது மக்களவீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என ஒடிசா அரசு அறிவித்துள்ளது.

இதே நிலைதான் தெலுங்கானாவிலும் ஏற்பட்டு உள்ளது. உச்ச வெப்ப நிலையாக கம்மம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 113 டிகிரி வெப்ப நிலை பதிவானது. நல்கொணடாவில் 112 டிகிரி பதிவானது ஐதராபாத்தில் 105 டிகிரி வெப்ப நிலை பதிவானது.

அனல் காற்றுக்கு இதுவரை 49 பேர் பலியாகி இருப்பதாக அரசு அறிவித்து உள்ளது. இன்னும் 5 நாட்களுக்கு அனல் காற்று வீசும் என்று ஐதராபாத் வானிலை மையம் அறிவித்து உள்ளது. எனவே பகலில் மக்கள் வெளியில் நடமாட வேண்டாம் என்று தெலுங்கானா அரசு அறிவுறுத்தி உள்ளது.

ஆந்திராவில் வெயிலுக்கு 40 பேர் பலியாகி இருப்பதாக அரசு அறிவித்து உள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் 100 டிகிரி வெப்ப நிலைதான் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு ஜூன் மாதம் 113 டிகிரி இப்போதே பதிவாகி உள்ளது. அக்னி நட்சத்திர காலங்களில் வெயிலின் தாக்கம் இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எப்போதும் குளிர்மையாக இருக்கும் திருப்பதி திருமலையில் கூட இந்த ஆண்டு 105 டிகிரிக்கு அதிகமாக வெப்ப நிலை ஏற்பட்டு உள்ளது. மதியம் மாட வீதியில் பக்தர்கள் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது. (இ-5)

# இலங்கைத் தமிழர்களை ஏமாற்றியவர் கருணாநிதி

## ஜெயலலிதா குற்றச்சாட்டு

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கபட நாடகம் ஆடி, அவர்களுக்குத் துரோகம்இழைத்தவர்தி.மு.க. தலைவர் கருணாநிதி என்று அ.தி.மு.க. பொதுச்செயலரும், தமிழ்நாடு முதல்வருமான ஜெயலலிதா குற்றம்சாட்டினார்.

திருச்சியில் நேற்று முன்தினம் மாலை நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பல கபட நாடகங்களை ஆடி இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க.துரோகம் இழைத்தது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 2006 பேரவைத் தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர்கள் அமைதி நிறைந்த நல்வாழ்வுரிமை பெறுவதற்கு வழிகாண உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என தி.மு.க. வாக்குறுதி அளித்திருந்தது.

ஆனால், அவர்கள் செய்தது இதற்கு எதிர்மறையான செயல்களைத்தான். தி.மு.க அங்கம் வகித்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய ஆட்சி 2004 முதல் மத்தியில் நடைபெற்று வந்தபோது, இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் போர்வையில் தமிழர்கள் மீதான அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், இதற்கு காங்கிரஸ் தலைமையிலான அரசு செவிசாய்க்கவில்லை எனில் மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நான் அப்போது பலமுறை வலியுறுத்தினேன். ஆனால் எந்த நடவடிக்கையும் கருணாநிதிமேற்கொள்ளவில்லை.

சில மாதங்களுக்கு முன்பு, வடக்கு மாகாணசபை உறுப்பினரான அனந்தி சசிதரன், இறுதிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்த 2009, மே 16ஆம் திகதி கருணாநிதியின் மகள் கனிமொழி, அனந்தியின் கணவர் சசிதரனுடன் செய்மதித் தொலைபேசியல் பேசியதாகவும், அப்போது கனிமொழி, அவர்களை சரணடைந்து விடும்படியும், அவர்களது விடுதலைக்கு தாங்கள் உத்தரவாதம் தருவதாகவும் கூறியுள்ளார்.

அதை நம்பியே சரண் அடைந்த ஈழத்தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். அல்லது காணாமற் போய்விட்டனர் என்ற மிகப்பெரிய குற்றச்சாட்டை கூறியுள்ளார்.

இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்லாது, இலங்கைத் தமிழர்களுக்கும் துரோகம் இழைத்தவர்தான் கருணாநிதி.

2011இல் அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றப் பிறகு, இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும், இலங்கையை நட்பு நாடு என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும், இலங்கைப் போரின் போது போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைகள் நிகழ்த்தியவர்கள் மீது சுதந்திரமான, அனைத்துலக விசாரணை நடத்தி, தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல தீர்மானங்கள் சட்டப்பேரவையில் என்னால் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் நிலைமை சீரடைந்த பின்னரே இங்குள்ள தமிழர்களை விருப்பத்தின் பேரிலேயே திருப்பி அனுப்ப வேண்டும் என்பது தான் எங்கள் கொள்கை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



# மீண்டும் ஒரே மேடையில் சோனியா - கருணாநிதி


சென்னையில் மே மாதம் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் ஒரே மேடையில் இணைந்து பிரசாரம் செய்யவுள்ளதாக காங்கிரஸ் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இளங்கோவன், 'தி.மு.க.- காங்கிரஸ்கூட்டணிவேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் துணைத தலைவர் ராகுல் காந்தி தமிழகத்தில் 4 அல்லது 5 நாட்கள் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்' என்றார்

மேலும், அவர் கூறுகையில்,

காங்கிரஸின் தேர்தல் அறிக்கை நாளை 26 ஆம் திகதி வெளியிடப்படும். இந்த தேர்தலில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் சிறுபான்மையினர், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளோம். விகிதாசார அடிப்படையில் வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பது தவறான கருத்தாகும் என்று தெரிவித்தார். (இ-5)



## தமிழக சட்ட சபைத் தேர்தலில்

# மோடி தொலைபேசி மூலம் பிரசாரம் செய்யவுள்ளார்

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் பா.ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி தொலைபேசி மூலம் பிரசாரம் செய்யவுள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தேர்தல் களத்தில் தங்களை முழுவீச்சில் ஈடுபடுத்தி பிரசாரம்மேற்கொண்டுவருகின்றனர்.

அதன்படி, தமிழக பா.ஜ.க. சார்பிலும் தேர்தல் பிரசாரம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனினும், தங்கள் பிரசாரத்திற்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில், பிரதமர் நரேந்திரமோடி, கட்சியின் தேசிய தலைவர் அமித்ஷா உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள தமிழகம் வரவுள்ளனர்.


பா.ஜ.க. பிரசாரத்தை மேலும் மெருகூட்டும் வகையில் பிரதமர் நரேந்திரமோடியின் 'வொய்ஸ் மெசேஜ்' என்ற மென்பொருள் தயார் செய்யப்பட்டு, வாக்காளர்களின் தொலைபேசி எண்கள் மூலம் பிரதமர் நரேந்திரமோடியே நேரடியாக பேசும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்ததிட்டம் ஏற்கனவே பீகார் தேர்தலில் சோதனை அடிப்படையில் மேற்கொள்ளபட்டது. தற்போது அசாம் மற்றும் மேற்கு வங்காள வாக்காளர்களிடம் இந்த திட்டம் செயற்படுத்தப்பட்ட பிறகு, தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் இந்த திட்டம் பிரதமர் நரேந்திரமோடியின் நேரடி பிரசாரத்திற்கு சில தினங்களுக்கு முன் ஆரம்பித்து அவரது பிரசாரத்திற்கு பின்னும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதேபோன்ற தேர்தல் பிரசார உத்தியை தமிழகத்தில் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. தலைவர்கள் ஏற்கனவே மேற்கொண்டுள்ளனர். (இ-5)

# ரூ.5கோடி பணம் பறிமுதலில் உண்மை மறைக்கப்படுகிறது

## வைகோ குற்றச்சாட்டு



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதியில் ம.தி.மு.க. சார்பில் போட்டியிடும் க.சந்திரசேகரனை ஆதரித்து கீரமங்கலத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ பேசுகையில்,

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் நீதிபதி குன்ஹாவின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தால், அவர் மீண்டும் சிறை செல்வது உறுதி. கரூரில் அமைச்சர் நத்தம் விசுவநாதனின் ஆதரவாளருக்கு சொந்தமான குடோனில் ரூ.5 கோடி உள்ளதாக தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால், அங்கு, சென்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே உள்ளிட்டோர் ரூ.10 இலட்சம் மட்டும் பறிமுதல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். இதில் உண்மை மறைக்கப்படுகிறது.

இந்த தேர்தலில் பணம் பட்டா வாடாவை தடுத்தாக வேண்டும். புதிய வாக்காளர்கள் சுமார் ஒன்றரை கோடி இளைஞர்கள் உள்ளனர். இவர்களனைவரும் செல்போன் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள், வாக்குக்கு பணம், பொருட்களை வாங்கக்கூடாதென்ற விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். யாரேனும் வாக்குக்கு பணம் கொடுத்தால், செல்போன் சிங்கங்களான இந்த இளைஞர்கள் தடுப்பார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)

## ஈக்குவடோரில் நிலநடுக்கம்

# 650ஐ அடைந்த பலிஎண்ணிக்கை



(ஈக்குவடோர்)

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன. இங்கு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 650 ஆக உயர்ந்துள்ளது.

அங்கு அண்மையில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதையடுத்து, கடந்த ஒரு வார காலமாகத் தொடர்ந்து 700 பின்ன திர்வுகள் ஏற்பட்டதாகப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இவற்றில் சில, ரிக்டர் அளவு கோலில் 4.0 முதல் 6.0 அலகுகளாகப் பதிவாகின. தொடர்ந்து நிலஅதிர்வுகள் நேரிட்டு வருவதால் உணவு, குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் இங்குள்ள 7 ஆயிரம் கட்டடங்கள் தரைமட்டமாகியிருக்கிறது. 26 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இதில் பலியானவர்களின் எண்ணிக்கையும் 650 ஆக உயர்ந்துள்ளது.

நெடுஞ்சாலைகளில் குடும்பம் குடும்பாக வரிசையாக நிற்கும் மக்கள் சைகை காட்டி உணவு, தண்ணீர் கோருகின்றனர். நிவாரண முகாம்களில் மிக நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருக்கின்றனர்.

14 ஆயிரம் மீட்பு பணி வீரர்கள் நிலநடுக்கத்தால் பாதிப்படைந்த பகுதியில் நிவாரண பொருட்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன்ர். (இ-5)

## சிரியாவில் ராணுவம் வான்வழித் தாக்குதல் 27 பேர் பலி!

(அலெப்போ)

சிரியாவின் அலெப்போ நகரில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் அரசுப் படையினர் நிகழ்த்திய வான்வழித் தாக்குதலில் 27 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஜெனிவாவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையிலிருந்து விலகுவதாக கிளர்ச்சிக் குழுக்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த போர் நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

இதையடுத்து, சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போவில், கிளர்ச்சியாளர் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்கும் நோக்கில் அரசுப் படைகள் வான்வழித் தாக்குதல் நிகழ்த்தி வருகின்றன.

இந்தத் தாக்குதலில் 19 பேர் உயரிழந்ததாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்திருந்தது.

எனினும், வான்வழித் தாக்குதலின் இரண்டாவது நாளான கடந்த வெள்ளிக்கிழமை, 27 பேர் உயிரிழந்ததாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். (இ-5)




## பிரித்தானியாவை எச்சரிக்கும் ஒபாமா

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகக் கூடாது என்றும் அவ்வாறு விலகினால் வர்த்தக ஒப்பந்தம் பாதிக்கும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 3 நாள் பயணமாக பிரித்தானியா சென்றுள்ளார். தனது மனைவியுடன் பிரித்தானிய மகாராணியின் அரண்மனைக்கு சென்ற அவர் மதிய உணவை அருந்தினார்.

பின்னர் பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்த அவர் ஒரு மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஒபாமா, வலுவான ஐரோப்பிய ஒன்றியத்தை வழிநடத்த உதவும் போதுதான் பிரித்தானியா சிறந்து விளங்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பது பிரித்தானியாவின் பொருளாதாரத்தை வளர செய்யும், வேலை வாய்ப்பினை அதிகரிக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம்.

அதனை நீங்கள் உணர வேுண டும். ஒருவேளை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகினால் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் பின்னடைவை சந்திக்கும் என்று எச்சரித்துள்ளார்.


பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது அமெரிக்க வார்த்தைகளை பயன்படுத்தாமல் பிரித்தானிய வார்த்தைகளை ஒபாமா பயன்படுத்தினார். இது சர்ச்சையை உருவாக்கியுள்ளது. பிரதமர் டேவிட் கமரூனின் அலுவலகம் தயாரித்து கொடுத்ததையே ஒபாமா படித்துள்ளார என சட்ட அமைச்சர் டொமினிக் ராப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, கட்டுப்படுத்த முடியாத அகதிகளின் வருகை பிரித்தானியாவுக்கு பெரும் ஆபத்து என்பதை ஒபாமாவே தெளிவாக கூறியுள்ளார்.

அதனால் தான் நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதாக கூறுகிறோம். ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா இருக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் விருப்பமாக இருக்கலாம்.

ஆனால் அது பிரித்தானிய மக்களுக்கு நல்லதல்ல. மெக்சிக்கோவுக்கு எல்லையை திறந்துவிடுவது என்பது அமெரிக்காவால் முடியாது அது போன்றுதான் இதுவும் என்று கூறியுள்ளார். (இ-5)

## ஒபாமாவை உற்சாகமாக வரவேற்ற பிரித்தானியாவின் குட்டி இளவரசர்



அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா மற்றும் அவருடைய மனைவி மிச்சேல் ஆகியோரை பிரித்தானிய குட்டி இளவரசரான ஜோர்ஜ் உற்சாகமாக வரவேற்றுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா நீடிப்பது குறித்து ஆலோசனை மேற்கொள்ள அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா மற்றும் அவருடைய மனைவி மிச்சேல் ஆகியோர் 3 நாட்கள் பயணமாக பிரித்தானியா சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் பிரித்தானிய பிரதமர்கமரூனுடன்ஆலோசனை மேற கொண்ட ஒபாமா, 'பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலேயே தொடர்ந்து நீடிக்க வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார். இந்த ஆலோசனைக்கு பிறகு, Kensington அரண்மனையில் ஒபாமா மற்றும் மிச்சேலுக்கு இரவு உணவு தயார் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை அரண்மனைக்கு வந்த ஒபாமாவை 'ஹலோ, மிஸ்டர் பிரஸிடெண்ட்' என உற்சாகமாக கூறி குட்டி இளவரசரான ஜோர்ஜ் ஒபாமாவை வரவேற்றுள்ளார்.

அப்போது, இரவு நேரம் என்பதால், குட்டி இளவரசர் இரவில் உறங்கும்போது அணியும் உடைகளை அணிந்துள்ளார்.

குட்டி இளவரசரின் வரவேற்பால் உற்சாகமடைந்த ஒபாமா மற்றும் மிச்சேல், குட்டி இளவரசருக்கு முன்னால் தரையில் அமர்ந்தவாறு கைகுலுக்கி பேசியுள்ளனர்.

அப்போது, இளவரசர் வில்லியம்ஸ் மற்றும் இளவரசி கேட் மிடில்டன் ஆகியோர் உடன் இருந்துள்ளனர்.

தற்போது 2 வயது நிரம்பியுள்ள குட்டி இளவரசருக்கு ஒபாமா ஏற்கனவே ஒரு குதிரை பொம்மையை பரிசாக வழங்கியிருந்தார்.

வில்லியம்ஸ் மற்றும் ஒபாமா குட்டி இளவரசரை குறித்து நகைச்சுவையாக பேசிக்கொண்டு இருந்த போது, ஜோர்ஜ் தன் தாயாருடன் அந்த குதிரை மீது அமர்ந்து விளையாடிக்கொண்டு இருந்துள்ளார்.

பிரித்தானிய சாம்ராஜ்ய வரலாற்றில் முதன் முறையாக பிரித்தானிய அரண்மனையின் தனி அறையில் ஒரு அமெரிக்க ஜனாதிபதியை குழந்தை பருவத்தில் வர வேற்றுள்ளது குட்டி இளவரசர் ஜோர்ஜ்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அமெரிக்காவில் நான்கு சம்பவங்களில் ஒரே குடும்பத்தினர் 8 பேர் படுகொலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஓஹியோ மாகாணத்தில், கொடிய கைதிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றுவது போல ஒரே குடும்பத்தினர் 8 பேரை 4 வெவ்வேறு சம்பவங்களில் சுட்டுக்கொன்றுள்ள கொடூரம் நடந்துள்ளது.

இந்த சம்பவம், அங்கு பைக் கவுண்டியில் யூனியன் ஹில் ரோடு பகுதியில் நடந்துள்ளது.

கொல்லப்பட்ட அனைவரும் ரோடன் என்று அழைக்கப்படுகிற குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். குடும்பத் தகராறு காரணமாக இந்தப் படுகொலைகள் நடந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

இந்தப் படுகொலைகள் குறித்து பைக் கவுண்டி ஷெரீப் சார்லஸ் ரீடர் கூறும்போது, "30 மைல் சுற்றளவுக்குள் 4 சம்பவங்களில் இந்த படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளன. வலிமை வாய்ந்த துப்பாக்கி கொண்டு இந்த படுகொலைகளை நடத்தி இருக்க வாய்ப்புள்ளது" என்றார்.

ஓஹியோ மாகாண ஆளுநர் ஜான் காசிச் கூறுகையில், "இந்த படுகொலைகளை நடத்திய குற்றவாளியை பிடித்து சட்டத்தின்முன் நிறுத்துவோம்" என சூளுரைத்தார்.

ஓஹியோ அட்டார்னி ஜெனரல் மைக் டிவைன் கூறும்போது, " ஒரு தாயையும், அவளது அருகிலேயே தூங்கிக்கொண்டிருந்த குழந்தையையும் கொலை செய்து விட்டார்கள் என்று சொன்னால் நம்புவதற்கே கடினமாகவுள்ளது" என வேதனையுடன் குறிப்பிட்டார். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்துகின்றனர். (இ-5)

## பாகிஸ்தானில் சீக்கிய அமைச்சர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை

பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்துங்வா மாகாணத்தில் சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சராக இருந்து வந்தவர், சீக்கியரான சர்தார் சோரன் சிங்.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை, புனர் மாவட்டத்தில் காரில் சென்று கொண்டிருந்தபோது, மோடடார் சைக்கிளில் வந்த சில நபர்கள், அவரது காரை தடுத்து நிறுத்தினர்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் சர்தார் சோரன் சிங்கை அவர்கள் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி விட்டு, அங்கிருந்து தப்பினர்.

இதில் சம்பவ இடத்திலேயே அமைச்சர் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். இந்த படுகொலைக்கு பாகிஸ்தான் அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்த படுகொலைக்கு பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் இயக்கம் பொறுப்பு ஏற்றது.

இது தொடர்பாக அந்த இயக்கத்தின் செய்தி தொடர்பாளர் முகமது குராசனி விடுத்துள்ள அறிக்கையில், "பாகிஸ்தானில் இஸ்லாமிய முறை அமுலுக்கு வரும்வரையில் இத்தகைய செயல்களை தொடருவோம்" என எச்சரித்துள்ளார். (இ-5)

# எட்கா உடன்படிக்கை விரைவில் உறுதியாகும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

**இந்தியாவுடனான பொருளாதார உடன்படிக்கையான எட்கா உடன்படிக்கையின் இறுதிக் கட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஐரோப்பிய ஒன்றியத்தினால் மீன் இறக்குமதி தடை நீக்கப் பட்டமையை அடுத்தே ரணில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். அரசாங்கம், ஆரம்பத்தில் உறுதியளித்தபடி தமது திட்டங்களை முன்னெடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனநாயக நாடு என்ற அடிப்படையில் சர்வதேசத்துடன் இலங்கை பல்வேறு உடன்படிக்கைகளுக்கு செல்லவுள்ளதாகவும் அவர தெரிவித்துள்ளார்.

இதேவேளை சீனா, பாகிஸ்தான் மற்றும் கொரியா போன்ற நாடுகளுடன் பொருளாதார உடன்படிக்கையை மீளமைப்பதற்கும் இலங்கை தயாராக உள்ளதாக ரணில் தெரிவித்துள்ளார். (இ-5)

# காதைக் கடித்துவிட்டு தப்பிச் சென்ற நபர்

## பொலிஸ் அதிகாரி வைத்தியசாலையில்

மஹியங்கனை சேனார பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை மோசடியை முற்றுகையிட சென்ற சந்தர்ப்பத்தில் அதனை நடததி சென்ற சந்தேக நபர், பொலிஸ் அதிகாரியின் காதைக் கடித்த சம்பவ மொன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மஹி யங்கனை பொலிஸ் அதிகாரிகள் மூன்று பேர், இந்த சட்ட விரோத மதுபான மோசடியை முற்றுகையிட சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதோடு, குறித்த சம்பவத்தின் பின்னர் சந்தேக நபர் தப்பி சென்றுள்ளார்.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி, மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்தோடு, சந்தேக நபரை கைது செய்வதற்காக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 10, 000 கிலோகிராம் கொத்தமல்லி மீட்பு

பொது மக்களிடமிருந்து தகவல் கிடைத்ததன் அடிப்படையில் சுமார் 10 ஆயிரம் கிலோகிராம் கொத்தமல்லி ஏற்றி வந்த லொறியொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை கைப்பற்றப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பழுதுபட்டுப்போனதால் அதன் இயற்கைத்தன்மையை மாற்றி செயற்கையான முறையில் பளபளப்பாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்காக இந்த கொத்தமல்லி ஏற்றி வரப் படுகிறது என்று தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஒவ்வொன்றும் தலா 400 கிலோ கிராம் கொண்ட 25 கொத்தமல்லி மூடைகள் லொறியொன்றிலிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 | 50 | 60 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 75 | 90 | 90 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 80 | 160 | 100 | 100 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 | 140 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 45 | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 80 | 60 | 60 | 70 | 100 | 80 | 60 |
| கரட் | 100 | 100 | 90 | 100 | 120 | 80-200 | 80 |
| பூசணி | 30 | 30 | 15 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 80 | 30 | 30 | 50 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 20 | 30 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 90 | 120 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 160 | 90 | 100 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 60 | 80 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 50 | 140 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 120 | 140 | 100 | 150 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 70 | 120 | 80 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 40 | 100 | 80 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 200 | 300 | 300 | 350 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 120 | — | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 40 | — | 50 | — | 60 |
| கீரை – 1பிடி | 20 | 40 | 20 | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 450 | 400 | 350 | 300 | 600 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 40 | 30-35 | 50 | 40 |
| இராசவள்ளி | 150 | 250 | 100 | 140 | 160 | 160 | 150 |
| வெங்காயப்பூ | — | 200 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | — | 120 | 70 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 40 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 40 | 10 | 20 | 20 | 10 | 15 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## சந்திரிகா இலங்கையின் ஜனாதிபதியானார் 164

அதனால் காமினி திசநாயக்க வெடி வைத்து கொல்லப்பட்டார். அதனால் காமினி திசநாயக்கவின் மனைவி சிறீமாவை தனது வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சி அறிவித்தது.

**சந்திரிகா வெற்றி**

இலங்கையின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 1 கோடியே 9 இலட்சம் ஆகும்.

வாக்கு எண்ணிக்கையின் தொடக்கத்திருலிருந்தே முன்னணி பெற்ற சந்திரிகா தொடர்ந்து அதே நிலையைத் தக்க வைத்து அமோக வெற்றி பெற்றார்.

சந்திரிகாவுக்கு 47 இலட்சத்து 9 ஆயிரத்து 205 வாக்குகள் கிடைத்தன. இது செல்லுபடியான 75 இலட்சத்து 51 ஆயிரத்து 525 வாக்குகளில் 62.27 சதவீதமாகும். ஜனாதிபதி தேர்தலில் இதுவரை யாரும் இவ்வளவு அதிக வாக்குகள் பெற்றதில்லை.

சிறீமாவுக்கு 27 இலட்சத்து 15 ஆயிரத்து 283 வாக்குகள் பதிவாகியிருந்தன. தேர்தலில் போட்டியிட்ட வேறு 4 வேட்பாளர்கள் மிகக் குறைந்த வாக்குகள் வாங்கி டெபாசிட் இழந்தனஃ.

22 தேர்தல் மாவட்டங்களில் பெரும்பாலான மாவட்டங்களில் சந்திரிகா அதிக வாக்குகளைப் பெற்றார்.

சண்டை நடந்து வரும் கிழக்கிலும் சந்தி ரிகாவுக்கு அதிக வாக்குகள் கிடைத்தன. அங்கு தமிழர் களும் முஸ்லிம்களும் அதிகம் வாழ்ந்து வருகின்றார்கள்.

சந்திரிகா 4 ஆவது ஜனாதிபதியாக பதவி ஏற்கும் விழா 12-11-1994 அன்று நடந்தது.

சுப்ரீம் கோர்ட்டு தலைமையில் நீதிபதி ஜி.பி.எஸ். டி.சில்வா அவருக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**தமிழில்**

பதவிப்பிரமாணத்தை சந்திரிகா தமிழ், சிங்களம், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் எடுத்துக் கொண்டார். பதவி ஏற்றபோது சங்குகள் ஒலித்தன. முரசுகள் முழங்கின.

பதவி ஏற்பு விழா முடிந்ததும் அவர் இராணுவ அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அப்போது 21 குண்டுகள் முழங்கின.

பிரதமராக இருந்த சந்திரிகா ஜனாதிபதியாகப் பதவியேற்றதைத் தொடர்ந்து அவரது மந்திரிசபை கலைக்கப்பட்டது.

தனது தாயார் சிறிமாவோ பண்டார நாயக்கவைப் பிரதமராகச் சந்திரிகா நியமித்தார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

பெண்களும் அரசியலில் பெருமை பெற முடியும் என்பதற்கு வழியமைத்துக் கொடுத்து உலகில் முதல் பிரதமர் என்ற பெருமை பெற்றவர் சிறிமாவோ பண்டார நாயக்க.

இப்போது அவரது வாரிசாக உருவாகி இருப்பவர் அவரது இளையமகள் சந்திரிகா.

சிறிமாவோ பண்டார நாயக்கவுக்கு 2 மகள்களும் ஒரு மகனும் உண்டு. மூத்த மகள் சுநேத்திரா சமூக சேவையில் நாட்டம் கொண்டவர். ஆனால் அரசியலில் ஈடுபாடு இல்லாதவர். மகன் அனுரா. அரசியலில் ஆர்வம் கொண்டவர்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அனுரா, பின்னர் தாயுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக் சுதந்திரக்கட்சியை விட்டு விலகினார்.

**காதல் திருமணம்**

சந்திரிகா 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி பிறந்தார். தொடக்கக் கல்வியை இலங்கையில் முடித்த அவர் பின்னர் மேல் படிப்புக்காகப் பரீஸ் சென்றார். அங்கு 1968 ஆம் ஆண்டு சமூக இயலில் உயர் படிப்புப் படித்து தேறினார். பின்னர் இலங்கை திரும்பினார்.

அப்போது இலங்கையில் முன்னணி நடிகராகத் திகழ்ந்தவர் விஜயகுமாரதுங்க. மார்க்சிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்.

விஜயகுமாரதுங்க-சந்திரிகா இடையே காதல் மலர்ந்தது. இவர்களது திருமணத்துக்குச் சந்திரிகா வீட்டில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. ஆனால் அந்த எதிர்ப்பையும் மீறி அவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

**சுட்டுக் கொலை**

விஜயகுமார முதலில் சுதந்திர கட்சியில் இருந்தார். அந்த கட்சி சார்பாக இரு முறை பாரா ளுமன்ற தேர்தலில் போட்டி யிட்டு தோல்வி அடைந்தார்.

விஜயகுமாரதுங்கவுக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்க குடும்பத்துக்கும் ஒருபோதும் ஒத்துப் போவதில்லை.

எனவே விஜயகுமாரதுங்கவும் அவரது மனைவி சந்திரிகாவும்சுதந்திர கட்சியை விட்டு விலகினர்.

பின்னர் விஜயகுமாரதுங்க மாகாண கட்சி என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். யாழ்ப்பாணத்தில் அமைதியை ஏற்படுத்த விடுதலைப்புலிகளுடன் பல முறை பேச்சு நடத்தினார்.


ஜனதா விமுக்தி பெரமுன என்ற சிங்கள தீவிரவாத இயக்கம் நடத்திய வன்முறையில் 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி விஜயகுமாரதுங்க கொலை செய்யப்பட்டார்.



(தொடரும்)

## கிருலப்பனை கூட்டத்தில் பங்கேற்பது

# ஒழுக்க விதி மீறலாகாது



## டலஸ் அழகப்பெரும விளக்கம்

(கொழும்பு)

**கிருலப்பனையில் நடைபெறவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்க விதி மீறலாக கருதப்பட முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சித் தலைவருக்கு தெரிந்து கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் காலியில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்காது. கிருலப்பனையில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்பது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய விடயமாக கனவில் கூட நினைக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இரண்டு குழுக்கள் காணப்படுகின்றன. அரசாங்கத்திற்கு ஆதரவான குழுவொன்றும் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் குழுவொன்றும் காணப்படுகின்றன.

கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பது பிழை என்றால், நாடாளுமன்றில் எதிர்க்கட்சியில் அமர்வதும் பிழையானதேயாகும்.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் மத்திய செயற்குழு உள்ளிட்ட குழுக்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன், எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்கின்றமை குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி செய்யும் தரப்பு காலியில் நடத்தும் கூட்டத்தில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பினரால் பங்கேற்க முடியாது என அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## ஓய்வுபெற்ற ஜனாதிபதி ஒருவருக்கு அரசு 30 பேரை பாதுகாப்புக்கு வழங்க முடியும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



ஒய்வு பெற்றுக்கொண்ட ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்பிற்காக உச்ச அளவில் 30 பாதுகாப்பு உத்தியோகத்தர்களே வழங்கப்பட முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இறுதியாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தகவலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வுபெற்றுக் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்பிற்கு எத்தனை பாதுகாப்பு உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்துவது என்பது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உச்ச நீதிமன்றில் தீர்ப்பு ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் பாதுகாப்பை வரையறுக்கும் வகையிலான உச்ச நீதிமன்றின் தீர்ப்பினை நான் கேட்டுப் பெறவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தமக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு உச்ச நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உச்சவரம்பினை நீதிமன்றம் நிர்ணயம் செய்திருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் பாதுகாப்பினை பெற்றுக் கொண்டு தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால், பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்ந்து தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு இராணுவத்தினர் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் தற்போது பாதுகாப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்தவின் மேதினக் கூட்டத்திலேயே குருநாகல் பிரதிநிதிகள் பங்கேற்பர்

### மாகாண, உள்ளூராட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கிருலப்பனையில் இடம்பெறும் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்சியினால் எத்தகைய ஒழுக்காற்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும் அது குறித்து கவலையில்லை என்றும் அந்த உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சாலிந்த திசாநாயக்க ஆகியோர் தலைமையில் குருநாகலையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதனையடுத்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இதனை தெரிவித்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, மக்கள் துரோக அரசாங்கத்திற்கு எதிரான ஒரேயொரு மேதினக் கூட்டம் கிருலப்பனையிலே இடம்பெறவுள்ளதாக குறிப்பிட்டார்.

அரசாங்கம் பிரிந்து மேதினக் கூட்டங்களை நடத்தவுள்ளது.

எனினும் மக்கள் துரோக அரசாங்கத்திற்கு எதிரான கூட்டம் கிருலப்பனையிலே இடம்பெறவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒழுக்க விசாரணைகளுக்கு அஞ்சி தாம் அரசியலில் ஈடுபடுவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஒழுக்காற்று விசாரணைகளுக்கு அஞ்சி அரசியல் செய்பவர்கள் அல்ல நாங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோல்வியடைய முழுக் காரணமாக இருந்தவர்களே இன்று ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## இன்று ஒரு தகவல்

### புது வருடச்சிந்தனைகள்

போனவை போயொழியட்டும்!

வேதனைச் சமாதியின் மீது சாதனை மலர்கள் பூக்கட்டும்!

நம்மை நாம் உயர்த்திக் கொள்ளவும் மாற்றிக் கொள்ளவும் வாழ்வில் சில சந்தர்ப்பங்களே கிடைக் கின்றன. அவற்றுள் புது வருடம் முக்கியமானதொன்று.

இந்த வருடத்தில் இருந்து நான் அந்தக் கெடுதல் வேலையைச் செய்யமாட்டேன். இந்த வருடத்தில் இருந்து அந்தத் தீய குணத்தை விட்டொழிப்பேன் என்பதாக சில ஆக்கபூர்வமான சபதங்களை இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் எடுக்கமுடியும். எனவே இத்தகைய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்வதே புத்திசாலித்தனமான செயல்.

முன்னேற்றப் பாதையில் முதலடி இலட்சியங்களையும் குறிக்கோள்களையும் வரையறுத்துக் கொள்வதே. இலக்கு இன்றி அலையும் பறவையினம் போல வாழ்ந்து இனியும் காலத்தைக கடத்துவது என்பது இந்தக் காலத்தில் முடியாது.

சுற்றுப் புறமும் சூழ்நிலையும் பிரச்சினைகளைப் பூதாகரமாக ஆக்குகின்றன. எங்கும் பிரச்சினை, எதற்கெடுத்தாலும் பிரச்சினை என்று ஆகி விட்ட பிறகு விழிப்புணர்ச்சியுடன் கூடிய நமது செயல்களே வியத்தகு பலன்களைத் தர இயலும்.

உலகம் சுருங்கச் சுருங்க உள்ளங்களும் சுருங்கத் தொடங்கும்.

உண்மைக்கும் நேர்மைக்கும் கேலிச் சிரிப்புகளும் பைத்தியக்காரப் பட்டங்களுமே மிஞ்சுகின்றன. இவற் றைக்கண்டு விட்டு இனி இவற்றிற்கு மதிப்பில்லை போலும் என்று நாம் எண்ண வேண்டியதில்லை.

ஒரு புகைப்படத்தில் ஒருவன் சிரிப்பதைப் பார்த்து விட்டு அவன் எப்போதுமே இப்படித்தான் நடைமுறை வாழ்விலும் இருப்பான் என்று ஒருவன் முடிவுக்கு வருவானேயானால் அது எவ்வளவு அறிவற்ற தவ றான முடிவாக இருக்கும்!

இப்படிப்பட்ட வகையிலேயே உண்மை பற்றியும் நேர்மை பற்றியும் பலர் முடிவுக்கு வருகின்றனர்.

எனவே இத்தகைய புகைப்பட முடிவை இந்த ஆண்டு எவரும் எடுக்காமல் இருக்கட்டும்.

இந்த உலகம் நம்மை அறிந்து கொள்ளும்படியாக வாழ முடியாமல் விட்டாலும்

நான்கு பேர் நம்மை வாழ்த்தும் படியாகவும் நான்கு பேர் நம்மை விரும்பும் படியாகவும் வாழ்வது அவசியம்.

தாழ்வு எண்ணங்களை நீக்கித் தன்னம்பிக்கை பெற்று விரக்தி எண்ணங்களை அகற்றத் துணிவு பெற்று அதிகார தோரணையை நீக்கி அன்பைக் கைக் கொண்டு புத்துணர்ச்சியுடன் அறிவு பூர்வமாக உழைத்துப் பீடு நடை போட்டு புதிய ஆண்டினை நம் வாழ்வின் எழுச்சி மிகுந்த ஆண்டாக ஆக்கிக் கொள்வோம்.

லேனா தமிழ்வாணன்




# மாபெரும் மேதை



...இவற்றிற்கான விடைகளை நிச்சயமாகக் கூறுவார். ஏனெனில், அவர் ஒரு மாபெரும் மேதை எனப்பலர் புகழக் கேட்டிருக்கிறேன என்றாள்.

அதைக் கேட்ட மன்னன் யோசனையில் ஆழ்ந்தவாறே தன் பட்டத்து ராணியைக் கண்டு விடயத்தை கூறினான்.

நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நம் மகள் அமரேஷை விரும்புகிறாள் என்று தெரிகிறது. இந்தக் கேள்விகளுக்கான விடைகளை அவளே சொல்ல முடியும். இருப்பினும், அமரேஷை கேட்கச் சொன்னது அவனது புத்தி கூர்மையை நீங்கள் காண வேண்டும் என்பதற்காகத்தான், என்றாள்.

ஓ! இதுவா விடயம். என் மகளே எனக்கு பரீட்சை வைக்கிறாளா? சரி. இதனால் நான் இரண்டு விதத்தில் பயன் பெறுவேன்.

ஒன்று நாட்டின் மானத்தைக் காப்பது. மற்றது அலையாமல் எனக்கு மாப்பிள்ளை கிடைப்பது. இதுவும் ஒரு வகையில் நல்லதே, என்றார் மன்னர்.

அமரேஷை அழைத்து வரச் சொன்னார் மன்னர்.

அவன் நல்ல அழகன் என்று அவனது தோற்றத்தையும், நடை, உடை பாவனைகளைக் கொணடும் மன்னர் தெரிந்து கொணடார். அவனை உட்காரச் சொல்லி விடயததைக் கூறினார்.

அரசே பக்ரிநாத் மாபெரும் பண்டிதர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் சாஸ்திரங்களையும், கற்பனைகளையும், உண்மைகளையும் தன் மூன்று கேள்விகளில் அடக்கி உள்ளார்.

அவரது முதல் கேள்வி தர்க்க சாஸ்திரத்தைச் சார்ந்தது. அதற்கு விடை எனக்கு மரணம் இல்லை என்பதே.

இது உலகறிந்த பச்சைப் பொய். கடவுளின் படைப்பில் மரணம் அடையாத ஜீவராசியே கிடையாது. ஆனால், தர்க்க சாஸ்திரப்படி யாராலும் இதனை மறுக்க முடியாது. ஏனெனில், அந்த சாஸ்திரப்படி, நான், எனது என்ற சொற்களெல்லாம் ஆத்மாவைக் குறிப்பன. ஆத்மாவிற்கு அழிவே இல்லை. எனவே, சாதாரண முறையில் பார்த்தால் இது பொய் தர்க்க சாஸ்திரப்படி இது மெய், என்றான்.

இந்த பதிலைக் கேட்ட மன்னன் அவனது அறிவை வியந்தவாறே, அருமை... சரியான விடை. மற்ற இரு கேள்விகளின் பதில், என்றார்.

இரண்டாவது கேள்வியில் கேட்க முடியாத ஒலி என்பது மனதில் ஏற்படும் எழுச்சி. அது சொற்களாய் வெளிவருவதற்கு முன் எழும் ஒலி. பிறகே அது வாயால் கூறப்படுகிறது. அதை உணர்பவனைத் தவிர மற்றவன் அறிய மாட்டான். அதுபோலக் காண முடியாத காட்சி கற்பனை. கற்பனையில் காணும் காட்சிகளை உண்மையில் காண முடியாது. எனவே, மன உணர்வு, கற்பனை என்பனவே இரண்டாவது கேள்விக்கான பதில் என்றான்.

ஆகா! சரியான விடைதான். சரி மூன்றாவது கேள்வியின் விடை என்ன? என்று கேட்டார் மன்னர்.

ஆண்டி முதல் அரசன் வரை எளிதில் வசப்படுவது புகழ்ச்சி ஒன்றினாலேயே.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

25 04.2016

- 1607 - எண்பதாண்டுப் போர்: கிப்ரால்ட்டரில் டச்சுக் கடற்படையினர் ஸ்பானிய கடற்படைக் கப்பலைத்தாக்கி அழித்தனர்.
- 1829 - மேற்கு அவுஸ்திரேலியாவில் சார்ல்ஸ் ஃபிரெமாண்டில் சலேஞ்சர் என்ற கப்பலில் வந்து தரையிறங்கி சுவான் ஆற்று குடியேற்றத்தை ஆரம்பித்தார்.
- 1861 - அமெரிக்க உளநாட்டுப் போர்: கூடடணிப் படைகள் வாஷிங்டன், டிசியை அடைந்தனர்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டணிப் படைகள் டேவிட் பராகுட் தலைமையில் லூசியானாவின் நியூ ஓர்லென்ஸ் நகரை கூட்டமைப்பினரிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினர் பெரும் வெற்றி பெற்றனர்.
- 1898 - ஐக்கிய அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.
- 1915 - முதலாம் உலகப் போர்: அவுஸ்ரேலியா, பிரித்தானியா, நியூசிலாந்து மற்றும் பிரெஞ்சுப் படைகள் துருக்கியின் கலிப்பொலியை முற்றுகையிட்டனர்.
- 1916 - அயர்லாந்தில் இராணுவச் சட்டத்தை ஐக்கிய இராச்சியம் பிறப்பித்தது.
- 1916 - அன்சாக் நாள் முதற் தடவையாக நினைவு கூரப்பட்டது.
- 1945 - நாசி ஆக்கிரமிப்பு இராணுவம் வடக்கு இத்தாலியில் இருந்து விலகியது.
- 1961 - ரொபர்ட் நொய்ஸ் ஒருங்கிணைந்த மின்சுற்றுக்கான (integrated circuit) காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1966 - தாஷ்கெண்ட் நகரத்தின் பெரும் பகுதி நிலநடுக்கத்தால் அழிந்தது. 300,000 பேர் வீடுகளை இழந்தனர்.
- 1974 - போர்த்துக்கலில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த பாசிச அரசு கவிழ்ககப்பட்டு மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது.
- 1982 - காம்ப் டேவிட் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்ரேலியப் படைகள் முழுவதுமாக சினாய் தீபகற்பத்தில் இருந்து வெளியேறியது.
- 1983 - பயனியர் 10 விண்கலம் புளூட்டோ கிரகத்தின் சுற்றுப்பாதையைத்தாண்டிச் சென்றது.
- 1983 - ஹிட்லரால் எழுதப்பட்டதாகச் சொல்லபபடும் "ஹிட்லரின் நாட்குறிப்புகள்" நூலின் முதல் பகுதியை ஜெர்மனியின் "ஸ்டேர்ன்" இதழ் வெளியிட்டது.
- 1986 - சுவாசிலாந்தின் மன்னனாக மூன்றாம் முசுவாட்டி முடிசூடினார்.
- 1988 - இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.
- 2005 - இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937 இல் களவாடப்பட்ட 1700-ஆண்டுகள் பழமையான சதுர நினைவுததுாபியின் கடைசித் துண்டு எதியோப்பியாவுக்கு கொண்டுவரப்பட்டது.
- 2005 - ஜப்பானில் தொடருந்து விபத்தில் 107 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைதாரியினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பில் இராணுவத தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்து 5 பாதுகாவலர்கள் கொல்லபபட்டனர்.

### பிறப்புகள

- 1599 - ஒலிவர் குரொம்வெல், இங்கிலாந்தில் முடியாட்சியை நீக்கியவர், அரசியல்வாதி. (இ. 1658)
- **1874 - மார்க்கோனி, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற இத்தாலியர்.(இ. 1937)**
- 1906 - புதுமைப்பித்தன், தமிழக எழுத்தாளர். (இ. 1948)
- 1940 - அல் பசீனோ, அமெரிக்கத் திரைப்பட நடிகர்
- 1949 - டொமினிக் ஸ்ட்ராஸ்-கான், பிரெஞ்சு பொருளியலாளர், அரசியல்வாதி

### இறப்புகள்

- 1744 - ஆன்டர்சு செல்சியசு, சுவீடிட வானியலாளர். (பி. 1701)
- 1989 - வ.சுப. மாணிக்கம், தமிழறிஞர். (பி. 1917)
- 2005 - சுவாமி இரங்கநாதானந்தர், இந்திய மதகுரு. (பி. 1908)
- 2007 - ஆர்தர் மில்ட்டன், ஆங்கிலேயத் துடுப்பாளர். (பி. 1928)

### சிறப்பு நாள்

- அவுஸ்திரேலியா, நியூசிலாந்து - ஆன்சாக் நாள்
- போர்த்துக்கல் - விடுதலை நாள். (1974)
- இத்தாலி - நாசிகளிடம் இருது விடுதலை. (1945)

**மார்க்கோனி, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர்**



மார்க்கோனி 1874 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 இல் இத்தாலிய நாட்டில் பொலொனா நகரில் பிறந்தவர். தந்தை கைசப் மார்க்கோனி. தயார் ஆனி ஜேம்சன்- அயர்லாந்தைச் சேர்ந்தவர்.மார்க்கோனி இளமையிலேயே வசதியான வாழ்க்கையைப் பெற்றார். போலக்னோ,புளோரன்ஸ், லெகார்ன் முதலிய ஊர்களில் தனிப்பட்ட முறையில் இவருடைய ஆரம்பக் கல்வி அமைந்தது. இவர் ஏப்ரல் 25, 1874 - ஜுலை 20, 1937) வால்வுகளுள்ள வானொலியைக் கண்டு பிடித்தவர். "நீண்ட தூரம் ஒலிபரப்பப்படும் வானொலியின் தந்தை" எனப்படுபவர். "கம்பியற்ற தகவல்தொடர்பு முறை" மற்றும் "மார்க்கோன இக்கண்டுபிடிப்பிற்காக1909-இல் இயற்பியலுக்கான நோபல் பரிசை கார்ல் பெர்டினாண்ட் பிரவுன் உடன் இணைந்து பெற்றார். இவர் ஒரு தொழில் முனைவர், தொழிலதிபர், மற்றும் 1897 இல் "மார்க்கோனி வானொலி நிறுவனத்தின் நிறுவனர்", "வானொலி"மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளை உருவாக்கியவர்.இளமைப் பருவத்தில் இவர்க்குப் ப்டிப்பில் ஆர்வம் மிகிதி. வீட்டிலேயே இருந்த நூல் நிலையத்தில் இருந்த அறிவியல் நூல்களைப் படித்தறிந்தார். வளர்ந்த பிறகும் இவர் பல்கலைக் கழகக் கல்வி எதனையும் பயிலவில்லை. இவருக்கு வீட்டிலேயே ஆசிரியர்கள் வந்து கல்வி கற்பித்தனர். இயற்பியலில் குறிப்பாக மின்சார இயலில் இவருக்கு அதிக நாட்டம் ஏற்பட்டது. 1905-ல் மார்க்கோனி ஓபிரெயின் என்பவரை மணந்தார். இவ்விணையருக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் பிறந்தனர். இவருடைய காலத்தில் மின்காந்த அலைகள் பற்றிய கருத்தை ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் என்ற அறிஞர் வெளியிட்டிருந்தார். அவற்றைப் பற்றி மேலும் ஆராய்ந்து ஹென்ரிச் ருடால்ப் ஹெர்ட்சு என்ற அறிஞர் ஆய்வுகளின் மூலம் அவற்றை உறுதிப் படுத்தினார். மின்காந்த அலைகளின் கொள்கைகளானது ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் மற்றும் மைக்கேல் ஃபாரடே ஆகியோரின் ஆராய்ச்சிகளின் மூலம் முன்பே பெறப்பட்டிருந்தன. மின்காந்த அலைகளை அலைபரப்ப முடியும். மேலும் அவை வெளி முழுவதும் நேர்க்கோடுகளில் பயணிக்கின்றன என்பதையும், அவற்றை சோதனைக் கருவிகள் மூலமாக பெற முடியும் என்பதையும் ஹெர்ட்ஸ் செயல்முறை விளக்கமளித்தார்.


## புதிய சட்டம் வரும் வரை

# பயங்கரவாதத் தடைச்சட்டமே இலங்கையில் அமுலிலிருக்கும்

### பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**புதிய சட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் வரை நாட்டில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருக்கும் என்று பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**



ஏற்கனவே பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திடம் உறுதியளித்துள்ளது.

எனினும் இன்னும் அதற்கான முழுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன.

இந்தநிலையில், அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் மனித உரிமை அறிக்கைகளிலும் பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

## வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தொடரும் கைது பயங்கரவாதப் பிரிவுடன் ஆணைக்குழு உரையாடல்

கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளுடன் எதிர்வரும் தினங்களில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மனித உரிமை மீறல் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதாகத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அதிகளவிலான முறைப்பாடுகளை பதிவுசெய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பிரதேசத்தில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் தொடர்பு வைத்திருந்ததாகத் தெரிவித்து சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட நபருடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் பேரில் இது வரை வவுனியாவைச் சேர்ந்த பெண்ஒருவர் உள்ளிட்ட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பயங்கரவாத விசாரணைப் பிரிவினருக்கு எதிராக பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளனர்.


அத்தோடு. கிளிநெச்சி பரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் தந்தை பயங்கரவாத விசாரணைப் பிரிவினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும், பூசா தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதைக்குட்படுத்தப்படும் தனது மகனின் நிலைமை குறித்தும் முறைப்பாடுகளை ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளை கருத்தில் எடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு, இது தொடர்பாக பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை வெகுவிரைவில் நடத்த தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 701

Search for people, places and things  Nagendram  Home

**விமலேந்திரன்**




**கவிதா**




**சிந்துஜா**




**மது**



**துளசிகா**




**சாமினி**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "துர்முகி வருஷ" இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017

## ராகுவும் குருவும் இணைகிறது! நாளும் இலாபம் குவிகிறது!



*ராகுவும் குருவும் இணைகின்றது! நாளும் லாபம் குவிகின்றது! பிறர் பாராட்டும் விதத்தில் வாழ்க்கையை நடத்தும் விருச்சிக ராசி நேயர்களே!*

மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. இப் புத்தாண்டு சுக்ர பலத்தோடும், சூரிய-புத சேர்க்கையோடும், குரு, ராகு இணைப்போடும் பிறந்திருப்பதால் இனிய ஆண்டாகவே உங்களுக்கு அமையப் போகின்றது. நினைத்தது நிறைவேறும்.

நிகழ்காலத் தேவைகள்பூர்த்தியாகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

ஜென்ம ராசியில் சனியோடு இணைந்திருக்கும் கிரகம் செவ்வாயாகும். ராசிநாதன் செவ்வாய் ராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். உள்ளத்தில் உற்சாகம் குடி கொள்ளும். எதிர்பார்த்த லட்சியங்கள் எளிதில் நிறைவேறும்.

உங்கள் ராசியைப் பொறுத்தவரை ஆண்டின் தொடக்கத்தில் முத்தான தொழில் வளத்தை ஏற்படுத்தும் இடமான பத்தாமிடத்தில் ராகு சஞ்சரிக்கின்றார். அவரோடு தன பஞ்சமாதிபதியான குருவும் இணைந்திருக்கின்றார். தொழில் ஸ்தானத்தில் தனாதிபதி சஞ்சரிப்பதால் செய்யும் தொழில் சிறப்பான முறையில் நடைபெறும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் லாபம் கூடுதலாகக் கிடைத்து இதயத்தை மகிழ்விக்கும்.

குரு உங்கள் ராசிக்கு 2, 5ஆம் இடத்திற்கு அதிபதியாவார். இரண்டாம் இடம் என்பது வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும். பொன்னான வாய்ப்புகள் உங்கள் கண்ணெதிரில் வந்து நிற்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். எண்ணிய காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள். அந்நியரின் ஆதரவு கிடைக்கும்.

சுக ஸ்தானத்தில் கேது இருப்பதால் விநாயகர் வழிபாடு உங்கள் வெற்றிக்கு வித்திடும். குறிப்பாக ஆண்டின் தொடக்கத்தில் திசைமாறிய தெய்வங்களாக விளங்கும் விநாயகப் பெருமான், முருகப்பெருமான், குரு தட்சிணாமூர்த்தி ஆகியவை வீற்றிருந்து அருள் வழங்கும் ஆலயங்களை நோக்கி அடியெடுத்து வைப்பது நல்லது.

பத்தில் ராகு இருப்பதால் முத்தான தொழில் அமையவும், முன்னேற்றங்கள் கூடவும், ராகு-கேதுக்களுக்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்ய வேண்டும். சப்தமாதிபதி சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால் சுப நிகழ்ச்சிகள் இல்லத்தில் ஏராளமாக நடைபெறும். முக்கிய புள்ளிகளில் ஒருவராக நீங்களும் மாறப்போகிறீர்கள்.

தெய்வபலம் உங்களுக்கு கூடுதலாக இருப்பதால் வரும் வாய்ப்புகள் எல்லாம் வளம் சேர்க்கும் வாய்ப்புகளாகவே வந்து சேரும். எதிர்ப்புகள் அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும். பேச்சுத் திறத்தால் பெரும் லாபம் வந்து சேரும். ஆச்சரியப்படும் விதத்தில் உங்கள் முன்னேற்றம் அமையப் போகின்றது.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி 17 வரை!**

இக்காலத்தில் உள்ள கிரக நிலைகளின் அமைப்பின் படி புத ஆதித்ய யோகம், உச்ச சுக்ரனின் ஆதிக்கம், செவ்வாய், சனி சேர்க்கை ஆகிய அமைப்பில் கிரக நிலைகள் உலாவருகின்றன.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் பயப்படத் தேவையில்லை. இரண்டாவது சுற்றாக சனியின் ஆதிக்கம் நடப்பவர்களுக்கு வளர்ச்சி அதிகமாக இருக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றிப் புதுமை படைப்பீர்கள். அணுகியவுடன் அரசாங்க உதவி கிடைக்கும்.

பழகியவர்களின் ஆதரவால் பணிநிரந்தரம் உருவாகும். சகோதர ஒத்துழைப்பும், தனித்துச் செயற்படும் அமைப்பும் ஏற்படும் நேரமிது. ஆயினும் உங்கள் ராசியிலேயே சனியும், செவ்வாயும் இணைந்திருப்பதால் அடிக்கடி உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் ஏற்பட்டு அகலும். மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருக்கும். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். வீடுகட்டும் வாய்ப்பு அல்லது வாங்கும் வாய்ப்பு வந்து சேரும். சுபவிரயங்கள் செய்ய உகந்த நேரம் இது என்பதால் பழைய வீட்டைப் புதுப்பிக்கும் பணியைத் தொடரலாம்.




பாகப்பிரிவினையை சுமுகமாக முடித்துக்கொண்டு உங்களுக்கென்று தனியாக இல்லம்கட்டிக் குடியேறும் முயற்சியில் ஆர்வம் காட்டலாம். இதுவரை ஒத்துவராத சகோதரர்கள் இப்பொழுது இணக்கமாக நடந்து கொள்வர். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். பூர்வீக சொத்துக்களால் ஒரு சிலருக்கு பெரிய அளவில் தனலாபம் கிடைக்கும். அந்த தனலாபத்தை தொழிலுக்கு மூலதனமாக்கித் தொழில் நிலையத்தை விரிவு செய்ய முன்வருவீர்கள்.

என்ன இருந்தாலும் முரண்பாடான செவ்வாய், சனி கிரக சேர்க்கைக்கு அங்காரக வழிபாடும், சனி பகவான் வழிபாடும் வைத்துக்கொள்வது நல்லது. வைத்தீஸ்வரன் கோவில் மற்றும் திருநள்ளாறு போன்ற ஸ்தலங்களுக்கு வருடத் தொடக்கத்திலேயே அனுகூலமான நாளில் சென்று வழிபட்டு வந்தால் வளர்ச்சி கூடும்.

பத்தில் குரு சஞ்சரிப்பதால் பதவியில் ஒரு மாற்றம் உண்டு என்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பொதுநலம் மற்றும் அரசியலில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர் களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவோடு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும் நேரமிது.

**ஆடி 18-ல் தேடி வரும் யோகம்!**

துர்முகி வருடம் ஆடி மாதம் 18-ந் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இந்த குருப் பெயர்ச்சியின் விளைவாக லாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தேவைக்கேற்ப பணம் வந்துகொண்டே இருக்கும். 11-ம் இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள அரசு வழிகளிலும் சலுகைகள் கிடைக்கும். ஆற்றல்மிக்கவர்களும் ஒத்துழைப்புச் செய்வர்.

அந்நிய தேசத்தில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வந்து சேரும். புண்ணிய காரியங்கள் செய்வதற்கு கொடுத்து உதவுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் கூடும். குறிப்பாக வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான சீர்வரிசை சாமான்கள், ஆடை, ஆபரணங்கள் மற்றும் தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்க முற்படுவீர்கள். காரிய வெற்றி ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

லாப ஸ்தானம் என்று கருதப்படும் பதினோராமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது லாபம் அதிகரிக்கும். கிளைத் தொழில்கள் செய்யும் வாய்ப்பு உருவாகும். புதிய பங்கு தாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தை பெருக் கிக் கொடுப்பர். வியாபார விரோதங்கள் விலகும். புதிய பணியாளர்களை நியமித்து உற்சாகத் தோடு செயற்படத் தொடங்குவீர்கள். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிட்டும். ஒளி மயமான எதிர்காலத்திற்கு உத்திர வாதம் தரும் இடம் பதினோராமிடமாகும்.

குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. அதற்குரிய ஆதிபத்தியங்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறும்.

"மூன்றினை குருதான் பார்த்தால் முன்னேற்றம் வந்து சேரும்" என்பர்.

அந்த அடிப்படையில் இதுவரை இருந்த முன்னேற்றத்தைக் காட்டிலும் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். தேக்க நிலையிலுள்ள காரியங்கள் இனி சிறப்பாக நடைபெறும். ஆக்கபூர்வமாக சிந்தித்து முடிவெடுப்பீர்கள். உயர் பதவிகள் கிடைக்கும். எதிர் காலத்தை இன்பமயமாக அமைத்துக்கொள்ள வாய்ப்புகள் வந்து சேரும்.

"ஐந்தினை குருதான் பார்த்தால் அஞ்சிட வேண்டாம்" என்பர்.


எனவே, குருவின் பார்வையால் குழப்பங்கள் தீரும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும். இழப்புகளை ஈடுசெய்ய ஏதேனும் ஒரு வழியில் தொகை வந்து சேரும். பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும். திருமணத் தடைகள் நீங்கும்.

"ஏழினைக் குருதான் பார்த்தால் இல்லறம் இனிதே வாய்க்கும்" என்பர்.

எனவே இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும். வழக்குகள் சாதகமாக அமையும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வந்து மனதை மகிழ்விக்கும். உதாசீனப்படுத்தியவர்கள் இனி உங்களைத் தேடிவந்து உதவி கேட்பர். இனிக்கும் விதத்தில் இல்லற வாழ்க்கை அமையும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி வருடம் விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத்தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். சுப காரியப் பேச்சுக்கள் முடிவடையும். உற்சாகத்தோடு பணிபுரிய உடல்நலம் இடம் கொடுக்கும். இதுவரை அக்கறை காட்டாத செயலில் கூட ஆதாயம் கிடைக்கும். இல்லத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும் வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடுதலாகும். இடமாற்றம் இனிய மாற்றமாக அமையும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வு வந்து சேரும்.



குருப்பெயர்ச்சிக்குப் பின்னால், அதாவது ஆடி 18 முதல் தேடிவரும் யோகங்கள் ஏராளம். குறிப்பாக வங்கிச் சேமிப்பு உயரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். தங்குதடைகள் அகலும். தங்கமும், வெள்ளியும் சேரும். தாய் மற்றும் சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்க குடும்பத்தினர்கள் முன்வருவர். பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவதன் மூலம் பலன்கள் அதிகம் கிடைக்கும். திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபாடு செய்தால் நன்மையை நாளும் வழங்கும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

வக்ர காலங்கள் எல்லாம் அக்கறை செலுத்த வேண்டிய காலங்களாகவே உங்களுக்கு அமைகின்றது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பணப்பற்றாக்குறை ஏற்படலாம். இனத்தாரையும், அருகில் இருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது. சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் அதிகரிக்கும் சகோதர ஒற்றுமை கொஞ்சம் குறை யலாம். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். ஆதாயம் இல்லாத அலைச்சல் உண்டு. குடும்பச் சுமை கூடும். பிறரிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபடுவது நல்லது.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

செவ்வாய்க்கிழமை தோறும் விரதமிருந்து ஆறுமுகப் பெருமானை வழிபட்டு வாருங்கள். பௌர்ணமி தோறும் கிரிவலம் வந்து சிவாலயங்களை தரிசிப்பதன் மூலம் சிறப்பான நற்பலன்களைக் காணமுடியும்.

(நாளை தனுசு...)

# சந்தைப்படுத்தல் கல்வியத்துடன் லிட்ரோ காஸ் கைகோர்ப்பு




இலங்கையில் திரவப் பெற்றோலிய வாயு இறக்குமதியில் ஈடுபடும் மாபெரும்நிறுவனமான லிட்ரோ காஸ்,இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்துக்கு இந்த ஆண்டுக்கான நிறுவனசார் அனுசரணையாளராக செயற்படுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்நிகழ்வு லிட்ரோ காஸ்பிரதான அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இரு நிறுவனங்களினதும் சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் இந்த உடன்படிக்கை கைமாறப்பட்டிருந்தது.

லிட்ரோ காஸ்மற்றும் SLIM ஆகியவற்றுக்கிடையிலாக ஒன்றிணைவு என்பது சந்தைப்படுத்தல் துறையில் பல வாய்ப்புகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் சந்தைப்படுத்தல் துறையுடன் இலங்கை சந்தைப்படுத்தல்கல்வியகத்துடனான பங்காண்மை ஊடாக கைகோர்த்துள்ளமையையிட்டு மிகவும் பெருமையடைகிறோம். எமது விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மேலும் முன்நோக்கி கொண்டு செல்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளதுடன், எமது வர்த்தக நாமங்களை ஒன்றிணைத்து, நாடு முழுவதும் உறுதியான சமூகங்களை கட்டியெழுப்பவும் திட்டமிட்டுள்ளோம் என லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் சமிந்த எதிரிவிக்கிரம தெரிவித்தார்.

இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் ஸ்தாபிக்கப்பட்டது முதல் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவித்து அவர்களிடையே தகைமைகளை விருத்தி செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இந்தச் செயற்பாடுகள் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இக்கல்வியகத்தினூடாக வழங்கப்படும் 3-ம் தரப்பு சந்தைப்படுத்தல் தகைமைகளின் மூலம் மாணவர்கள் மற்றும் தேசத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இக்கல்வியகம் வருடாந்தம் 4000 தகைமை வாய்ந்த சந்தைப்படுத்தல் நிபுணர்களை வெள்வேறு தகைமை மட்டத்தில் உருவாக்கி வருகிறது. இலங்கை சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்தவர்களின் காப்பகமாக இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகம் திகழ்கிறது. 1970ஆம் ஆண்டு இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சந்தைப்படுத்தலுக்கான தேசிய அமைப்பு என்பதை உறுதி செய்யும் வகையிலும், இலாப நோக்கற்ற அமைப்பு எனும் வகையிலும் 1980-ம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டிருந்தது. இலங்கையில் சந்தைப்படுத்தல் தொழிலை மேம்படுத்துவதற்கான பொறுப்பை இந்த அமைப்பு ஏற்றிருந்ததுடன், இதற்காக சந்தைப்படுத்தல் கற்கைகளை வழங்குவதுடன் தேசிய மட்டத்தில் நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களை முன்னெடுப்பதையும் மேற்கொள்கிறது. இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தை முகாமைத்துவ சம்மேளனம் மற்றும் நிறைவேற்றுச் சபை மேற்பார்வை செய்வதுடன், இதில் தலைவர் மற்றும் வெவ்வேறு துறைகளின் நிபுணர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையில் திரவ பெற்றோலிய வாயு விற்பனையிலும் சந்தைப்படுத்தலிலும் சந்தை முன்னோடியாக லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட் (LGLL) செயற்படுகிறது. இணை நிறுவனமான லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிட்டெட் உடன் இணைந்து தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. லிட்ரோ காஸ் வர்த்தக நாமத்தின உரிமையாண்மையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், நாடு முழுவதையும் சேர்ந்த தனது 5000 விற்பனை மையங்களின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருகிறது. பாதுகாப்பு நியமங்களைக் கடுமையாக பேணுவதற்காக லிட்ரோ காஸ் நன்மதிப்பைக் கொண்டுள்ளது. கம்பனியின் கொள்கையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அங்கமாக கருதப்படுகிறது.




# சிறந்த ஹாட்வெயர் விற்பனை விருதுகளை வழங்கிய ஆர்பிகோ

2015 ஆம் ஆண்டில் ஆர்பிகோ ஹார்ட்வெயார் தயாரிப்புகளின் விற்பனையில் சிறப்பாக செயலாற்றிய ஹார்ட்வெயார் விற்பனையாளர்களை கௌரவிக்கும் மாபெரும் நிகழ்வை வாத்துவ, ப்ளூ வோட்டர்ஸ்ஹோட்டலில் ஆர்பிகோ முன்னெடுத்திருந்தது.

இலங்கையின் நிர்மாணத்துறை அபிவிருத்தியடைந்து வரும் நிலையில்,ஹார்ட்வெயர் தயாரிப்புகளுக்கான கேள்வி வளர்ச்சியடைந்த வண்ணமுள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டுக்காக வழங்கப்பட்ட விருதுகளில், நிறுவனத்தின் சகல ஹார்ட்வெயார் தயாரிப்புகளையும் போட்டிகரமான வகையில் விற்பனை செய்திருந்த விற்பனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் பங்களிப்பின் மூலமாக, நிறுவனத்தின் விற்பனைகள் மற்றும் வருமானம் பெருமளவு அதிகரிப்பை பதிவு செய்திருந்தன.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனியின் உள்நாட்டு உற்பத்தி விநியோக பிரிவின்,முகாமைத்துவ பணிப்பாளர் சுனில் லியனகே கருத்து தெரிவிக்கையில்,"பல துறைகளில் நன்மதிப்பை பெற்ற நாமமாக ஆர்பிகோ திகழ்கிறது.

பயன்படுத்தப்படும் பொருட்களின் தரத்தைப் பொறுத்து,நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களின் தரம் தங்கியுள்ளது. இதன் காரணமாக, இன்றைய காலகட்டத்தில் பல வணிக மற்றும் சிறு நிர்மாண செயற்பாடுகளுக்காக கொள்வனவுகளில் ஈடுபடுவோரின் ஹார்ட்வெயார் பொருட்களுக்கான தெரிவுக்குரிய விநியோகஸ்த்தராக நாம் திகழ்கிறோம்" என்றார்.

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனியின் உள்நாட்டு உற்பத்தி விநியோக பிரிவின் விநியோக செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் சாந்த குலரட்ன கருத்து தெரிவிக்கையில்,"எமது விநியோக வலையமைப்பின் விஸ்தரிப்புக்கான வாய்ப்பு அதிகளவு காணப்படுவதுடன், அதன் மூலம் இலங்கைச் சந்தையில் எமது உயர் தரம் வாய்ந்த ஹார்ட்வெயார் தயாரிப்புகளை விநியோகிக்கக்கூடிய தன்மையும் அதிகரித்துக் காணப்படுகிறது. புதுவருடத்தில், இந்த சேவைகளின் விஸ்தரிப்பில் எதிர் கொள்ளும் சவால்களை சமாளிப்பது தொடர்பில்கவனம்செலுத்தவுள்ளோம்".

ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனியின் உள்நாட்டு உற்பத்தி விநியோக பிரிவின் விற்பனை செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி துமிந்த பெரேரா கருத்து தெரிவிக்கையில்,"2015 ஆம் ஆண்டில் சிறப்பான முறையில் தமது பங்களிப்பை வழங்கியிருந்த விற்பனையாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நாடு முழுவதையும் சேர்ந்த அர்ப்பணிப்பான விற்பனை அணியினருக்கும் எனது வாழ்த்துக்கள் சேரும். நாம் இதுவரையில் எய்தியிருந்த சிறந்த விற்பனை பெறுபேறுகளை பதிவு செய்வதற்கு உங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. இது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்றார்.




# ஒவ்வொரு ஸ்மாட் தொலைபேசியிலும் டயலொக் தொலைக்காட்சி

எந்த நேரத்திலும் எங்கிருந்தவாறும் எந்தவொரு கைத்தொலைபேசி வலையமைப்பின் ஊடாகவும் டயலொக் தொலைக்காட்சி அலைவரிசைகளை கண்டுகளிக்கும் வசதி

இலங்கையின் முதன்மையான, கட்டணம் செலுத்தும் டிஜிட்டல் தொலைக்காட்சி அலைவரிசையாக திகழும் டயலொக் டெலிவிசன் ஆனது 'Dialog TV GO' என்ற கையடக்க தொலைபேசி பிரயோக மென்பொருளை அறிமுகப்படுத்தி யதன் மூலம் தன்னுடைய சேவை வழங்கலில் திடீரென பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.



டயலொக் டெலிவிசன் வாடிக்கையாளர்கள் தமது ஸ்மார்ட்போன் கைத்தொலைபேசிகளை பயன்படுத்தி மிகச் சிறந்த தரத்திலான களிப்பூட்டல் அலைவரிசைகளை கண்டுகளிக்கக் கூடிய வசதிவாய்ப்பை இந்த மொபைல் பிரயோக மென்பொருள்வழங்குகின்றது. Dialog TV GO சேவையானது எவ்வேளையிலும் எந்த இடத்தில் இருந்தாலும் களிப்பூட்டலை வழங்கும். அதன்படி வாடிக்கையாளர்கள் தமது கையிலுள்ள ஸ்மார்ட் தொடர்பு சாதன ங்களின் ஊடாக 42 சர்வதேச அலை வரிசைகள் மற்றும் உள்நாட்டு அலைவரிசைகளை பார்க்கக்கூடியதாக இருக்கும்.

இந்த பிரயோக மென்பொருளில் உள்ளடங்கியுள்ள அலைவரிசைகள் குறித்த வாடிக்கையாளர் தற்போது பயன்படுத்துகின்ற டயலொக் டெலிவிசன் இணைப்புப் பொதியுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கும் வேளையில், நேரடி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கக் கூடிய ஒரு வசதியை இந்த மொபைல்பிரயோக மென பொருள அதன் பயன்படுத்துனர்களுக்கு வழங்கும். 'Dialog TV GO' ஆனது டயலொக் டெலிவிசன் சந்தா வாடிக்கையாளர்களுக்கே பிரத்தியேகமாக கிடைக்கக் கூடியதாக காணப்படுகின்றது.

ஆனாலும், இலங்கையிலுள்ள எந்தவொரு கையடக்கத் தொலைபேசி வலையமைப்பில் இருந்தும் இச்சேவையை அணுகிப்பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்மூலம் தொலைக்காட்சி பார்ப்போர் 2 மணித்தியாலம் வரையான நிகழ்ச்சிகளை "பின்னோக்கி நகர்த்தி" (Rewind up) பார்வையிடவும், 72 மணித்தியாலம் வரையான முன்னைய நிகழ்ச்சிகளை தேடிப் பிடித்துக்கொள்ளவும்(Rewind up) இது இடமளிக்கின்றது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,401.32 | 6,422.65 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,365.66 | 3,395.84⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,559.527

**உயர்வடைந்தபங்குகள்(ரூ.)** ஈ–சனலிங்(11.60), ரெஸ் அக்ரோ(1.90) இன்டஸ்ரியல் அஸ்ப(348.00), சிஜஎப்எல்(0.70), எல்பிட்டிய(22.50),

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்எம்பி லீசிங்(x)(0.30), புளூ டைமன்ட்(x)(0.50), ஆர்பிகோ(179.00), பிறின்ட் கெயர்(36.40), எஸ்எம்பி லீசிங்(0.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# உலக ஏற்றுமதி அ/தி மாநாடு இலங்கையில்

உலகளாவிய ரீதியில் நடைபெறும் 16 ஆவது உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாட்டினை இம்முறை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் சர்வதேச வர்த்தக மையம் என்பன இணைந்து "வெற்றிக்கான வர்த்தகம் : இணைப்பு, போட்டி, மாற்றம்" என்ற தலைப்பின் கீழ் இம் மாநாட்டினை நடத்த உத்தேசித்துள்ளனர்.

சர்வதேச வர்த்தகம் தொடர்பில் இந்நாட்டில் காணப்படும் திறந்த தன்மையினையும் அதற்காக காணப்படும் உகந்த சூழலினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு இம்மாநாடு வழிவகுக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.19 | 147.00 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 204.98 | 212.29 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.07 | 167.51 |
| சுவிஸ் பிராங் | 146.30 | 152.43 |
| கனேடிய டொலர் | 112.17 | 116.86 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.35 | 115.51 |
| சிங்கப்பூர் டொலர் | 105.96 | 110.01 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

146

## “மதுரை வீரன்” மூலம் வசூல் சக்ரவர்த்தி ஆனார் எம்.ஜி.ஆர்

...அவனுடைய ஒரு கையும் காலும் துண்டிக்கப்படுகின்றன.

அவன் இருக்கும் இடத்துக்கு பொம்மியும் வெள்ளையம்மாளும் ஓடி அவனுடன் உயிர் துடிக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் காலம் காலமாக மதுரை வீரனை தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். மதுரை வீரன் கதை ஏற்கனவே வி.ஏ. செல்லப்பா டி.பி. ராஜலட்சுமி நடித்து 1939 இல் படமாக வெளிவந்து வெற்றி பெற்றது.

எனினும் எம்.ஜி. ஆர். நடித்த மதுரைவீரன் 13.04. 1956 இல் வெளிவந்து பல ஊர் ளில் 25 வாரங்க ளுக்கு மேல் ஓடி வெற்றி விழா கண்டு வசூலில் புரட்சி செய்தது. குறிப்பாக மதுரையில் இமாலய வெற்றி பெற்றது.

### உரசல்

படம் ரிலீஸ் ஆவதற்கு முன் பட அதிபர் லேனா செட்டியாருக்கும் எம்.ஜி. ஆருக்கும் கருத்து வேற்று மை ஏற்பட்டது.

உடுமலை நாராயணகவி எழுதிய பார் கடல் அலை மேலே என்ற பக்தி பாடல் இப்படத்தில் இடம் பெற்றிருந்தது. அந்தப் பாடலுக்கு பத்மினி நடனம் ஆடியிருந்தார்.

தி.மு.கழகத்தில் சேர்ந்து விட்ட காரணத்தால் இப் பாடல் தன் கொள்கைக்கு முரண்பட்டது என்று எம்.ஜி.ஆர். கருதினார். எனவே பாடல் காட்சியை நீக்கி விடும்படி பட அதிபரிடம் எம்.ஜி. ஆர்.வற்புறுத்தினார்.

பாடலைவிட பத்மினியின் நடனம் அருமையாக அமைந்திருந்தது. அதை நீக்கிவிட பட அதிபர் லேன செட்டியாருக்கு மனமில்லை. எம்.ஜி.



ஆர். எதிர்ப்பை மீறி படத்தை வெளியிடவும் விரும்பவில்லை. எனவே அவர் ஒரு யுக்தி செய்தார். நடனக் காட்சியை மட்டும் தனியாக வெட்டி எடுத்தார். தனியாக செென்சார் சர்டிபிகேட் வாங்கினார் இடைவேளை முடிந்ததும் தனியாக இந்த நடனக்காட்சியைத் திரையிட்டு நிலைமையை சாமர்த்தியமாக சமாளித்தார்.

### ரசிகர் மன்றம்

மதுரை வீரன் வெற்றியைத் தொடர்ந்து எம்.ஜி. ஆருக்கு ஒவ்வொரு ஊரிலும் ரசிகர் மன்றங்கள் தோன்றின.

ஏற்கனவே மிக வேகமாக வளர்ந்து கொண்டிருந்த தி.மு.கழகத்தில் சக்தி வாய்ந்த தலைவராக எம்.ஜி.ஆர். உருவாகத் தொடங்கினார்.

எம்.ஜி.ஆரை வைத்துப் படம் எடுத்தால் படம் தோல்வி அடையாது லாபம் கிடைப்பது நிச்சயம் என்ற எண்ணத்தை பட அதிபர்களிடையே மதுரை வீரன் ஏற்படுத்தியது. அதனால் அவரை எடுத்து படம் எடுக்க அதிபர்கள் போட்டி போட்டனர். கால் ஷீட் வாங்க எம்.ஜி.ஆர். வீட்டில் பெரும் கூட்டம்!

நல்ல கதை, நல்ல தயாரிப்பாளர், போதிய பணவசதி, இவற்றையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்துதான் படங்களை எம்.ஜி.ஆர்.ஒப்புக் கொண்டார்.

### தேவரின் முதல் படம்

எம்.ஜி.ஆருக்கும் சாண்டே சின்னப்ப தேவருக்கும் ராஜகுமாரி காலத்தில் இருந்தே நட்புறவு உண்டு.

எம்.ஜி. ஆருடன் சண்டை போடும் காட்சிகள் பலவற்றில் தேவர் நடித்திருக்கிறார்.

அவர் தேவர் பிலிம்ஸ் என்ற படக்கம்பனியைத் தொடங்கினார். இந்தக் கம்பனியின் முதல் படம் தாய்க்குப்பின் தாரம். இதில் நடிக்க வேண்டும் என்று எம்.ஜி. ஆரிடம் தேவர் கேட்டுக் கொண்டார்.

நண்பருக்கு உதவ எம்.ஜி.ஆர். மகிழ்ச்சி யுடன் சம்மதித்தார்.

இப் படத்துக்கு எம்.ஜி. ஆருக்கு பானுமதி ஜோடி பானுமதி, மற்றும் டி.எஸ். பாலையா, பி.கண்ணாம்பா ஆகியோரும் நடித்தனர்.

சின்னப்ப தேவரின் தம்பி எம்.ஏ.திருமுகம் ஜுபிடர் பிக்சர்சில் எடிட்டராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர், மனோகரா படத்திற்கும் எடிட்டராகப் பணியாற்றி புகழ் பெற்றார். தாய்க்குப்பின் தாரம் டைரக்ஷன் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார் தேவர்.

மதுரை வீரன் வெளிவந்து 5 மாதங்களுக்குப்பின் தாய்க்குப்பின் தாரம் வெளிவந்து வெற்றிப்படமாக அமைந்தது.

(தொடரும்)

# இந்திய சார்பு ரணில் அரசுடன் சீனா எப்படி நெருங்கியது?



(23 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு மற்றும் ஆசியா, ஆபிரிக்கா போன்றவற்றுக்கு அப்பால் உள்ள நாடுகளுடனும் தொடர்பைப் பேணுவதற்கான சீனாவின் கரையோரப் பட்டுப்பாதைத் திட்டததிற்கு இலங்கை ஆதரவாக உள்ளது.

இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கட்டுமானத் திட்டங்கள், அம்பாந்தோட்டை மற்றும் மத்தல விமான நிலையத் திட்டங்கள் ஆகியன போலவே தற்போது கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தையும் தொடருமாறு கூறுவதற்காகவே ரணில் சீனாவிறகுப் பயணம் செய்ததாக சீனா கருதுகிறது. இந்திய மாக்கடலில் இலங்கையன் கேந்திர முக்கியத்துவமே சீனாவின் இலங்கை நோக்கிய பயணத்தின் நீண்டகால நோக்காகும்.

‘தறபோது பாகிஸதானில் சீனாவால் முன்னெடுக்கப்படும் கட்டுமானத் திட்டங்களானது சீனாவிற்கு உறுதியான தளமாக அமையாது. இந்திய மாக்கடலில் தனது பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனாவிற்கு இலங்கை மிகவும் முக்கியமானதாகும். இது அண்மையிலுள்ள கடல்சார் மையங்களுக்கான பாதுகாப்பு உறுதிப்பாடுகளை மட்டும் வழங்கவில்லை. இதன் மூலம் 21ம் நூற்றாண்டிற்கான கரையோரப் பட்டுப்பாதைத் திட்டமும் விரிவுபடுத்தப்படும்’ என ரணில் சீனாவிற்கான தனது பயணத்தை மேற்கொண்ட தினமன்று, சீனாவின் அரச ஊடகமான குளோபல் ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கை பிரதமரின் சீனாவிற்கான பயணததின் இறுதியில், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது மகிந்த ஆட்சிக்காலத்தில் இருந்த நிலைக்கு மீளத் திரும்பி விட்டது என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் சூழலைப் பாதிக்கின்ற எந்தவொரு திட்டததையும் சீனா மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கபபட மாட்டாது எனவும், இந்தியாவுடன் இணைந்து இலங்கை பாலங்களை அமைக்கும் என ரணில் தனது தேர்தல் பரப்புரையின் போது தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் உட்பட சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளுடன் தொடர்பைப் பேணுவதன் மூலம் தனது பிராந்தியச் செல்வாக்கை மீளவும் நிலைநிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே தற்போதைய இந்திய மத்திய அரசாங்கத்தின் கோட்பாடாகும். இந்திய மத்திய அரசாங்கத்தின் ‘அயல் நாடுகளுடன் முதலில் உறவைப் பேணுதல்’ என்கின்ற முயற்சியானது இன்னமும் முழுமையாக்கப்படவில்லை.

அத்துடன் பல பதாண்டுகளாகத் தொடரும் எல்லைப் பிரச்சினைகளைக்கையாளும் முறைமையும் இன்னமும் மாற்றமுறவில்லை.

தனது நீண்டகால நோக்கை அடைந்து கொள்வதில் ஏற்படும் இடர்களைக் களையும் சீனாவானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் நிலைபெற்று நிற்பதறகான வெளியுறவுக் கோட்பாடுகளை இந்தியா வரையறுக்க வேண்டும். இலங்கை மற்றும் இந்தியாவை இணைக்கும் பாலத்தை அமைப்பதற்காக 2000ம் ஆண்டில் ரணில் விக்கிரமசிங்கவால பரிந்துரைக்கப்பட்டது.

சீனாவுடனான தனது உறவை சமநிலைப் படுத்தும் அதேவேளையில், இலங்கையானது பொருளாதார, தொழிநுட்ப ஒருங்கிணைப்பு உடன்பாடுகளை மிக அதிகளவில் இந்தியாவுடன் மேற்கொள்ள வேண்டும். பாக்கு நீரிணையில் நிலவும் மீன்பிடி விவ காரம் தீர்க்கப்பட வேண டும். கடல் சார் பாது காப்பை வலுப்படுத்து வதற்கு இந்தியா, இலங் கை மற்றும் மாலைதீவு ஆகிய முத்தரப்பு பாதுகாப்பு உடன் படிக்கையை மேலும் பலப்படுத்தப்பட வேண்டிய தேவையுள்ளது.

பூகோள-மூலோபாயம் தொடர்பில் முக்கியத்துவம் பெறும் இந்திய மாக்கடல் நோக்கிய சீனாவின் நகர்வானது கவனத்திற்கு கொள்ளபபட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

(முற்றும்)

நீங்கள் புதிதாகக் கற்கும் ஒவ்வொரு அற மொழியும் உங்களுக்கு ஒரு புதிய ஆன்மா போன்றது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அறக் கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துரையுங்கள்

இந்திய தேசபிதா மகாத்மா காந்தியின் சத்திய சோதனை என்ற நூல் ஒரு காலத்தில் பலரின் வாசிப்புக்கு உரியது.

மோகனதாஸ் என்ற சிறுவன் எப்படி மகாத்மா காந்தியாக இந்த உலகத்துக்கு தன்னை அடையாளப்படுத்துகிறார் என்பதை அறிவதற்கு சத்திய சோதனையை வாசிப்பதுதான் ஒரே வழி.

தன் வாழ்நாளில் தான் செய்த தவறான காரியங்களை எல்லாம் மகாத்மா காந்தி சத்தியசோதனையில் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

தவறுகளை உணர்ந்து திருந்துகின்றபோதே மனிதன் மகாத்மாவாகின்றான் என்ற உண்மையின் சாட்சியம்தான் சத்தியசோதனை.

எனினும் இன்றைய சமகாலத்தில் மாணவர்கள் சத்தியசோதனை என்ற காந்தியின் சுயசரித நூலை வாசிப்பதற்கான சந்தர்ப்பமே இல்லை எனலாம்.

மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது என்பதற்கு அப்பால், வாசிப்பதற்கான நேரம் இல்லை என்பதுதான் முக்கியமான காரணமாகும்.

பாடசாலை, பின்னர் தனியார் கல்வி நிறுவனம், பயிற்சி வேலைகள் இப்படியே மாணவர்கள் மிகப் பெரியதொரு நெருக்கடிக்குள் அகப்பட்டுள்ளனர்.

கல்வி என்பது அழுத்தத்தின் மத்தியில் கற்றக் கூடியதொன்றல்ல. படிப்பு மிகவும் சுதந்திரமாக, விருப்பத்தோடு மேற்கொள்ளப்பட வேண்டியதொரு விடயம்.

இருந்தும் எங்கள் மண்ணில் படி... படி... என்ற பெற்றோரின் அழுத்தம்; பாடசாலையில் இடைவிடாத கற்றல் செயற்பாடு; ஓய்வுகொடுக்காத தனியார் கல்வி நிறுவனங்களின் போட்டிக் கலாசாரம் என அனைத்தும் சேர்ந்து இளம் பிஞ்சுகளின் மனங்களை வதை செய்து விடுகின்றன.

ஆலய வழிபாடு, விடுமுறைக் காலத்து ஓய்வு, உறவுகளைச் சந்தித்து குசலம் விசாரிக்கும் பண்பாடு, வெளியிடங்களுக்குச்சென்று அங்குள்ள இயற்கை அழகுகளைக் கண்டுகளித்து மகிழ்வுறும் மனநிலை எதுவுமே கிடைக்காத நிலையில்,

மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள அழுத்தம் எனும் சிறையை உடைத்து எறிய முற்படுகின்றனர்.

இந்த உண்மையின் வெளிப்பாடு ஒட்டுமொத்த மாணவர் சமூகத்தையும் சீரழிக்கக்கூடியதாக மாற்றமுறுகின்றது. இத்தகைய ஆபத்தான நிலைமையில் இருக்கக் கூடிய எங்கள் மாணவர் சமூகத்தை காப்பாற்றுவது எங்களின் கடமை.

மாணவர்கள் தவறான பாதையில் செல்கின்றனர் என்றால் அதற்கு அந்த மாணவர்களோடு பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சகபாடிகள், கல்வித் திணைக்களங்கள், ஊடகங்கள், பொது அமைப்புகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்கள் சமூகமும் ஏதோ ஒரு வகையில் காரணமாகின்றன என்ற உண்மையை நாம் மறந்துவிடலாகாது.

எனவே, கல்வித் திட்டம்; பாடவிதானம் என்பவற்றுக்கு அப்பால், மாணவர்களை வழிப்படுத்துவது தொடர்பில் எங்கள் மாணவர்களுக்கு பொருத்தமான நடைமுறைகளை அறிமுகப்படுத்தி அதனை அமுலாக்குவது தொடர்பில் அந்தந்த வலயக் கல்வித்திணைக்களங்கள் கூடி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.

இத்தகையதொரு முடிவில் அறக்கருத்துக்களை போதிப்பது; இறைவழிபாட்டில் நம்பிக்கை கொள்ளச் செய்வது; திருக்குறள் எனும் அறநூலை விளக்குவது; மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அன்னை திரேசா, டாக்டர் அப்துல் கலாம் போன்ற உத்தமர்களின் வாழ்வியலை கதையாக எடுத்துரைப்பது என்ற விடயங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது எங்கள் மாணவச் செல்வங்களை வழிப்படுத்துவது சுலபமாகி விடும்.

இதைச் செய்வது-அவசரமும் அவசியமுமாகும்.

## சு.கவைப் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

எத்தகைய தடைகள், கஷ்டங்கள் வந்தபோதும் அவற்றைத் தாங்கிக்கொண்டு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஒரு பலமான கட்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கட்சியின் தலைமைத்துவத்தை தான் பலவந்தமாகவன்றி எல்லோருடைய விருப்பத்துடனேயே பெற்றுக்கொண்டதாகவும், கட்சியில் சீர்திருத்தங்களைச் செய்து அதனை முன்கொண்டு செல்கையில் பல்வேறு தடைகள் முன்வைக்கப்படுவதாகவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பெரிதும் விரும்பும் தான் அத்தடைகளுக்கு முகம்கொடுக்கத் தயாராகவிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் அம்பலாங்கொடை தர்மாசோக மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற அம்பலாங்கொடைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார். (இ-5)

## நாடு பூராகவும் நடமாடும் பொலிஸ் சேவை- பூஜித

நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங்களில் மாதத்திற்கு ஒருமுறை நடமாடும் பொலிஸ் தொலைபேசி சேவை முறையினை கிராம நகர மக்களை நேரடியாக அணுகுவதற்காக அமுல்படுத்தவுள்ளதாக புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஒரு பொலிஸ் தொலைபேசி சேவை முடிவடையும் நேரத்தில் நாட்டில் இன்னொரு பொலிஸ் தொலைபேசி சேவை ஆரம்பிக்கும் என்றும் மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் பகுதியில் சமயம், விளையாட்டு, கல்வி, சுகாதாரம், சிரமதானம் மற்றும் கலாசார நிகழ்வுகளுடன் தொடர்புடைய சங்கங்களுடன் இணைந்து செயற்பட பொலிஸ் நிலையங்கள் உறுதுணையாய் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும்பிரதேச உப பொலிஸ்மா அதிபர் உதவியுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் கிராமத்துக்கும் பொலிஸாருக்கும் இடையிலாக நல்லுறவு கட்டியெழுப்பப்படும். இந்நிகழ்வு கட்டாயமாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

எல்லா பொலிஸ் நிலையங்களிலும் தொண்டர் ஆலோசனை குழு அமைக்கும் அதேநேரத்தில் அங்கு பிரதேச வைத்தியர், சட்டத்தரணிகள் போன்ற உயர் தொழில்களில் உள்ள அதிகாரிகளையும் ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-5)

## அம்புலன்ஸ் சேவை இடைநிறுத்தம்; நோயாளர்கள் பெரும் திண்டாட்டம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு முள்ளியான் வைத்தியசாலைக்குரிய நோயாளர் காவு வண்டியின் (அம்புலன்ஸ்) சேவையானது கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இல்லையென அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, ஆழியவளை தொடக்கம் மூக்கறுப்பு வரையான சுமார் 7 கிராம மக்களின் உடனடி வைத்தியத் தேவைகளை நிறைவு செய்வதற்கான வைத்தியசாலையாக முள்ளியான் வைத்தியசாலை விளங்குகிறது.

இங்கே கிழமை நாட்களில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வெளிநோயாளர் பிரிவும் மற்றும் குழந்தை, கர்ப்பிணிகளுக்கான கிளினிக்கும் இவ்வைத்தியசாலையில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் மேலதிக சிகிச்சைக்காக இங்குள்ள நோயாளர் காவு வண்டி மூலமாக மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மந்திகை மற்றும் யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. தற்போது ஒரு மாத காலத்திற்கு மேலாக முள்ளியான் வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் இப்பிரதேச மக்கள் சொல்லொணாதுன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இரவு வேளைகளில் முள்ளியான் வைத்தியசாலையைச் சூழவுள்ள கிராமங்களிலிருந்து நோயாளர் காவு வண்டியின் சேவையைப் பெற்றுக்கொள்ள மக்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றபோது தற்போது மருதங்கேணி வைத்தியசாலையில் இருந்தே நோயாளர் காவு வண்டியின் சேவை இடம்பெற்று வருகின்றது எனவும் இவ்வாறு இடம் பெறுகின்றசேவை சுமார் ஒரு மணித்தியாலயத்தின் பின்னரே கிடைக்கப் பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-64)

## புகழுக்காக அலையும் மகிந்த, டிலான்-ரணில்

அமைச்சர்களான மகிந்த அமரவீர மற்றும் டிலான் பெரேரா ஆகியோர் தம்மைப் பிரபலப்படுத்தி புகழ் பெறும் போதையில் அலைந்து கொண்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விமர்சித்துள்ளார்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த அரசியல் வாதிகள் ஆகியோர் மே தினம் குறித்த கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலர், டிலான் பெரேரா மற்றும் மகிந்த அமரவீர ஆகியோரின் நடவடிக்கைகள் குறித்து கடுமையான தொனியில் முறைப்பாடு ஒன்றை பிரதமரிடம் முன்வைத்துள்ளனர்.

"சேர், நீங்கள் சுதந்திரக் கட்சி மீண்டும் ஒன்றுபட்டு வலுப்பெற வேண்டும் என்று நினைக்கின்றீர்கள். ஆனால டிலானும், அமரவீரவும் இன்னும் சில மாதங்களில் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்று கூறித் திரிகின்றார்களே? அது தவறானது தானே.

ஏன் அவர்கள் அப்படி நடந்து கொள்கின்றார்கள்? என்று மூத்த அமைச்சர்கள் பிரதமரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், அவர்கள் இருவருக்கும் எதையாவது உளறி தாம் பிரபலம் பெற வேண்டும் என்ற புகழ் போதை தலைக்கு ஏறியுள்ளது. அதனால்தான் அவ்வாறு உளறித் திரிகின்றார்கள்.

நானும் ஜனாதிபதியும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்கின்றோம். அதன் காரணமாக இந்த அரசாங்கம் முழுமையாக ஐந்து வருடங்கள் பதவியில் இருக்கும்.

எனவே அவர்களின் கூற்றை பெரிதுபடுத்த வேண்டியதில்லை. அவர்கள் தமது நிலையறியாது உளறிக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் மூத்த அரசியல்வாதிகளை ஆறுதல்படுத்தியுள்ளார்.(இ-5)

## பக்தாத் நகரில் இரட்டை கார்க் குண்டு தாக்குதல்

### 12 பேர் உயிரிழப்பு

ஈராக் நாட்டின் தலைநகரான பக்தாத் நகரில் நிகழ்ந்த இரண்டு கார் குண்டு தாக்குதல்களில் 12 பேர் உயிரிழந்தனர்.

அல் -ஹுசைனியா மாவட்டத்தில் உள்ள பாதுகாப்புப்படை சோதனைச் சாவடியின் மீது நேற்று முன்தினம் மாலை முதலில் நடத்தப்பட்ட கார் குண்டு தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். அடுத்ததாக, அரப் அல்-ஜபவுர் பகுதியில் பேரீச் சம்பழ மரங்கள் மற்றும் பனை மரங்கள் நிறைநத பண்ணை அருகே இராணுவ வாகனங்கள் மீது நடத்தப்பட்ட இரண்டாவது கார் குண்டு வெடிப்பில் மேலும் மூன்று பேர் உயிரிழந்தனர்.

இவ்விரு தாக்குதல்களிலும் சுமார் 40 பேர் படுகாயம் அடைந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல்களுக்கு இது வரை எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்றுக் கொள்ளாத நிலையில், இப்பகுதிகளில் அடிக்கடி இது போன்ற அதிரடி தாக்குதல்களை நடத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது பாதுகாப்பு படையினருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. (இ-5)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### உயிரும் மனமும்



உலகில் பிறந்த எல்லா உயிர்களும் வாழ நினைக்கின்றன. மனிதனும் வாழ நினைக்கிறான். துன்பமில்லாத இன்பம் மட்டுமே நிறைந்த வாழ்க்கையை அவன் நாடுகிறான்.

வாழ்வின் நோக்கத்திற்கு முரண்பாடாக வாழ்வு அமையுமானால், அது துன்பம் தான் தரும். இயற்கையாகக் கிடைக்க வேண்டிய இன்பம் தடுக்கப்படுகிறது. வாழ்க்கையையும், வாழ்க்கையின் நோக்கத்தையும், அந்நோக்கத்திற்கேற்ப வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து கொள்வது தான் ஞானம். பொதுவாக, நாம் செய்யும் தவறுகள் நமக்குத் தெரிவதில்லை. பெரும்பாலும் பழக்கத்தின் காரணமாகவே தவறுகள் செய்யப்படுகின்றன. அதிலும் சூழ்நிலை நிர்ப்பந்தத்தால் செய்யப்படும் தவறுகளே மிகுதியாக உள்ளன. மனம் புலன் கவர்ச்சியிலேயே நிற்கும்போதும், சூழ்நிலைக் கவர்ச்சியிலேயே நிற்கும் போதும் பழக்கத்தின் அழுத்தத்தால் உந்தப்பட்டுச் செயலாற்றும்போதும் பெரும்பாலும் தவறுகள் தெரிவதில்லை.

இதனால் வந்த வேலை, பிறவியின் நோக்கம் மறந்து போகின்றன. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு-தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் முதலான அறுகுணங்கள் வளர்ந்து கொண்டே போகின்றன. இதன் விளைவாகப் பஞ்ச மகா பாதகங்கள் நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்க்கிறோம்.

தவறிழைப்பது மனம். இனித் தவறு செய்துவிடக் கூடாது எனத் தீர்மானிப்பதும் அதே மனம். தவறு செய்யாத வழியைத் தேர்ந்து ஒழுக வேண்டியதும் அதே மனமே.

# வடக்கின் சமர் உதைபந்தாட்டம்
# ஊரெழு றோயல் சம்பியன்






வடக்கின் சமர் உதைபந்தாட்ட தொடரில் வடமாகாண வல்லவன் பட்டத்தை சூடிக் கொண்டது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

வடக்கு மாகாணத்தின் 48 அணிகள் பங்குபற்றிய அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் உரும்பிராயில் 8.30 மணியளவில் மின்னொளியில் நடைபெற்றது.

நடைபெற்ற போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய றோயல் 02:01 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரரனாக றோயல் அணியின் நிதர்சனும் தொடராட்ட நாயகனாக விண்மீன் விளையாட்டுக் கழக டேமியனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)



## சிஞ்சா சகலதுறையிலும் கலக்க ஊரெழு றோயல் லயன்ஸ் வெற்றி

UNITED SPORTS POINT-PEDRO விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் கிரிக்கெட் போட்டியில் ஊரெழு றோயல் லயன்ஸ் அணி தனது முதலாவது போட்டியின் போது கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்கொண்டது. நாணய சுழற்சியில் வென்ற றோயல் அணி ஞானம்ஸ் அணியைதுடுப்பெடுத்தாடபணித்தது.

நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் ஞானம்ஸ் அணி 7 விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்குதுடுப்பெடுத்தாடியறோயல் அணி 5 விக்கெட் இழப்பிற்கு சிஞ்சாவின் அதிரடியால் 10 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்து துடுப்பாட்டத்தில் சிஞ்சா பத்து 6 ஓட்டங்கள் உட்பட 72 ஓட்டங்களையும் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார். (க)



## யாழில் முதல் முறையாக கடற்கரை உதைபந்தாட்ட போட்டி



யாழ்.மாவட்டத்திலேயே முதல் முறையாக வல்வையில் கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இது பரஞ்சோதி அப்பா மற்றும் சந்திரமோகன் அவர்களின் ஞாபகார்த்தமாக வல்வை விளையாட்டுக்கழகத்தினால் வல்வை உதய சூரியன் உல்லாச கடற்கரையில் நடத்தப்படுகின்றது. இச் சுற்றுப் போட்டியில் வல்வையைச் சேர்ந்த 7 கழகங்களில் இருந்து 12 அணிகள் பங்குபற்றுகின்றன. போட்டிகள் 23,24, 26,27 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

பிறேசில் நாட்டிலேயே அதிகமான கடற்கரை உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் நடைபெறுவது வழமை. கடற்கரை நகரான வல்வையிலும் அதேபோல் ஒரு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்துவதற்கு வல்வை உதயசூரியன் உல்லாச கடற்கரையில் உதயசூரியன் கழகத்தால் கடற்கரை உதைபந்தாட்ட மைதானம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மைதானத்திற்குரிய கோல் போஸ்ட் இங்கிலாந்தில் இருந்து வருகை தந்திருக்கும் செல்வன் நிர்மலன் அருணாசலம் உதயசூரியன் கழகத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (க)

## புலோலி இளைஞர் வி.க துடுப்பாட்ட சுற்றுப்பேட்டி

புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் நடைபெற்ற போட்டியில் முல்லை. MSK எதிர்த்து கரணவாய் RCC மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற RCC துடுப்பெடுத்தாடியது 10 ஓவர் நிறைவில் 10 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய MSK அணி 2 விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்களை 4 ஓவர்களில் வெற்றியை பெற்றது.

அகிலன் 10 பந்துகளை எதிர்கொண்டு 32 ஓட்டங்களை பெற்றார். ஆட்ட நாயகனாக பிரசாத் தெரிவானார். (க)



# சீனாவுடனான நெருக்கத்தை ஆராய ரணிலுக்கு புதுடில்லி அழைப்பு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்தியாவின் அழைப்பின் பேரில் புதுடில்லி செல்லும் பிரதமர் ரணில் வக்கிரமசிங்க அங்கு இரண்டு நாட்கள் தங்கியிருக்கவுள்ளார்.

இவருடன் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனப் பயணத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காகவே அவரைப் புதுடில்லிக்கு வருமாறு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்கு அனுமதி வழங்கியமை, கடன்களுக்காக பங்குகளை விற்பனை செய்வதற்கான சீனாவின் யோசனை மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய சீன விஜயத்தின் போது காணப்பட்ட இணக்கப்பாடுகள் என்பன தொடர்பில் கவலை கொண்டுள்ள இந்தியா, இது தொடர்பிலான வபரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளது.

இந்நிலையிலேயே, இந்தியாவின் அழைப்பின் பேரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாத இறுதியில் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளார். (செ-12)

# காங்.சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது குறித்து பேச்சு

## அமைச்சர் ரிஷாட் தலைமையில் இன்று

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தலைமையில் இன்று காலை 11.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

25 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் உள்ள இத் துறைமுகத்தை மீள ஆரம்பிப்பதில் உள்ள சாத்தியப்பாடுகள் தொடர்பாக நடைபெறவுள்ள இம் முக்கிய கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை உறுப்பனர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு அழைப்பு விடுகப்பட்டுள்ளது. (செ-9)

# தந்தை செல்வாவின் 39ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 39 ஆவது நினைவுதின அஞ்சலி நிகழ்வும் நினைவுப்பேருரையும் நாளை 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா நினைவிட சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நினைவுப்பேருரையை றொறான்டோ பல்கலைக்கழக பேராசிரியர் வணபிதா கலாநிதி ஏ.ஜே.சந்திரகாந்தன் நடத்தவுள்ளார். (செ-9)

# ரூ.525 மில்லியன் முதலீட்டில் பரந்தனில் இரசாயன தொழிற்சாலை

## ஆரம்பிக்கவுள்ளதாக ரிஷாட் தகவல்

ரூபாய் 525 மில்லியன் முதலீட்டில் பரந்தனில் இரசாயன தொழிற்சாலை ஆரம்பமாக இருப்பதாக கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் தெரிவித்தார்.

நேற்றையதினம் பரந்தனில் அமைந்துள்ள இரசாயன தொழிற்சாலைக்கு விஜயத்தை மேற்கொண்ட கைத்தொழில் மற்றும் வணிகத் துறை அமைச்சர் ரிஷாட் பதியூதீன் ஊடக வியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசாங்கத்தின் தேசிய நல்லாட்சியிலே சமூக முன்னேற்றத்தோடு கூடிய அபிவிருத்தி என்ற பெயரிலே அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகிறது.

தனியார் முதலீட்டாளர்களையும் இணைத்துக்கொண்டு இந்த அரசவளங்களையும் ஏற்கெனவே இருக்கின்ற வளங்களையும் பயன்படுத்தி ஆரம்ப கைத்தொழில் சாலையை ஆரம்பிக்க இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, இவ் இடங்களிலே 2 ஆயிரம் மரக்கன்றுகளை டிசம்பர் மாதம் 31 திகதிக்கு முன்னர் நாட்டி இந்த சுற்றாடலையும் பாதுகாப்பதற்கான முயற்சியையும் மேற்கொண்டுள்ளோம்' எனவும் தெரிவித்தார். (செ)

# கரப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 5பேர் கொண்ட கரப்பந்தாட்டத்துக்கு (Over Game) விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியானது எதிர்வரும் மாதம் 8-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக்கழகத்திடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங் கள் 077 387 1549, 076 618 0886 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (கு)

# யாழில் கொள்ளையில் ஈடு...

கடந்த 22ஆம் திகதி யாழ் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவுபதில் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றையடுத்து இக் கொள்ளை கூட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் கொள்ளையிட்ட பொருளொன்றை வேறொருவருக்கு விற்பதற்காக முயற்சித்த போதே கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சம்பவத்துடன் தொடர்புபட்ட ஓர் பெண் உட்பட மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி குருநகரை சேர்ந்த 19 வயதுடைய இளைஞர். கொழும்புத் துறையை சேர்ந்த 20 வயதுடைய இளைஞர்மற்றும்யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஆகிய மூவருமே மேலதிகமாக கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் கடந்த 15ஆம் திகதி சிலலாலை பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து 12பவுண் நகைகளையும் இரண்டு விலையுயர்ந்த கையடக்க தொலைபேசிகளையும் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்களையும் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள் இரண்டையும் மடிக் கணணி மற்றும் கையடக்க தொலைபேசிகளையும் திருடியுள்ளமையும் அதனைவிட வேறு இடங்களில் இருந்தும் கைதொலைபேசிகளை திருடியமையும் விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக் கொள்ளை குழுவால் கொளளையடிக்கப்படுகின்ற நகைகளை கைது செய்யப்பட்ட பெண்ணே வங்கிகளில் அடகு வைத்து கொடுப்பதாகவும் அத்துடன் கொள்ளை சமபவங்களுக்கு இவர் உடந்தையாக செயற்பட்டுள்ளமையும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸ் அதிகாரி எஸ்.சிறிகஜன் தெரிவித்துள்ளார். (செ-4)

# பனை மரத்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

பனை மரத்திலிருந்து தவறி வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் 3ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த சுரேஷ்குமார் வராகன் (வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ தினம் இரவு வேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட இராணுவத்தினரின் இசை நிகழ்வில் பிரஸ்தாப இளைஞன் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் வழியில் காணப்பட்ட பனை மரம் ஒன்றில் ஏறியதாகவும் இதன் போது அவர் தவறிவீழ்ந்து உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இளைஞரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-2,28)

# சாரதி தாக்கப்பட்டார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மருத்துவமனைக்கு தனது ஆட்டோவில் நோயாளியை ஏற்றிச் சென்று இறக்கிவிட்டு திரும்பிச் சென்றுகொண்டிருந்த ஆட்டோ ஓட்டுநரை மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள ஆட்டோ தரிப்பிடத்தில் தரித்து நின்று ஆட்டோ ஓட்டும் நபர் ஒருவரும் அவருடன் கூடச் சென்றவர்களும் கரடிப் போக்குச் சந்தியில் வைத்து வழிமறித்து தாக்கியதில் பலத்த காயங்களுக்குள்ளான ஜீவா (வயது-38) என்பவர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. (செ-4)

# சித்திரவதை...

தெரிவித்த அவர், அங்கு சித்திரவதைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வெற்றிபெற்று ஆட்சி பீடம் ஏறிய பின்னரும் சித்திரவதைகள தொடர்பில் இலங்கையிலிருந்து 8 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குறித்த 8 பேரையும் தடுத்து வைத்தும், சித்திரவதை செய்திருப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அபாயகரமான மற்றும் சூடேற்றப்பட்ட உலோகக் கம்பிகளைப் பயன்படுத்தி இந்த சித்திரவதைகள் இடம்பெற்றிருப்பதாகவும், பாலியல் சித்திரவதைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதிலிருந்து உயிர்தப்பியவர்கள் எங்களிடம் கூறியுள்ளனர்.

சுகாதார பயிற்சியாளர்கள், மனநல நிபுணர்கள் உட்பட தேசிய சுகாதார அல்லது வழக்கறிஞர்கள் ஆகியோரால் தங்களுக்கு வழங்கப்பட்ட காயங்கள், தடயவியல் ஆவணங்களை வைத்து குறித்த 8 பேரும் பிரித்தானியாவிற்கு வந்து புகலிடம் கோரி விணணப்பித்துள்ள நிலையில் இவர்களில் ஒருவருக்கு பிரித்தானிய அரசாங்கம் பாதுகாப்பு அளித்து வருகின்றது.

இவ்வாறான சம்பவங்களைப் பார்க்கும்போது மகந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் செயற்பாடுகளின் தொடர்ச்சியை புதிய அரசாங்கமும் பின்பற்றுவதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே இவ்வாறான சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில் மனித உரிமை மீறல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வருவது புதிய அரசாங்கத்தின் கடமையாகும்.

அதேவேளை அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிபுணர்கள்குழு திருகோணமலைக்குச் சென்று சித்திரவதை முகாம் பகுதிக்கும் சென்று ஆய்வுகளை நடத்தியிருந்தது. அதன் பின்னர் அவர்கள் தொடர்ந்தும் இலங்கை மீதான அவதானிப்புக்களை நடத்திவருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த ஐ.நா நிபுணர் குழுவினது விஜயத்தையும், அவதானிப்புக்களையும் இலங்கை அரசாங்கம் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு பாதிக்கப்பட்ட தரப்பினருககு தீர்வு வழங்க வேண்டும்.

இலங்கையில் சில சித்திரவதை முகாம்கள் இன்னும் செயற்பட்டே வருகின்றன். வவுனியாவில் இராணுவத்தினரால் ஜோசப் முகாம் என்ற பெயரில் சித்திரவதை முகாமின் செயற்பாடு தொடர்கின்றது. அதேபோல கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் 4 ஆவது மாடியிலும் தொடர்சசியாக சித்திரவதைகள் அரங்கேறியே வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (செ-12)

# சுவீடன் அமைச்சர்...

தினம் இலங்கையை வந்தடைந்தார்.

இன்றையதினம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமவீரவுடன் விசேட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

பின்னர் நாளை 26ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு காலை 9.00 மணிக்கு யாழ் மாவட்ட அரச அதிபர் மற்றும் சிவில சமூக பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் காலை 10.30 மணிக்கு வட மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரேயை சந்திப்பதுடன் 11.00 மணிக்கு வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் காலை 11.30 மணிக்கு நலன்புரி முகாமினையும் மீள்குடியேற்றப்பட்ட காணிகள் என்பவற்றையும் சென்று பார்வையிடவுள்ளார். (செ-9)

# வாள்களுடன் நின்ற இளை...

யில் நடமாடிய இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் குறித்த இடத்திற்கு அயல் பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழில் தற்போது குற்றச்செயல்கள் அதிகரித்து காணப்படும் நிலையில் பொலிஸாரது இவ்வாறன அதிரடி சம்பவங்களும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருந்த போதிலும் குற்றங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இது தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வாள் வெட்டுகுழுக்களுக்கு தலைமை தாங்குபவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (செ-4)

# ஆணொரு...

குறித்த நபரின் சடலத்தின் வாயில் இருந்து இரத்தங்கள் வெளிவந்திருக்கின்ற நிலையில் இது கொலையா அல்லது அவரது செயற்பாட்டால் மரணம் சம்பவித்ததா என்பது தொடரபில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சடலமாக மீட்கப்பட்டவர் புங்குடுதீவை சேர்ந்த விநாயகமூர்த்தி விநோதன் (வயது 29) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த பத்து வருடங்களாக இவர் அப்பகுதியில் பழைய பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாகவும் தமது விற்பனை நிலையத்திலேயே தங்கியிருந்ததாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து அறிய முடிகின்றது. (செ-12)

# இலங்கையுடன்...

தூதுவர் யி சியான்லியாங், சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்பாட்டைச் செய்து கொள்வது தொடர்பில் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில், இவ்விரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் இந்த உடன்பாடு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

பாரம்பரிய நட்புறவைக் கொண்ட இலங்கையுடன் விரைவில் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை செய்து கொள்ள வேண்டும் என்பதில் பீஜிங் ஆர்வமாக உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஐரோ.அமைச்ச...

தாகவும் இலங்கையின் கடற்றொழில் அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விவகாரம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை இலங்கை பிரதிநிதிகளுடன் செய்ம்மதி தொழில்நுட்பம் மூலம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இந்த ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் பரிந்துரைத்திருந்தது.

இந்நிலையில், இந்தப் பரிந்துரை தொடர்பாக 28 நாடுகளின் அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பின்னரே இலங்கை மீதான மீன் ஏற்றுமதி தடை நீக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையில், கடல்சார் உற்பத்திப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் அவசரப்பட்டு அறிவித்தமை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்திடம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடல்சார் விவகாரங்கள் மற்றும் மீன்பிடி தொடர்பான பணிப்பாளர் நாயகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையின் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் மீன்சார் உற்பத்திகள் சர்வதேச தர நியமங்களுக்கு உட்பட்ட வகையில் இல்லை எனத் தெரிவித்து இலங்கையின் கடல்சார் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிக்கு 2014ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்திருந்தது.

இந்தத் தடை 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வந்திருந்த நிலையில், அது நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# முஸ்லிம்...

கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையில் ஒரு பிரேரணையை முன்வைத்திருப்பதாக அறிகின்றோம். வடமாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு முதலமைச்சர், தமிழரசுக் கட்சி ஆகியோர் தங்களுக்கு என்ன தேவை என கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

ஆனால் மற்ற இனத்தவர்களுக்கு எதைக கொடுக்க வேண்டும் என சொல்வதற்கான உரிமை அவர்களுக்கு இல்லை. ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட பல ஆயுதக்குழுக்கள் தனிநாடு கேட்டு போராடினார்கள்.

அதன்பின்பு இந்தியாவுடன் இணைந்து வடகிழக்கு இணைக்கப்பட்டு பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் தருவதாக உறுதியளிக்கப்பட்டது. கிழக்கு மாகாண மக்களுடைய எந்தவொரு கருத்தும் பெறப்படாது வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டது.

அதன்பின் நீதிமன்றத்தின் ஊடாக வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டது. இன்று இந்த நிலையிலே ஒரு தீர்வை எவ்வாறு அடைவது என நாங்கள் மிக நீண்டநாட்களாக எமது கட்சியின் கூட்டங்களைக் கூட்டி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை வடகிழக்கில் அதிக உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அதேபோல் இதற்கு வெளியே அனுராதபுரம், கொழும்பு ஆகிய பகுதிகளிலும் பாராளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் நாங்கள் ஆராய்ந்து எமது தீர்வுத் திட்டத்தின் இறுதி நிலையை அடைந்திருக்கின்றோம். என்றாலும் இதை இன்னும் மெருகூட்டி மக்களிடத்திலும், ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், பாராளுமன்றம், அரசியலமைப்பு சபை ஆகியவற்றிடம் சமர்ப்பிக்க முன்னர் நாங்கள் சிறுபான்மை கட்சிகளோடு பேச இருக்கின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈபிடிபி, மனோ கணேசன் தலைமையிலான மலையக கூட்டமைப்பு, தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதே போல் இன்னும் இருக்கின்ற ஜேவிபி போன்ற சிறிய கட்சிகளுடன் பேசி தேர்தல் முறைகளில் சிறுபான்மை கட்சிகள், சிறுபான்மை சமூகம் என்பவற்றுக்கு எந்த பாதிப்பும் வராத வகையில் இருப்பதற்கு நாங்கள் கடுமையாக உழைப்போம்.

அதையும் மீறி எங்கள் மீது திணிக்கப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றத்திற்கு செல்லவும் தயாராகவுள்ளோம். அது மட்டுமல்லாமல் அரசியலமைப்பு மாற்றத்திலே ஒரு நியாயபூர்வமாக எல்லா இனமும், மதமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு ஒழுங்கான அரசியலமைப்புக்காக பூரண ஒத்துழைப்பைக் கொடுப்போம்.

வடக்கு மாகாண சபை எடுத்த எடுப்பில் தங்களுடைய தீர்வாக தங்களுக்கு என்ன வேண்டும் என சொல்லியிருக்கிறார்கள். கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இஸ்லாமியருக்கு அதைக் கொடுங்கள், மலையகத்தவர்களுக்கு இதைக் கொடுங்கள், அதேபோல் வேறு மாகாணத்தவருக்கு இதைக் கொடுங்கள் எனக் கூறுவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. அது நியாயமுமில்லை.

இந்த நாட்டில் வாழுகின்ற 10 வீதத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அழிவுற்றிருக்கிறார்கள், ஊனமுற்றிருக்கிறார்கள், இன்னும் காணாமல் போனவர்களாக இருக்கிறார்கள், வெளிநாடுகளில் இருந்து கஷ்டப்படுகிறார்கள்.

ஆகவே, அவர்களுக்காக நியாயமான கருத்தினை, தீர்வினை கோருக்கின்ற, முன்வைக்கின்ற பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் இந்த நாட்டில் 9.6 வீதத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு எதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற உரிமை இவர்களுக்கு இல்லை.

எனவே அவர்களுக்கு என்ன தேவை என்பதை அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எமது கட்சி உட்பட பல கட்சிகள் இருக்கின்றன. நாங்கள் அதைப் பார்த்துக் கொள்வோம் எனத் தெரிவித்தார். (செ-12)

# நிலாவரை...

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியைச் சேர்ந்தவரும் ஸ்ரீவல்லி புர ஆழ்வார் கோவில் மகாசபை யின் தலைவருமான சரவணமுத்து தேவதாசன் வயது (75) வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டு ள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் நிலாவரை கிணற்றில் குதித்த முதியவர், காணாமல் போயிருந்த நிலையில், அவரை தேடும் பணியில் இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டிருந்தனர்.

இரவுவரை அவரை இனங்காணாத நிலையில், திருகோணமலை கடற் படைத் தளத்தில் இருந்து கடற்படையின் நீர்மூழ்கி வீரர்கள் காங்கேசன்துறைக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

சுழியோடிகள், நீர்மூழ்கி வீரர்கள் என இரு பிரிவுகளாக தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் குறித்த முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவீன ஜீ.பீ.எஸ் கருவிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், சடலம் நீரின் 152 அடி ஆழத்தில் இருப்பது கண்டறியப்பட்டு, வீரர்களால் மீட்கப்பட்டு மேலே கொண்டு வரப்பட்டது.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,12,19)

# புலிகளின்...

இவர், விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதியாக இருந்து கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் 2013ஆம் ஆண்டு அவர் விடுதலையானார்.

அதன்பின்னர் திருமணம் செய்து தம் பிலுவில் பிரதேசத்தில் வாடகை வீட்டில் வசித்து வருவதுடன் விவசாயம் செய்து கொண்டு வந்தார்.

இந்நிலையில் மனைவி மட்டக்களப்புக்கு சென்ற நிலையில் தனிமையில் இருந்த போது நேற்றுக் காலை 8.30 மணியளவில் அவரது வீட்டிற்கு நீல நிற வான் ஒன்றில் வந்தவர்களால் அவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அவரது மனைவி சுதாராணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இது தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# தனித் தமிழீழம்...

வானால்தான் தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை அங்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்பதுதான் தனது அரசின் நிலைப்பாடு என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# ஐந்து விரல்...

இதனைக் கண்ட ஜனாதிபதி மைத்திரிபால, என்ன முதலமைச்சரே, எல்லா விரல்களிலும் மோதிரங்கள் மின்னுகின்றனவே? தங்கம் தானா? கழற்றுங்கள் பார்க்கலாம் என்று கேட்டவுடன் குறித்த முதலமைச்சர் அனைத்து மோதிரங்களையும் கழற்றி ஜனாதிபதி முன்னிலையில் காட்சிப்படுத்தியுள்ளார்.

அதிலிருந்து ஒரு மோதிரத்தை ஜனாதிபதி கையில் எடுத்துப் பார்த்துள்ளார்.

அதன் பின்னர் குறித்த முதலமைச்சரை நோக்கித் திரும்பிய ஜனாதிபதி, இவ்வாறு அனைத்து விரல்களிலும் மோதிரங்கள் போடுவது வர்த்தகர்களின் அடையாளம். நாங்கள் அரசியல்வாதிகள். எங்களுக்கு அநாவசிய ஆடம்பரங்கள் கூடாது. இதோ பார்த்தீர்களா? நானே இரண்டு மோதிரங்கள் தான் போட்டுக் கொண்டுள்ளேன் என்று இதமாக அறிவுரை கூறியுள்ளார்.

மிகவும் இதமான முறையிலும், நுட்பமாகவும் ஜனாதிபதி வழங்கிய அறிவுரை முதலமைச்சருக்கு மட்டுமன்றி அங்கிருந்த அனைவர் மனதையும் ஆழமாகக் கவர்ந்துள்ளது. (செ-12)


## தேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு (ரைப்பிங்), நிழற் பிரதி (போட்டோ கொப்பி) தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
(அண்மையில் உள்ளவர்கள், முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
பிரகாந்த் போட்டோ கொப்பி சென்ரர்
திருநெல்வேலி. T.P : 076 622 4473
(4277)



## அகவை 80இல் பிறந்தநாள் வாழ்த்து




இல.10,
பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

(இ)

வாழ்த்துவோர்:
சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



SIKARAM ACADEMY
Business • Hospitality • English

வேலையில்லாப் பிரச்சினை - வெளிநாட்டு விசா சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் சிகரம் தரும்
UK Certified கற்கைநெறிகள்



யாழ் - கொழும்பு நட்சத்திர ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
Diploma in Tourism & Hospitality Management

முன்னணி வர்த்தக, நிதி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
Diploma in Sales & Marketing Management

ஆங்கில மொழித் தேர்ச்சிக்கு சர்வதேச அங்கீகாரமிக்க சான்றிதழை வழங்கும்
Cambridge English Courses
KET - PET - FCE
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழில்தேடுவோருக்கானது

வெளிநாட்டு விசா பெற்றுக்கொள்ள அவசியமான புள்ளிகளைப் பெறும் உத்தரவாதத்துடன்
IELTS
STUDENT VISA - SPOUSE VISA
SKILLED MIGRATION ஏற்பாடுகளுடன்

GATE OPEN
May Intake

அனுமதிகளுக்கு:
077 36 16 798
021 222 0011

கற்கைநெறிகளில் இணையும் ஒவ்வொருவருக்கும்
100% வேலைவாய்ப்பு OR விசா உத்தரவாதம்

மேலதிக விபரங்களுக்கு
wwww.sikaram.lk

(சி-4427)

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.